# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.








புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 பங்குனித் திங்கள் 29-ம் நாள் (11—4 1965) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 8 | இதழ் 46


# தமிழிலும் அரசாங்க கணக்கு

## விபரங்கள் எழுதப்படும்

## இறைசேரியின் புதிய உத்தரவு

அரசாங்கத் திணைக்களம் அனைத்திலும் இம்முறை கணக்கு விவரங்கள் சிங்களத்தில் மட்டுமின்றி தமிழிலும் தயாரிக்குமாறு நிரந்தரச் செயலாளர்களுக்கும் திணைக்களங்களின் அதிபர்களுக்கும் திறைசேரி இம் மாதம் முதற் திகதி உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இது பற்றிய திறை சேரியின் சுற்றறிக்கை ஏற்கனவே வெளியாகிவிட்டதாகவும் அறியப்படுகிறது. இச் சுற்றறிக்கையின் 3-வது எண் உள்ள பகுதியில் காணப்படும் வாக்கியம் பின்வருமாறு:—

"கணக்கு விபரம் சிங்களத்திலும் தமிழிலும் தனித் தனியாக எழுதி அனுப்ப வேண்டும்".

திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தின் போது அரசாங்க திணைக்களங்களில் எல்லா அலுவல்களும் சிங்களத்திலேயே நடைபெற்றன என்பதும், மேற்கண்ட திறைசேரியின் உத்தரவு அந்த நடைமுறையில் ஒரு மாறுதலை ஏற்படுத்தியுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதிய நம்பிக்கை உதயமாகட்டும்

### மூதூர் முதல்வரின் 'ஈத்' தின வாழ்த்து

"இன்றைய தினத்தை உலக முஸ்லிம்கள் அகமும் முகமும் மலர வரவேற்கிறார்கள். இலங்கையில் இம்முறை இத் தினத்தை முஸ்லிம்களுடன் சேர்ந்து இந்துக்களும், பௌத்தர்களும் தங்கள் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். இப் பெரு நாளில் இந்நாட்டு மக்களின் உயர்ச்சிக்கு தேசிய அரசாங்கம் வழி கோலும் என நான் பிரார்த்திக்கிறேன்" என்று மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. எச். மு[illegible] அவர்கள் அனுப்பிய 'ஈத்' தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச் செய்தியில் அவர் கூறுவதாவது:

"ஈடும் இணையுமற்ற இத்தைத் தினத்தை உலக முஸ்லிமகள் முக மலர்ச்சியுடன் முகமன் கூறி வரவேற்கிறார்கள். இப் புனித தினத்தில் நமது சகோதரர்களான இந்துக்களும், பௌத்தர்களும் புதுவருடத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நாம் அனைவரும் சேர்ந்து இத் தினத்தைக்கொண்டாடுவது மேலும் சிறப்பாக அமைந்துள்ளது.

"வெவ்வேறு மதத்தினராயினும், பல இனத்தினர்-மதத்தவர், ஒரே இனத்தவர் போன்று பொலிவுவகையுடன் குதூகலமாகக் கொண்டாடும் இவ்வித நன்னாளை நானிலங் காண்பது மிக அரிது.



(9-ம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டியில் வேட்பாளர்கள் இருபதுபேருக்கும் வரவேற்பு

நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இருபது வேட்பாளர்களுக்கும் மூதவை உறுப்பினர்கள் இருவருக்கும் சேர்த்து ஒரு பகிரங்க வரவேற்பை இத்திங்கள் பத்தாம் நாள் சனிக்கிழமை நடாத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதிக் கிளைகள் கூட்டாக நடவடிக்கை எடுத்து வருகின்றன. சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும் இவ் வரவேற்புக்கு முன்னர் ஒரு மாபெரும் ஊர்வலம் மாலி

(9-ம் பக்கம் பார்க்க)

## இனக் கலவரத்துக்கு இடதுசாரிகள் திட்டம்

### தமிழர்களின் இல்லங்களில் சிலுவை பொறிக்கப்படுகிறது

நாட்டில் மீண்டும் ஒரு இனக்கலவரத்தைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் இடதுசாரிக் கட்சிகளும் சுதந்திரக் கட்சியினரும் இரகசிய நடவடிக்கைகளில் இப்பொழுது இறங்கியுள்ளார்கள் என்று நம்பகமான வட்டாரங்களில் இருந்து செய்திகள் கிடைத்துள்ளன. கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியாகும் சிங்களத் தினசரியான 'எதத' இவர்களின் முயற்சிக்கு உரிய முறையில் தூபமிட்டுக்கொண்டு வருகிறது. அதேநேரத்தில் தென்னிலங்கையில்உள்ள தமிழர்களின் வீடுகளில் பச்சை மையிலான சிலுவை அடையாளங்களும் பொறிக்கப்படுகின்றன.

'பௌத்த சிங்களவர்களுக்கே இந்நாடு சொந்தம்' என்ற கோசத்தை முன்வைத்து இவ்வினக் கிளர்ச்சியை இவர்கள் தூண்டிவருவதாகத் தெரிகிறது.

### பச்சைச் சிலுவை

நீண்டகாலத்தின் பின்னர் அமைச்சரவையில் ஒரு தமிழர் இடம்பெற்றமையினால் இந்நாட்டை ஐ. தே. கட்சி பௌத்தர்கள் அல்லாதாருக்கு விற்றுவிட்டதாகவும் இவர்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். எதிர்க்கட்சிச் சார்புள்ள பௌத்த பிக்குகள் திரு. திருச்செல்வத்தை அமைச்சரவையிலிருந்து நீக்கவேண்டுமென்ற ஒரு இயக்கத்தையும் ஆரம்பித்துள்ளார்கள். பௌத்த பிக்குகளின் இந்த இயக்கத்திற்கு பூரண ஆதரவு கொடுக்கும்படி சமசமாசக்கட்சியின் கிளைகளுக்கு தலைமைக் காரியாலயத்திலிருந்து ஓர் இரகசிய சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

தென்னிலங்கையிலுள்ள பௌத்தர்கள் அல்லாத இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களின் வீடுகளில் பச்சை மையினாலான சிலுவையடையாளம் பொறிக்கும் வேலையை இடதுசாரிகள் மேற்கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

### 1958-ல்

1958ம் ஆண்டு வகுப்புக் கலவரம் ஆரம்பமாவதற்கு

(9-ம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கியில் சதி

### அரசியல்வாதிகளின் திட்டத்துக்கு அதிகாரி ஆடுகிறாராம்

இலங்கை மத்திய வங்கியில் புதிய ஒரு சதி உருவாகி வருவதாக நம்பகமான செய்திகள் கூறுகின்றன ஐ தே. கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையிலான உடன்பாட்டை உடைத் தெறியும் நோக்கத்துடன் அண்மையில் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் ஒரு மூதிய அதிகாரி செயற்பட்டு வருகிறாராம். இவரின் முயற்சிக்கு பிறபோககுச் சக்திகளான சுதந்திரக் கட்சியினரும், இடதுசாரிகளும் துணை நிற்பதாகத் தெரிகிறது.

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் தமிழர்களுக்கு எவ்வளவு தூரம் இடர்ப்பாட்டை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் இடர்ப்பாட்டைக் கொடுப்பதற்கான முறையில் திட்டமிட்டு ஒரு அதிகாரி செயற்பட்டு வருகிறார் என்று தெரிகிறது. மத்திய வங்கியின் உள்துறை அலுவல்களில் [illegible] நடாத்த இந்த அதிகாரி ஒற்றைக் காலில் நிற்கிறாராம்.

விடுமுறை விண்ணப்பபடிவங்கள், இலவச பிரயாணச் சீட்டுப்படிவங்கள், பொதியைறப் படிவங்கள், மற்றும் உள்துறை அறிக்கைகள் அனைத்தையும் இவ்வாரமுதல் தனிச் சிங்களத்திலேயே இந்த அதிகாரி வழங்கி வருகிறாராம். இத

(9-ம் பக்கம் பார்க்க)

## இ. த. அ. க. பொதுச் சபை கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் இத்திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் 25, 2-ம் குறுக்குத் தெருவிலுள்ள கட்சிப் பணிமனையில் கூடுகிறது என்று கட்சியின் நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார். இக் கூட்டத்தில் தேர்தல் முடிவுகள் பற்றியும், அதைத் தொடர்ந்து காரிய சபை எடுத்த முடிவுகள் பற்றியும் ஆராயப்படும் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




"பனியேன் இளம் காற்றேன்? — உன்
பருவம் தரு அழகேன்? — என
முனிவேன் அவள் அயலில் — தன்
முறுவல் தனைத் தருவாள்!"

— சோமலிங்கம்

'வெள்ளைக்காரத் துரையின் மனைவி அந்த மதுப் போத்தலை எடுத்து கிளாசுக்குள் அளவோடு மதுவை ஊற்றி, சாயம் தடவிய தன் சிவந்த இதழ்களில் கிளாசைப் பொருத்தி மிக நாகரீகமான அந்த மதுவை உறிஞ்சிக் கொண்டாள். அவளுடைய இந்தச் செயலை அந்த வெள்ளைக்காரர் சிறிது பொருட்படுத்தியதாகவே இல்லை.

'கடகட' வென்று பேய்ச் சிரிப்புச் சிரித்து ஓய்ந்த துரை சிறிது நேரம் என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னார் 'நீங்கள் கணிப்பது போல் என்னுடைய மனைவி அழகானவள்தான். இவளைப் போல்தான் என்னுடைய முந்திய இரு மனைவிகள்கூட அழகாகத்தான் இருந்தார்கள். பழகப்பழக அந்த அழகுகள் எல்லாம் எனக்கு எப்படிப் புளித்தனவோ; அதே போன்று இப்போ இவளுடைய அழகும் சப்பென்று ஆகிக் கொண்டு வருவதை நான் உணருகின்றேன்!'

'இதனைக் கேட்ட எனக்கு ஓர் உண்மை தட்டுப்பட்டது. 'இருட்டானால், அழகும் ஒன்றுதான்; அவலட்சணமும் ஒன்றுதான். இரண்டும் ஒரே விதமான இன்பத்தையே நல்குகின்றன' என்று சிலர் 'தத்துவம்' பேசுகின்றார்கள் அல்லவா? அப்படியானால், நாம் உண்ணும் உணவை எதற்காக அறுசுவையுடன் சமைக்க வேண்டும்? 'உப்பில்லாப் பண்டத்தைக் குப்பையிலே போடு' என்று ஏன் சாபம் போட வேண்டும்? எவ்வளவுதான் நேரத்தையும், காலத்தையும் விரையம் பண்ணிச் சுவையுடன் உணவை நாம் சமைத்தாலும், தொண்டைக் குழியில் அது இறங்கியவுடன் அதற்குச் சுவை ஏது? மணம் ஏது? வாயினுள் மட்டும் ஆட்சிபுரிந்துவிட்டு, தொண்டைக்குள் இறங்கிய அடுத்த கணமே பயனற்றுப் போகும் அந்த அற்பாயுள் சுவைக்காக மனிதன் ஏன் ஏலம் என்றும், சிரகம் என்றும், உப்பென்றும், வெங்காயமென்றும், மிளகென்றும், நெய்யென்றும் வாங்கிக் கஷ்டப்பட வேண்டும். உணவுக்கென்று வாங்குகிற மீனையோ? இறைச்சியையோ? மரக்கறி வகைகளையோ அப்படியே அவித்து உண்டால் என்ன? ஏன் மனிதன் அப்படிச் செய்யாமல் சுவையுடன் அவற்றைச் சமைத்து உண்ணுகின்றான்? அங்குதான் விசயம் இருக்கின்றது. இந்த 'உணவுச் சுவை' விவகாரத்துக்கும், 'இன்பச் சுவை' விவகாரத்துக்கும் நெருங்கிய உறவும், தொடர்பும் இருக்கின்றது. சாப்பாடு 'அவியலை' அப்படியே விழுங்க முடிந்தால், இருட்டினில், அழகு—அழகற்றது என்ற வித்தியாசம் தெரியாமல் இன்பம் துய்க்க முடியும்! ஆனால் 'அவியலை' இன்று எத்தனை பேர்களால் முகம் சுழிக்காமல், வாந்தியெடுக்காமல் விழுங்க முடிகின்றது? உலகிலுள்ள ஒவ்வொருத்தனும் உணவு விசயத்தில் வாய்க்கு ருசியைத்தான் நாடுகின்றான். ஆயிரத்தில் ஒருவனுக்குத்தான், 'பசி புள்ளான் ருசியறியான்' விவகாரம் பொருந்தும்! பூரண இன்பம் துய்த்தல் விவகாரமும் இதுதான்; உணவுக்கு ருசி எப்படி அத்தியாவசியமாகிவிட்டதோ? ஒரு பெண்ணிடத்தில் பூரண இன்பம் பெறுவதற்கும் அபரிமிதமான அழகு அத்தியாவசியமென்பது உறுதியாகிவிட்டது! குமரா! விசயத்தைக் கூறுமல், என்னென்னவெல்லாமோ கூறிக் கொள்கைப் பிரசாரம் செய்கின்றேன் என்று முகம் சுழிக்கின்றாய் அல்லவா? இனிமேல் நான் அலட்டவில்லை. விசயத்தை நேரடியாகக் கூறிவிடுகின்றேன். அந்த வெள்ளைக்காரரின் கொள்கையைச் சுருக்கமாகக் கூறுவதானால் 'மனிதன் பிறக்கின்றான் இறக்கின்றான். இடைப்பட்ட காலத்

## 12. இன்ப ருசி

தில் அவனைப் பிடிக்கும் இளமைப் பசிக்கும், அழகுப் பசிக்கும், வேண்டியமட்டும் 'தீனி' போடவேண்டும்! 'தீனி' எங்கெங்கு கிடைக்கின்றதோ அங்கெல்லாம் உண்டு பசியாறவேண்டும்! அஜீரணம் என்ற பேச்சுக்கே இதில் இடமில்லை' என்பதே!

'துரையினுடைய இந்தக் கொள்கை, ஓரளவு நம் இருவருடையவும் சுவை நாட்டத்தோடு ஒத்துவருகின்றதல்லவா? துரை அப்படிச் சொல்லும் அந்தச் சுவை நாட்டத்துக்கேற்ற சூழல் இங்கு இப்பகுதியில் ஏராளமாகக் கிடைக்கும்போல இருக்கின்றது.

'இங்கு நான் அடியெடுத்து வைத்த அன்றுகூட அற்புதமான பல கண்ணுக்கினிய விருந்துகள் கிடைத்தன. அப்பொழுதெல்லாம் நான் உன்னையே நினைத்துக்கொண்டேன். குளித்துவிட்டு ஈர உடையுடன் வருகின்ற பெண்ணைப்பார்த்து, 'முகில் மறைத்த முழுமதி' என்று கவிதைக்கு வரி எடுத்த நீ இந்த மேலாடை ஏதுமின்றி சகஜோசம் சிறிதுமின்றிக் கங்கையில் குளிக்கும் இளமகளிர் கூட்டத்தைப் பார்த்தால் எப்படிக் கவிதைக்கு அடி எடுப்பாயோ? என்று கற்பனைசெய்தது என் மனம். டேய் குமரா! அந்த அரம்பையர் கூட்டத்தோடு நானும் சேர்ந்து குளிக்கும் ஒரு சந்தர்ப்பம் அன்று வாய்த்ததடா! அப்பொழுது என்னை நோக்கி ஒரு மோகினி நடைபயின்று வந்தாள். நான் வழித்துணைக்காக அழைத்து வந்திருந்த சிறுவனுடன் அவள் பேசவும் செய்தாள். அந்தச் சிறுவன் மூலமாக அவளுடைய பெயர் குமாரி என்றும் தெரிந்துகொண்டேன். அந்தப் பெண்ணையும் அவளுடைய கண்களையும், சிரிக்கும் அவள் இதழ்களையும் கண்டபோது தனிமையுணர்ச்சி என்னைவிட்டு அகன்று ஒரு புதிய துணை கிட்டியதுபோல இருக்கின்றதடா! அவள் புதியவள் அல்ல என்றும், இதற்கு முன் எங்கோ எங்கோ அவளை நான் கண்டிருக்கின்றேன் என்ற உணர்வும் என்னுள் பிறக்கின்றதடா. அந்தப் பெண்ணுடைய அழகைப் பற்றி என்னுள் ஒரு சந்தேகம். அந்தப் பெண்ணுக்கு அத்தனை இனிய அழகைப் [illegible] இனி அளித்த [illegible] கணைகளா? புருவங்களா? கண்ளங்களா? இதழ்களோ முற்றுகையிட்டுள்ள நிறைச் சிரிப்பா? கூந்தல் புரியும் மௌன ஈர்ப்பா? இவற்றில் எதனால் அவள் அழகு பெறுகின்றாள் என்று என்னால் கூற முடியவில்லை. நாம் பேசுகின்ற ஒலிக்கோர்வை மட்டும் மொழியல்ல; அல்லது பண்பட்ட எழுத்தாளர்கள் கூறுவது போல் மௌனம் மட்டும் ஒரு-மொழியல்ல; சில பெண்களின் உருவம் கூட ஒரு மொழிதான்! என்று மொழிக்குப் புது வியாக்கியானம் தருகின்றது அவளுடைய மோகன உருவம்! நீ வந்து அவளைப் பார்க்க வேண்டும். நீ வந்து அவளைப் பாட வேண்டும்! 'பாட வேண்டும்' என்று நான் என்ன சொல்வது? அவளைப் பார்த்த மாத்திரத்தில் உன்னால் பாடாமல் இருக்க முடியாது போய் விடுமே! வாலிபர் மனங்கள் சபலம் மிக்கவையோ இல்லையோ நானறியேன். ஆனால் பெண்களால் அவர்கள் உள்ளங்களைச் சபலப்படுத்த முடியும் என்பது மட்டும் உறுதி. இல்லையென்று நீ மறுத்தால், இதோ என் எதிரில் இருந்து கொண்டு, அடிக்கொரு தடவை என்னையே 'துறுதுறு' என்று தன் கூரிய விழிகளால் குத்திக் கொண்டிருக்கும் லக்ஷ்மி அதை ஒப்புக் கொள்ள மாட்டாளே! என்னடா குமரா? தலையைச் சுற்றுகின்றதா? இங்கு லக்ஷ்மி என்று நான் குறிப்பிட்டது எங்கள் பாடசாலையில் கல்வி புகட்டும் ஓர் ஆசிரியை! என்னமாக இருக்கிறாள். தெரியுமா? என்னுடைய இந்தக் கடிதத்தில் எங்காவது சொற்களும் கருத்துக்களும் இனிமையாக விழுந்திருந்தால், அதற்கு இந்த லக்ஷ்மியும் ஒரு காரணம். பின்னே என்ன? நான் எழுத உட்கார்ந்த அப்போ தொடக்கம் இது வரைக்கும் அடிக்கொரு தடவை அந்தப் பொல்லாத கண்களால் பொருளுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தால் தமிழ் குலுங்காமல் வேறு என்ன செய்யும்? கடிதத்தில் எங்காவது சில பகுதிகள் 'சப்' பென்று இருந்தால், அந்த வேளையில் அவள் என்னைப் பார்க்கவில்லை எனக் கொள்க! டேய் மக்கு! இவற்றை யெல்லாம் என் சரோஜாவிடம் சொல்லி என் உயிரை வாங்கி விடாதே! பேசாமல் இதற்குள் இருக்கும் கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டு மூச்சுக் காட்டாமல் திரும்பி விடு! கடிதத்தை முடிக்கப் போகும் தருணத்தில் ஒன்றை மட்டும்கூறிவிடுகின்றேன் இந்தத் தோட்டத்தில் என்னுடன் உறவாடிய துரையைச் சூழ் ஏதோ ஒரு மர்மம் பனிபோல் கவிந்திருப்பதை என்னால் உணர முடிகின்றது. கங்கைக் கரையோரம் நான் ஒரு கணப்பொழுது சந்தித்த குமாரியையும், இதோ பாடசாலையில் என் எதிரில் பொலிவோடு நிறைந்திருக்கும் லக்ஷ்மியையும் கூட அந்த மர்மப் பனி மூட்டம் விட்டு வைக்க வில்லை என்பதையும் என்னால் உணரக் கூடியதாக இருக்கின்றது. எதற்கும் நீ விரைவில் ஒரு தடவை விவு போட்டுக் கொண்டு இங்கு வா! துரை கூட உன்னையும் பார்க்க

(10-ம் பக்கம் பார்க்க)

## புரியாத பாடம்

'வடிவழகன்'
வள்ளிமடம்

மணியோசைக் குரலினால் நெஞ்சைத் தொட்டு
மாங்கனிக் கன்னத்தில் செம்மை சேர்த்து
இனிக்கின்ற மொழிபேசி என்னை ஈர்த்து
இறப்பின்றி வாழுதற்கு எண்ணம் ஈந்தாய்
முத்தார மின்னல்நகை ஒளியைச் சிந்தி
முழுநிலவின் முகத்தினிலே பொங்கு மெழில்
பத்துலட்சம் கோடி முறை பார்த்துப் பார்த்து
பாற்கடலே பனியலரே உளம் மகிழ்ந்தேன்

கருநிறத்து கூந்தலினை எழிலாய் வாரிக்
கட்டி இரு புறத்திலுமே சரிய விட்டுப்
பருவத்தால் பூரிக்கும் இளமை பொங்கப்
பார்க்கின்ற பார்வையிலே தணலாய் வெந்து
இதயத்தின் பெரும்புண்ணால் தினமுஞ் செத்து
இளமையென்ப தெனவாழ்வில் மடியா முன்னம்
பதித்துவைத்து இதயத்தில் வணங்கி நின்றேன்
பாசமெனும் உணர்விற்கு அடிமை யானேன்

வில்லாக வளைந்திட்ட புருவத் திங்கிழ்
வெல்லும்விழி கள்இரண்டும் என்னை வாட்டி
கொல்லுகின்ற வேதனையோ நெஞ்சில் வந்து
கொடுமைசெய்யும் ஆட்சிதான் இன்பம் என்றும்
உலகத்து அழகெல்லாம் ஒன்றாய்க் கூட்டி
ஓவியத்தில் எழிலான வண்ணம் தீட்டி
திலகத்தை நிலவிலே வைத்தாய் வைத்து
தேடிவந்த உயிர்ச்சிறப்பு செல்வம் நீயே

செந்நிறத்துத் தாமரையாய் இதழ் விரித்து
செவ்வானப் பரிதியான முகத்தைக் காட்டி
சிந்துகின்ற தேன்துளியாய் இதழில் வைத்தாய்
சிற்றிடையை வளைத்ததனை நான் சுவைத்தேன்
இதயத்தை இல்லமாய் ஆக்கித் தந்தேன்
இன்பமே எனதரசி நீதான் புதுமைப்
புதுமலராய் என்னருகில் வந்தாய் வந்து
புரியாத புதுப்பாடம் கற்றுத் தந்தாய்.

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, விக்கம்; இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய
மகா சஞ்சீவி

விலை ரூபா 1-50

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

S. P. S. ஜெயராம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் ஏக ஏஜன்ட்

M. A R. S. மனுவேல் நாடார்
அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நா. சிவேந்திரன், கிருலப்பனை

கே: அரசாங்கம் தமிழருக்கு என்ன உரிமைகளை வழங்குவதாக ஒப்புக் கொண்டது. தவறினுல் மீண்டும் சத்தியாக்கிரகமா?

ப: அவசரப்படேல்! உரிய காலத்தில் அது தெரிய வரும், உரிமைகள் வழங்கப் படும்போது, என்னென்ன உரிமைகள் என்பது தான் தெரிந்துவிடுமே. தவறினுல் கட்சியிடம் மாற்றுத் திட்டம் உண்டு.

ஃ

எம். பீ. இல்யாஸ், ஏருவூர்

கே: தமிழ் அரசுக்கட்சி என்ன நோக்கத்துடன் அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டது?

ப: இழந்த உரிமைகளைப் பெற வேண்டுமென்ற நோக்கமே தவிர வேறு எந்த நோக்கமும் கிடையாது.

கே: திரு. பொன்னம்பலத்துக்கு, மந்திரிப் பதவி கிடைக்காதது ஏன்?

ப: சுகாதார மந்திரி பதவியைக் கொடுத்தார்களாம். அது வேண்டாமெனக் கூறிக் கைத்தொழில், அல்லது நிதி அமைச்சைக் கேட்டாராம் திரு. பொன்னம்பலம். அதைக் கொடுக்க அரசாங்கம் தயாராயில்லையாம். எனவே பதவி வேண்டாமென்றாராம். பிறகு மனதை மாற்றிக்கொண்டு ஏதோ கொடுங்கள் என்று டெலிபோனில் கேட்டாராம். 'மன்னிக்கவும்—பதவி காலியில்லை' என்று பதில் வந்ததாம். இது கொழும்பில் அடிபடும் வதந்தி. உண்மையா என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஃ

எம். வீ. கே. ராஜலிங்கம், புலவட்டக்கொடை

கே: தனி மனிதனின் புகழுக்கு காரணம் அவனிடமுள்ள பணமா? அல்லது அவனிடமுள்ள கொள்கையா?

ப: இரண்டும்! இவ்விரண்டுக்கும் நடைமுறையில் நெருங்கிய தொடர்பு உண்டு. பணமிருந்தாலும் நிலையான ஒரு கொள்கையின்றேல் நிரந்தரமான புகழைப் பெற முடியாது.

ஃ

சு. வனகிருஷ்ணன், வெள்ளவத்தை

கே: தமிழரசு இயக்கத்தில் இருபது பாராளுமன்றப் படைவீரர்கள் இருப்பின் நிலைமை எவ்வாறு இருக்கும்?

ப: படையின் வலிமை அதிகமாகியிருக்கும்.

கே: தேசிய அரசாங்கத்தின் உயிர்நாடி யார் கையில் உண்டு?

ப: தமிழரசுக் கட்சியின் கையில்.

கே: இங்குள்ள இதர சமய குருமார்களில் குறிப்பாக புத்த கு மார்கள் மட்டும் அரசியல் விவகாரங்களில் தீவிர பங்கு கொள்வதேன்?

ப: இலங்கையில் பௌத்த சமயத்தில் பிக்குகளுக்கென விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தளர்ந்து வருவதுதான் காரணம்.

கே: வகுப்புவாதத்தைக் கொள்கையாகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு இரண்டறக் கலந்த சமசமாஜ கொம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்த தமிழ்க் குஞ்சுகளின் எதிர்காலம் பற்றி தங்கள் ஆருடம் என்ன?

ப: அவர்களுக்கு இறந்த காலம் நிகழ் காலம் மட்டும் என்ன பிரகாசமாயிருந்ததா? அவர்களைப் பொறுத்தவரையில் முக்காலமும் இருண்டு தானிருக்கும்.

ஃ

எம். மாசிமுத்து; கன்னுகம்

கே: சில பெண்கள் மணஞ் செய்யாமல் கன்னிகளாகவே வாழ்கின்றனர். அவர்களுக்கு உணர்ச்சிகள் கிடையாதோ?

ப: உண்டு! அவற்றைக் கட்டுப்படுத்தி ஆட்கொள்ளும் ஆற்றலும் உண்டு.

கே: எனக்கு 16 வயது என் காதலிக்கு 18 வயது இருவரும் திருமணம் செய்துகொள்ளலாமா?

ப: நாட்டின் சட்டப்படி முடியாது. காதற் கோட்பாட்டின்படி முடியும்.

கே: ஓர் ஆண் இரு பெண்களை மணஞ் செய்துகொள்வது போல் ஒரு பெண் இரு ஆண்களை மணம் செய்துகொண்டாலென்ன?

ப: இரண்டும் சட்டவிரோதமே! சட்டத்தின் பிடியிற் சிக்காமல் ஓர் ஆண் எத்தனை பெண்களை மணஞ் செய்தாலும், ஒரு பெண் எத்தனை ஆண்களை மணஞ் செய்தாலும் அரசாங்கம் கவலைப்படாது.

ஃ

க. இராசா-இரத்தினசிங்கம் கிளிநொச்சி

கே: தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு, மிகவும் குறைந்த வாக்குகளால் தோல்வியடைந்த மசூர் மௌலானு, பொ. மாணிக்கவாசகம் மனோ நிலை எப்படியிருக்கும்?

ப: தோல்வியை அடுத்து வெற்றி வரும் என்று எதிர்பார்க்கும் மனோ நிலைதான் இருக்கும்.

ஃ

தேவராசா, மலிகாகம்

கே: திருமதி சிறிமா அம்மா மூன்று மாத காலத்தில் திரும்பவும் பிரதமராக வருவேன் என்று சிங்கள மக்களுக்குக் கூறினராமே, எப்படி வர முடியும்?

ப: தான் அப்படிக் கூறவில்லை என்று பிறகு மறுத்து விட்டாராம்.

கே: காங்கேசன்துறைத் தொகுதி வேட்பாளர்களில் ஒருவரான திரு. பாஸ்கரன் "தேர்தலில் தான் தோல்வி அடைந்தால் மொட்டை அடிப்பேன்" என்று கூறினராமே!

ப: யாரை மொட்டை "அடிப்பேன்" என்று கூறினர்? தன்னையா அல்லது வேறு யாரையுமா? எதற்கும் அவர் தலையை ஒருமுறை பார்த்து சந்தேகத்தைத் தீர்த்துகொள்ளுங்கள்.

ஃ

எஸ். நாதன், உடுப்பிட்டி

கே: உடுப்பிட்டியில் ஒரு சிங்கம் நடமாடுகிறதே. கேள்விப்பட்டீர்களா குயுக்தியாரே?

ப: சிங்கமா? ஆபிரிக்காக் காட்டில் அல்லவா சிங்கம் நடமாடுகிறது. சரி அது ஆண் சிங்கமா அல்லது பெண் சிங்கமா? எதற்கும் சிங்கத்தை நாட்டில் நடமாடவிடுவது ஆபத்தானது. ஆகவே, அச் சிங்கத்தை எப்படியும் தடம் போட்டுப் பிடித்து விட வேண்டும். பிடித்து வைத்து அதற்குத் தீனி போடுவது கஷ்டமான காரியம் என்றால் ஆபிரிக்காக் காட்டிற்கு அனுப்பி விடுவது நல்லது. இல்லை, நமது தெகிவலை மிருகக் காட்சிச் சாலையில் நின்ற ஆண் சிங்கம் அண்மையில் இறந்துவிட்டதாகவும், அதனால் பெண் சிங்கம் விரக்தியடைந்து கூட்டிற்குள் பெரிய அட்டகாசம் செய்வதாகவும் தெரிகிறது. உங்கள் உடுப்பிட்டிச் சிங்கம் ஆண் சிங்கமாக இருந்தால் உடன் அனுப்பி வையுங்கள் மிருகக் காட்சிச் சாலைக்கு. அதனிடம் திறமையிருந்தால சோடியை இழந்து நிற்கும் பெண் சிங்கத்திற்குத் துணை புரியட்டுமே பார்க்கலாம்.

ஃ

ஆர். ராசேந்திரன், கண்டி

கே: தேர்தலுக்குப் பின் தினசரிப் பத்திரிகைகளின் போக்கில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா?

ப: இப்போதெல்லாம் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பவர்கள் இலங்கையிலுள்ள சகல பிரச்சினைகளும் முற்றாகத் தீர்க்கப்பட்டுவிட்டன என்ற முடிவுக்கே வருவார்கள்.

ஃ

ம. சு. மணியம், வட்டுக்கோட்டை

கே: தமிழரசுக் கட்சியினர் தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பதை சில இளைஞர்கள் முழு மனதுடன் ஆதரிக்க வில்லைபோல் தெரிகிறதே, காரணமென்ன குயுக்தியாரே?

ப: இளைஞர்கள் பொதுவாக எதிர்ப்பு மனப்பான்மைகொண்டவர்கள். சதா எதையேனும் எதிர்த்துக் கொண்டிருப்பதிற்தான் அவர்களின் உணர்ச்சி வளம் பெறுகிறது. எதிர்ப்பு மனப்பான்மையை ஒத்துழைப்பு மனப்பான்மையாகத் திடீரென மாற்றுவது சற்று கடினம். ஒத்துழைப்பு மனப்பான்மை வளர வளர படிப்படியாக முழு மனதுடன் ஆதரிக்கத் தொடங்கிவிடுவர்.

திருமதி அன்னம்மலை, நல்லூர்

கே: சிங்களப் பெண்களைப் போன்று தமிழ் பெண்கள் தீவிர அரசியலில் ஈடுபடாமைக்குக் காரணம் என்ன?

ப: தமிழ் பெண்களைப் போலன்றி குடும்பத்தில் சிங்களப் பெண்களுக்குக் கட்டுப்பாடு குறைவாகும். படித்த சிங்களப் பெண்களும், சிங்களப் பெண் தொழிலாளர்களும், பொதுவாக அரசியலில் அதிக ஆர்வம் கொண்டவர்கள். ஆண்களும் அவர்களுக்கு ஊக்கமளிக்கின்றனர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சிங்களப் பெண்களை அரசியலில் முன்னணிக்குக் கொண்டு வர ஆண்கள் என்றுமே தயங்கியதில்லை. தமிழ் பெண்களும், ஆண்களும் அதற்கு நேர்மாறானவர்கள்.

ஃ

உரிமைவீரன், அச்சுவேலி

கே: தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் 14 பேரிலும் பார்க்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தாங்கள் மூவரும் தமிழ் மக்களுக்காக கூடப் பாடுபடுவோம் என்று உடுப்பிட்டியார் அண்மையில் கூறினராமே. இக்கூற்று உண்மையாகுமா?

ப: உண்மையில் அவர்கள் அப்படிப் பாடுபடுவார்களானுல் மக்கள் வரவேற்பர். ஆனுல் அவர்களின் கடந்த கால வரலாறு அவர்களின் கூற்றை நம்புவதற்கு இடமளிக்கவில்லையே!

ஃ

க. பார்த்தசாரதிராஜா, தாவடி

கே: தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை தற்போதைய அரசாங்கம் தனது பதவி காலத்தில் நிறைவேற்றி வைக்குமா?

ப: நிறைவேற்றி வைக்குமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. நிறைவேற்றத் தவறினுல் அடுத்த நடவடிக்கைக்கும் தமிழ் பேசும் மக்கள் தயாராகவே இருக்க வேண்டும்.

ஃ

சாம்ஸ் ராஜநாதன், யாழ்ப்பாணம்

கே: வவுனியா பிரதிநிதி தமிழ் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி திரு. மைத்திரிபால சேனநாயக்காவுடன் சேரப்போகிறூர் என்று ஒருவதந்தி அடிபடுகிறதே, உண்மைதானு?

ப: அவர் அண்மையில் தான் தமிழ்க் காங்கிரஸில் சேர்ந்தார், எனவே மீண்டும் கட்சி மாறினுல், அதிலென்ன விந்தை இருக்க முடியும்?

திரு. பொன்னம்பலம் ஏன் சுகாதார மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை?

ப: வேறு ஒரு மந்திரிப் பதவியைக் கைப்பற்றுவதற்காக இதனை ஏற்றுக்கொள்ளவில்லையாம். இறுதியில் கிடைத்தது கைவிரிப்பு தான்.

ஃ

இ. நா. தியாகராசா, வெள்ளவத்தை

கே: உலக சமாதானத்தை நிலைநாட்ட இன்றைய இலங்கை அரசாங்கம் தீவிர முயற்சி யெடுக்கும் அதன் பயனாக பிரதம மந்திரியார் அவர்களுக்கு நோபல் சமாதானப் பரிசு கிடைக்கும் என்கிறேன்,

ப: உங்கள் கருத்து அர்த்த புஷ்டியானதே!

கே: சுதந்திர நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் சாதி மத நிற பேதங்கள் பாராட்டாமலும் மொழி காரணமாகத் தங்களுக்கிடையே வேற்றுமைகளை வளர்க்காமலும் ஒன்றுபட்டிருப்பதால் உலகில் வெற்றி முரசு கொட்டச் செய்யலாம் அல்லவா?

ப: ஆம், மொழிகளிடையே சம அந்தஸ்து நிலை நிறுத்தப்பட்டால்.

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.
இம் முகவரியைக் குறித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப் படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

தேவை
பலாங்கொடை நகரில் பிரசித்தி பெற்ற புகையிலை வியாபார ஸ்தாபனத்திற்கு சுமார் ரூபா 5000/- முதலீடு செய்யக் கூடிய பங்காளி—உவர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து தேவை. நேரடித் தொடர்பு கொள்க.
நா. சின்னராசா,
11, பிரதான வீதி,
பலாங்கொடை.



அருந்துக
நுவரெலியா
இது சிறந்த பியர்
ஏனெனில்
★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
★ 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.
மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.
தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜுபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்
சிலோன் புருவெரி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**❁ பொன்னம்பலத்தின் 'புதிய சாதனை' ❁ இடதுசாரிகளின் தீவிர வாதம்**

# புதிய பாராளுமன்றம் களை கட்டுகிறது

## மதவாச்சியாரின் மறுப்புக்கு பட்டிருப்பாரின் ஆப்பு

புதிய பாராளுமன்றம் 5-ம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்குக் கூடியது. பாராளுமன்ற எழுது வினைஞர் திரு. சாம் விசயசிங்கா இலங்கையின் ஆறுவது பாராளுமன்றத்தைக் கூட்டும் தேசாதிபதியின் பிரகடனத்தை வாசித்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அதைத் தொடர்ந்து புதிய சபாநாயகராக நாத்தாண்டியத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அல்பேட் பீரிஸ் 39 அதிகப்படி வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

சபாநாயகர் தெரிவைத் தொடர்ந்து உறுப்பினர்கள் சபை எழுதுவினைஞர் முன் சென்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். முதலில் சபாநாயகரும், அவரைத் தொடர்ந்து பிரதமரும் சத்தியப்பிரமாணம் செய்து பிரகடனத்தில் ஒப்பமிட்டனர். இதைத் தொடர்ந்து அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவி, இதர கட்சித் தலைவர்கள், ஏனைய உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். கிறிஸ்தவ உறுப்பினர்கள் பைபிளில் சத்தியம் செய்து பிரமாணம் எடுத்தனர்.

### சத்தியப் பிரமாணம்

உறுப்பினர்கள் அனைவரும் -ஒருவரைத் தவிர ஏனையவர்கள்- தங்கள் தாய்மொழியிலேயே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர், கொழும்பு மத்திய தொகுதி மூன்றாவது உறுப்பினரான திரு. பீட்டர் கெனமன் அவரது தாய்மொழியான ஆங்கிலத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். யாழ்ப்பாணத் தொகுதிப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் மட்டும் தமது தாய்மொழி அல்லாத ஆங்கிலத்தில் சத்தியப் பிரமாணம் செய்து ஒரு புதிய சாதனையை நிலை நாட்டினார்.

சபாநாயகர், துணைச் சபாநாயகர், குழுத் தலைவர் ஆகிய பதவிகளுக்கு எதிர்க்கட்சியினரும் போட்டியிட்டனர். எதிர்க் கட்சியினர் பௌத்த சிங்களவர் ஒருவரை சபாநாயகராகத் தெரிவு செய்ய வேண்டுமென்ற அவர்களின் தலைமைப் பொதுக்கொள்கையின்படி திரு. ஆர். ஜீ. சேனநாயக்காவின் பெயரை திருமதி பண்டாரநாயக்கா முன்மொழிய முன்னைய நிதி அமைச்சர் பாக்டர் என். எம். பெரேரா வழிமொழிந்தார். இதே போன்று ஏனைய பதவிகளுக்கும் போட்டி நடைபெற்றது.

ஆரம்பத்தில் சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காக உறுப்பினர்கள் வாக்களிக்கச் சென்று கொண்டிருந்தபோது எதிர் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தமிழில் கிண்டலாக வரவேற்புக் கூறினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராக இருந்த திரு. டடாரவிலே... திரு. ... சமசமாசக் கட்சி உறுப்பினர் திரு. நில். டி. அல்விஸ் ஆகியோர் இப்பணியில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தனர். "வாங்கலேன், ஓட்டுப் போடுங்கலேன், வணக்கம், சுறுக்கா வாங்கோ மீனாட்சி, அரோகரா" ஆகிய சொற்களை இவ்வுறுப்பினர்கள் தொடர்ந்து கிண்டலாகவும் கேலியாகவும் கூறிக் கொண்டிருந்தனர்.

### இடதுசாரிகள் நிலை

தேசிய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கி விட்டது என்பதைச் சிங்கள மக்களுக்குப் புலப்படுத்தி ஒரு சிங்கள—தமிழ் இனக் கலவரத்தை உருவாக்கும் வகுப்புவாத நோக்கத்துடனேயே சமசமாச —சுதந்திர—கம்யூனிச உறுப்பினர்கள் இங்ஙனம் நடந்து கொண்டனர் என்பது புலனாகியது.

### நமது நிருபர்

தென்னிலங்கையில் உள்ள தோழர்கள் தேசிய அரசாங்கம் தமிழர்களுக்கு உரிமை கொடுத்து விட்டது என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கிறார்கள். வட—கிழக்கு இலங்கையில் உள்ள தோழர்கள் நிலை என்ன என்பது தெரியவில்லை?

வட—கிழக்குத் தோழர்கள் தொடர்ந்து தென்னிலங்கையிலுள்ள சிங்கள—பௌத்த வகுப்புவாதத் தலைமையை ஏற்றுக் கொண்டு திருப்தியடையப் போகிறார்களா? அல்லது புது மார்க்கம் ஏதாவது காணப் போகிறார்களா என்பது இன்னமும் புரியாத புதிராக அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது.

தென்னிலங்கையில் தமிழர்களுக்கெதிராகப் பகிரங்கமாகக் கூச்சல் போடும் சமசமாச—கம்யூனிச தலைமையை வட—கிழக்குத் தோழர்கள் ஏற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென்ற அபிப்பிராயமும் சில வட்டாரங்களில் நிலவுகிறது. இந்தியா மீது சீனா ஆக்கிரமிப்பு நடாத்திய பிறகும் இந்தியாவில் சீனக் கம்யூனிஸ்டுகள் கட்சி அமைத்துச் செயற்படுகையில் வட—கிழக்குத் தோழர்கள் தென்னிலங்கையில் உள்ள வகுப்புவாதத் தலைமையை ஏற்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல என்றும் ஒரு அரசியல் நோக்கர் கூறியுள்ளார்.

### பட்டிருப்பாரின் ஆப்பு

சபாநாயகர், துணைச் சபாநாயகர், குழுத் தலைவர் தெரிவுகள் முடிந்த பின்னர் சபாநாயகரைப் பாராட்டி சபையின் இரு பகுதியினரும் உரை நிகழ்த்தினார்கள்.

எதிர்கட்சியினர் சபாநாயகரைப் பாராட்டிப் பேசுகையில் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டார்கள். முன்னாள் சபாநாயகராகவிருந்த திரு. ஹியூ. பெர்னாந்து சபாநாயகர் பதவிக்கே இழுக்குத் தேடிவிட்டார் என்றும், அரசாங்கத்தைப் பற்றி அவதூறாகப் பேசித் திரிந்தார் என்றும் குற்றம் சாட்டினர். இந்த நாட்டில் ஒரு பௌத்த சிங்களவரே பாராளுமன்ற சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட வேண்டும்; அப்பொழுதுதான் பௌத்தமும் சிங்களமும் இந்த நாட்டில் பாதுகாக்கப்படும் என்றும், அதனாலேயே திரு. ஆர். ஜீ. சேனநாயக்காவின் பெயரை திருமதி பண்டாரநாயக்கா முன்மொழிந்து சமசமாசத் தலைவர் டாக்டர் பெரேரா வழிமொழிந்தார் என்று அடித்துக் கூறினர் எதிர்க் கட்சியினர்.

எதிர்கட்சியினரின் கூற்றுக்கு பட்டிருப்புப் பிரதிநிதியும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் ஆப்பு வைத்தார். 'இந்த நாடும், பாராளுமன்றமும் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது அல்ல என்றும், இன, மத,சமூக வேறுபாடுகளைக் காட்டும் இடம் இதுவல்ல' என்றும் உரத்த தொனியில் கூறிய திரு. இராசமாணிக்கம், 'இனக் குழப்பங்களை உருவாக்குவதன் நோக்கமாகவே எதிர்க் கட்சியினர் இப்படி நடந்து கொள்கிறார்கள்' என்றும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துப் பேசியவர்கள் தங்கள் தங்கள் தாய் மொழியிலேயே பேசினார்கள். ஒருவர் மட்டும் தாய் மொழியல்லாத பிறிதொரு மொழியில் பேசினார்.

யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆங்கிலத்தில் பேசுகையில் எதிர்க்கட்சியினரின் போக்கைக் கண்டித்துவிட்டு சபாநாயகரையும் பாராட்டிப் பேசினார்.

மூதவையும் 5ம் திகதி பிற்பகல் 2-30 மணிக்குக் கூடியது. அப்பொழுது புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இரு மூதவை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து பதவி பெற்றனர். உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் தமிழில் சத்தியப் பிரமாணம் செய்து மூதவை உறுப்பினராகப் பதவியேற்றார். திரு. யே. பி. ஒபயசேகர சிங்களத்தில் சத்தியப் பிரமாணம் செய்து மூதவை உறுப்பினராகப் பதவி யேற்றார்.

பாராளுமன்ற — மூதவை நிகழ்ச்சிகளைப் பற்றி விமர்சித்த அரசியல் நோக்கர் ஒருவர் 'இரு மாதங்களில் தமிழ் மொழிக்கு உரிமை பெற்றுத் தருவேன் என்று கூறிவந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி சகலதும் ஆங்கிலம் என்ற நிலையில் ஒரு புதிய சாதனையை நிலை நாட்டுகிறாரே' என்றார்.

### யார் அணைப்பார்?

151 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும், ஆறு நியமன உறுப்பினர்களையும் கொண்ட பாராளுமன்றத்தில் ஒரு சுயேச்சை உறுப்பினரை எக் கட்சியினரும் அணைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் இல்லை. இவர் ஆரம்பத்தில் அரசாங்கக் கட்சியில் இடம் பிடிக்க முனைந்தாராம். வேண்டாம் என்று விரட்டி விட்டனராம் அரசாங்கக் கட்சியினர். எதிர்க் கட்சிக்குத் தாவினார், தாவியவர் தனியாக எதிர்க்கட்சியில் இருக்க விரும்பாது எதிர்க்கட்சிக் குழுவில் இடம் பிடிக்க முனைந்தாராம் முடியவில்லை. இவரை யாரும் அணைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் இல்லை. காரணம் என்ன?...... இத்தனைக்கும் இவர் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது

---

## ★பணம் திரட்டும் காரணம்?

கிழக்கு மாகாணத்திலே ஒரு தொகுதியில் சில தொண்டர்கள் தோல்வியடைந்த ஒரு வேட்பாளரின் ஆதரவாளர்களிடம் பணம் திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். நமது அம்மான் இவர்களை அண்டி விசாரித்ததில் உண்மை புலப்படவில்லை எப்படியோ சில பல தந்திரோபாயங்களைக் கையாண்டு உண்மை விடயத்தை அம்மான் வெளிக் கொணர்ந்து விட்டார்.

இத்தகைய இரகசியங்களை அம்மானிடமிருந்து மறைப்பது முடியாத காரியம் என்பதை, இப்பொழுது 'அவர்கள்' உணர்ந்து விடுவார்கள்.

இம்முறை வாக்குச் சீட்டுக்களை எண்ணுவதில் ஒரு அப்பாவி வாக்காளர்களிடம், தமது வாக்குச் சீட்டுகள் பாரபட்சமாக எண்ணப்பட்டுள்ளன என்று கதையைக் கட்டி விட்டிருக்கிறார். அது மட்டுமல்லாமல் அச்சீட்டுக்களை மீண்டும் எண்ணுவதற்கு ஒழுங்குகள் செய்யப்போகிறாராம் அவர். தேர்தல் மனுமூலம் கோர்ட்டார் உத்தரவின் மீதே இவ்வாறு செய்ய முடியும் என்பது தெரிந்ததே. உண்மையாக அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுபடவில்லை என்பதை பாமர வாக்காளப் பெருமக்கள் உணரவில்லை.எனினும் தமது வேட்பாளருக்கு இப்பணியில் உதவுவதற்கு அவர்கள் முன் வந்துள்ளனர்.

சில கிராமங்களில் ஆதரவாளர்களிடம் சிலர் இரகசியமாகச் சென்று பணம் வசூலிக்க ஆரம்பித்துள்ளனர். வாக்குச் சீட்டு எண்ணுவதற்காக என்று கூறித்தான் இப்பணம் வசூலிக்கப்படுகிறதாம். ஆனால் உண்மை அதுவல்ல.தோல்வியடைந்த வேட்பாளர் தேர்தலுக்குச் செலவிட்ட தொகை கடன்களாகப் பெறப்பட்டுள்ளனவாம். அப்பெருந்தொகைக்கடனை அடைப்பதற்கே இந்தவசூல் என்ற உண்மை அம்மானுக்குத் தெரிந்து விட்டது.

25 சதம் கொடுத்து ஒரு அளவு அரிசி வாங்குகிறீர்களல்லவா? இந்த அரிசி ஏறத்தாழ ஒரு ரூபாய் வீதம் பலருக்கு 'பிசினஸ்' காட்டி விட்டுத்தான் கடைசியில் உங்களுக்கு உணவாகிறது. இந்த உச்சிகரமான தகவலை அடுத்த வாரம் இப்பகுதியில், 'அரிசியின் சுயசரிதை'யில் அரிசியே விளக்குகிறது.

இந்த அரிசியின் சுயசரிதைக்கு ஒப்பாகவே கருவாடும் சரிதை கூறலாம்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு அயல் நாடுகளிலிருந்து கருவாடு வந்து சேர்கிறது. இவை ரயில் மார்க்கமாகவும், மோட்டார்கள் மூலமும் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன இவை அனுப்பி வைக்கப்படுகின்றனவே அன்றி அவை உரிய இடங்களுக்குப் போய்ச்சேருவதாகத் தெரியவில்லை.

## சந்தித்து வந்தவை

காலைகண்டன்

புதிய முறை கையாளப்பட்டதாம். இதனாலே தான் முடிவுகள் வெளியாகுவதற்குத் தாமதம் ஏற்பட்டது என்று தேர்தல் அதிகாரிகள் கூறுகின்றனர். ஒவ்வொரு வாக்குச் சீட்டும் எட்டு உத்தியோகத்தர்களின் நேரடிப் பரிசீலனைக்கும் எண்ணிக்கைக்கும் உள்ளாக்கப்பட்டமையினால் தாமதம் ஏற்பட்டதாகவும், ஆனால் எண்ணிக்கையில் எவ்வளவு பிசகும் ஏற்பட்டிருக்க இடம் இல்லை என்றும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்கக் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு தேர்தல் தொகுதியின் வாக்குச் சீட்டு எண்ணிக்கையில் பிசகு ஏற்பட்டு விட்டது என்று ஒரு 'குசுகுசு' வெடித்திருக்கிறது அம்மானிடம் மறைக்கப்பட்ட 'குசுகுசு' வுக்கும் இதுதான் காரணம்!

நீங்கள் உண்ணும் சோறு—அதற்காக உதவும் அரிசி—கூப்பனுக்கு வழங்கப்படும் உள்ளூர் அரிசி—அவனிடம் கேட்டால் அதன் வரலாறு ஒரு தொடர் கதையாகச் சொல்லும்.

பொருள் கிடைத்துவிட்டதாக இந்த நிலையங்களிலிருந்து பற்றுச் சீட்டுகள் உரியவேளையில் தலைமை நிலையத்துக்கு வந்து சேர்ந்துவிடுகின்றன. ஆனால் சரக்கு நிச்சயமாக இந்த நிலையங்களை எதற்கும் போய்ச் சேருவதாயில்லை. இதே போன்று தான் மாசி முதற் கொண்டு வேறு பல பொருட்களும் மாயமாக மறைந்து விடுகின்றன.

கொழும்பிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் பொருட்கள் அவ்வூர் ரயில்வே நிலையத்தை அடைந்தவுடன் ஒரு க. மொ. வி. உத்தியோகத்தர் பொறுப் பெடுத்துவிடுவார்.

(5-ம் பக்கம் பார்க்க)

தோல்வி அடைந்த வேட்... ...

## ★நாட்டின் பிரயாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் ரத்தாகும் டட்லி-தொண்டமான் உடன்பாட்டின் விளைவு”

## சிங்களத் தினசரியின் கூற்று

“சிறிமா அரசாங்கம் தோல்வியடைந்து, டட்லி—தொண்டமான் கூட்டரசாங்கம் ஏற்பட்டத்தின் விளைவாக சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் எண்ணத்தை இந்திய அரசாங்கம் இப்பொழுது கைவிட்டிருப்பதாக அறியப்படுகிறது”

“எத்த” பத்திரிகை (3-4-65) மேற்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

“இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியர் ஒருவரைக்கூட இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப இடம் கொடுக்க மாட்டேன் என்று திரு. தொண்டமான் பாராளுமன்றத்திற் கூறியுள்ளார்.

கடந்த தேர்தலில் திரு. தொண்டமான் திரு. டட்லியுடன் கைகோர்த்துக் கொண்டதற்கான காரணம் சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில்லையென திரு. டட்லி அவருக்கு கொடுத்த வாக்குறுதியே என்று கூறப்படுகிறது.

இந்த உடன்படிக்கையின்படி மலைநாட்டு இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வாக்குகளை யு. என். பிக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக இருதரப்பினரிடையே தரகு வேலை செய்தவர் சேர் ஒலிவர் குணதிலக்கா என்று கூறப்படுகிறது.

டட்லியின் அரசாங்கத்திற் சேர்ந்துள்ள தமிழரசுக் கட்சியும் இந்தியர்களைத் திருப்பி அனுப்புவதை எதிர்க்கிறது. இதற்கேற்ப யு. என்.பி.-தமிழரசு—தொண்டமான் கூட்டரசாங்கம் ஏற்பட்டுள்ள தற்போதைய புதிய நிலைமைக்கேற்ப சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தைப் புனராலோசனை செய்ய இந்தியா தயாராகுறதென அறியப்படுகிறது.

## சிங்கள இதழ்களில்...

### தமிழரின் கோட்டை

“திருகோணமலைக் கோட்டையினுள் பலவந்தமாகக் குடியேறுவதற்காகத் தமிழரசு வாதிகள் வீடுகள் அமைக்க மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலத்தில் அவர்கள் அங்கே வீடுகளை அமைத்துக் கொண்டிருந்த போது சிறிமா அரசாங்கம் உடனே அதனை நிறுத்தி, கோட்டையின் நிர்வாகத்தை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்தது. ஆனல் யு. என். பி. கூட்டரசாங்கம் நிறுவப்பட்ட பின்னர் அந்தத் தடையை நீக்க துணிவு ஏற்பட்டுள்ளது. இவர்கள் இவ்வாறு செய்வது அதனைத் தமிழர்களின் பிரதான கோட்டையாக வைத்துக் கொள்வதற்கே என்று நம்பப்படுகிறது”

—“எத்த”(3-4-65)

# கூட்டரசு அமைக்க அதிகாரமில்லையாம்!

‘தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்க யு என். பிக்கு பொதுத் தேர்தலின்போது மக்கள் அதிகாரம் வழங்கவில்லை. அவ்வித எண்ணம் இருப்பதாகக்கூட திரு. டட்லி தேர்தலின்போது மக்களிடம் கூறவில்லை. மக்களிடம் அதிகாரம் பெறுமல் தமிழரசுவாதிகளுடனும், தொண்டமானுடனும் சேர்ந்து கூட்டரசாங்கமொன்றினை நிறுவியதால், மக்களிடையே பெருமளவில் ஏற்பட்டுவரும் அதிருப்தியை அடக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்ய வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது’ என்று ‘எத்த’ 5-4-65ந் திகதி தலையங்கம் எழுதியுள்ளது.

இத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

‘நாட்டில் சாதி பேத, மத பேதங்களை கிளறிவிட்டு வேலைநிறுத் தங்களை ஏற்படுத்தி கலவரங்களையும், கிளர்ச்சிகளையும் தூண்டிவிட எதிர்க்கட்சிகள் முயற்சி செய்கின்றன என்ற ஒரு புதிய கீதத்தை இசைக்கத் தொடங்கியுள்ளன முதலாளிப் பத்திரிகைகள். இதனைப் புதிய பிரதமர் கண்டியில் ஆரம்பித்து வைத்தார்; இந்தப்பிரசாரத்தை ஓயாது தொடர்ந்து நடத்தக் காரணம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து, எதிர்க்கட்சிகளை நசுக்கி தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்வதுதான்.

யு. என். பி—தமிழரசுக் கூட்டு அரசாங்கத்துக்கு முதன் முதலாகத் தேவைப்படுவது ‘எத்த’ பத்திரிகையைத் தடைசெய்வதுதான். அவசரகாலச் சட்டத்தின் மூலமாகவே அதனைச்செய்ய முடியும்.’

### விசேட புகைவண்டி

கொழும்பு ஏப். 8

புதுவருட தினத்தையொட்டி 10-ம் திகதி பிற்பகல் 1.15 மணிக்கு ஒரு விசேட புகை வண்டி கொழும்பு கோட்டை நிலையத்திலிருந்து காங்கேசன் துறைக்குப் புறப்படும். தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் [illegible]யிரதத் திணைக்கள முதல்வருக்கு விடுத்த வேண்டுகோளை யொட்டியே இவ்வண்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# தமிழ் படித்தவர்கட்கு தொழில் வசதிகள்

“இதுவரை இந்நாட்டில் உத்தியோக மொழியாக இருந்த சிங்களத்தைப் படிக்கத் தவறியதால் வேலை இழந்த அரசாங்க ஊழியர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுமாறு தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. “இவ்வாறு இடதுசாரிச் சார்புள்ள ‘ஜன சத்திய’ என்னும் பத்திரிகை 4-4-65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

‘இதற்கிடையே சிங்களம் படித்த ஊழியர்களைப் பார்த்து தமிழ் அரசாங்க ஊழியர்கள் எள்ளி நகையாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சிங்களம் படிக்கத் தவறியதால் உத்தியோக உயர்ச்சி பெறுதிருந்த ஊழியர்கட்கு மீண்டும் உயர்ச்சி வழங்க முடிவு செய்திருப்பதால், சிலர் தாங்கள் செய்து கொண்ட மதியீனத்துக்காக வருந்துகின்றனர்.

‘தமிழரசுக் கட்சியின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால், சிங்கள ஊழியர்களைப் புதிதாக வேலைக்கு அமர்த்த வேண்டிய அவசியம் சிறிது காலத்துக்கு ஏற்படாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழில் கடமையாற்றத் தொடங்கிவிட்டால் இன்னும் பல தமிழ் அரசாங்க ஊழியர்களைப் புதிதாக அமர்த்த வேண்டிய நிலை ஏற்படும். இப்பொழுது அந்தப் பகுதியிற் கடமையாற்றும் சிங்கள ஊழியர்கள் தென்னிலங்கைக்கு மாற்றப்படுவர். அப்பொழுது சிங்கள ஊழியர்களின் தொகை அளவு மீறி நிற்கும். இதற்கேற்ப புதிதாகத் தொழில் வசதி தமிழ் படித்தவர்களுக்கே கிடைக்கும்”

### பத்திரிகையாளர் தாகராம்

“யு. என். பிக் கூட்டை ஏற்படுத்திய தரகர் எரிக்கரையைச் சேர்ந்த திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்கா என்பது இப்பொழுது அம்பலமாகியுள்ளது.

“அவர் தேர்தலுக்குமுன்பு யாழ்ப்பாணம் சென்று புளூரியன் ஒட்டலில் தங்கியிருந்து திரு. திருச்செல்வத்தைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர் என்று அறியப்படுகிறது, தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பை யு என். பி.க்குப் பெற்றுக் கொடுக்க திரு. திருச்செல்வம் வாக்களித்தார் என்று தெரிகிறது.”

—ஜனசத்திய (4-4-65)

### அன்னிய மொழி மீண்டும் ஆட்சி புரியும்

“சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் மொழிக் கொள்கையின் காரணமாக சிங்களத்திற் குறிப்புகளை எழுதிய இவ்வரசாங்க அதிகாரிகள் இப்பொழுது எவ்வித பயமும் அச்சமுமின்றி ஆங்கிலத்தில் குறிப்புகளை எழுதவும், ஆங்கிலத்தில் அரசாங்கக் கடிதங்களை அனுப்பவும் ஆரம்பித்துள்ளதாக பல அலுவலகங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

யு. என். பி. — தமிழரசு ஒப்பந்தத்திற்கிணங்க தமிழ் அரசாங்க ஊழியர்கள் இப்போதிருந்தே ஆங்கிலத்திற் கடமையாற்றத் தொடங்கிவிட்டனர்”

—எத்த(3-4-65)

### பிக்குவை அவமதித்தனர்

“ரக்வானை புனித ஜோனிஸ் தமிழ் பாடசாலையின் மாணவர்களும் மாணவிகளும் இம மாதம் முதற் திகதி பகல் பாடசாலை முடிந்து வீதிக்கு வந்த பொழுது வீதியிற் சென்று கொண்டிருந்த ஒரு பௌத்த பிக்குவைப் பார்த்து “காவி” உடைக் காலி” என்று கூறினார்களாம். பிக்கு இது பற்றி பாடசாலைக் கத்தோலிக்க குரு ஒருவரிடம் புகார் செய்வதற்காக சென்ற பொழுது மாணவர்கள் கூச்சலிட்டு அவரைக் கேலி செய்யவும் கிண்டல் செய்யவும் ஆரம்பித்தனர். இதனுல் ஏற்படப் போன கலவரத்தைச் சிங்கள வாலிபர்கள் சிலர் தலையிட்டதால் தவிர்க்க முடிந்தது.

—“எத்த”, (3-4-65)

### சந்திக்கு....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் புகையிரத நிலையத்தை விட்டு சரக்கு வெளியே போவதில்லை. அங்கேயே வைத்து விலாசம் மாற்றி ஒட்டப்பட்டு மீண்டும் கொழும்புக்கு அவை பயணமாகின்றன.

அண்மையில் மலைநாட்டிலுள்ள ஒரு ரயில் நிலையத்தில் இச்சம்பவம் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டுள்ளதாம்.

### ‘தீபம்’

‘தீபம்’ என்ற பெயரில் இலக்கியத் திங்கள் இதழ் ஒன்று தமிழ்ப் புத்தாண்டிலிருந்து வெளிவருகிறது. ‘கல்கி’ப் பத்திரிகையின் துணை ஆசிரியராகவிருந்த திரு. நா. பார்த்தசாரதி [illegible] இதழின் ஆசிரியராகப் பணியாற்றுவார்.






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எது நாகரீகம்?

—பத்மினி—

நாகரீகம் என்றால் என்ன என்று பொருள் தெரியாமலே இக்காலப் பெண்கள் பல மூடப்பழக்க வழக்கங்களில் தங்கள் புலனைச் செலுத்துகின்றனர். தங்கள் உடலையும் உடைகளையும் ஏதோ ஒரு வகையில்

## உடல் அழகு....?

மாற்றி அமைத்துக் கொள்வதையே நாகரீகம் என்று இவர்கள் கருதிவிடுகிறார்கள்.

உண்மையான நாகரீகம் உள்ளத்திலேயிருந்து தோன்ற வேண்டும். படித்தவர்கள் பண்புடன் நடந்து கொள்ளப் பழகிக் கொள்வதேதான் நாகரீகமாகும்.

ஆங்கில மொழியைப் படித்துவிட்டு ஆங்கில சினிமாக்களைப் பார்த்துவிட்டு ஆங்கிலப் பாணியிலேயே உடையுடுத்திஆங்கில மாதர்களைப் போலவே தங்கள் உடலங்களை அலங்கரித்துக் கொள்ளுவது மட்டும் உண்மையான நாகரீகமாகிவிடுமா?

ஆங்கில மோகத்தில் உழல்பவர்கள் நம்நாட்டு உடைமுறைகளை உதாசீனம் செய்துவிட்டு,பிடவை உடுப்பதை மறந்து உயரமான கவுன்களை - முதுகுப்புறமும், நெஞ்சுப்புறமும் தேவையற்ற வெட்டுகளையும் விரிவுகளையும் வைத்து, அணிவதானது அழகைத் தருவதாகக் கருதப்படுமானால் நிச்சயம் ஏமாற்றமே அடைய வேண்டிவரும். அவையாவும் பாமரர்களாலேயே எள்ளி நகையாடப்படும் அவலட்சணங்களாகவே யிருக்கின்றன.

தங்கள் முகங்களுக்கு மேல் நாடுகளிலேயிருந்து தருவிக்கப்படும் கண்ட கண்ட 'மேக்கப்' சாதனங்களை உபயோகிப்பதும் இயற்கையான அழகையே மாற்றி விடுவதும் கோமாளிக் கூத்தாகவே இன்று சமூகத்தில் கொள்ளப்படுகிறது. மேல் நாட்டுப் பொருட்களில் பல, பல்வேறு காரணங்களுக்காகப் பாவிக்கப்பட வேண்டியன.

சில முகப் பூச்சுச்சாதனங்கள் பல நினைகளில் இருக்கின்றன. ஒரே பொருளில் பல தரப்பட்ட பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வோர் வகைச் சருமத்துக்கும் ஏற்ப வரிசையாக இலக்க மிடப்பட்டிருக்கும். ஆனால் நமது மங்கையர் இவற்றின் வித்தியாசங்களை உணராது, ஒன்றிருக்க வேறொன்றைத் தடவி வேடிக்கை காட்டுவது கேலிக்கிடமாகின்றதேயன்றி போற்றப் படுவதாகத் தெரியவில்லை.

நமது மங்கையர் நமது நாட்டுக்கும் நடப்புக்கும் ஏற்ற பண்புடன் நடக்கப் பழகிக் கொள்வதே தான்

## உடை அழகு....?

நாகரீகத்தின் நற் தொண்டாகும்.

மணமாகுமுன்னர்—மாணவப் பருவத்தில் கல்வியில் கருத்தூன்றிக் கற்பது, வீட்டிலிருக்கும் போது பெற்றோருக்கு உதவியாக இருந்து வீட்டைக் காக்கும் பணியையும் சமயல் முறைகளையும் பழகுவது முதலியன கடமையாகும்.

மணம் முடித்தால் கணவனின் கருத்தறிந்து அவன் விருப்பப்படி தன்னை மாற்றி அமைத்து அவனை மகிழ்விப்பதே கடமையாகும். மணமாகு முன்னரும், மணமான பின்னரும் ஒரு பெண் கைக்கொள்ளும் மேற்கூறப்பட்ட இரு கடமைகளும் தான் நாகரீகத்தின் தலைவாயில்.

பெற்றோரைப் பேணி நடக்கும் பெருந்தன்மையும் கட்டிய கணவனின் கருத்தோடு இசைந்து ஒழுகும் பண்பும் கொண்ட ஒரு மங்கையே நாகரீத்தின் தலைவி எனக் கொள்ளப்படுவாள்.

உடலழகையும் உடை அழகையும் கொண்டு மட்டும் மங்கையரின் நாகரீகத்தைக் கணக்கிட்டு விட முடியாது. மங்கையரின் உள்ளத்து அழகே உயர்ந்த நாகரீகத்தின் திறவுகோல்..!

## உள்ள அழகு....?

# நீங்களும் நானும்

சகோதரிகளே!

உங்கள் பகுதியான மங்கையர் சங்கத்தை மீண்டும் சிறப்புற வளர்ச்சியடையச் செய்யவேண்டியவர்கள் நீங்களே.

குடித்தனப் பாங்குபற்றிய சிறு கட்டுரைகளை எழுதி அனுப்புங்கள். வீட்டு அலங்காரம், உடை அலங்காரம், உணவு தயாரிக்கும் முறை முதலியவற்றை யிட்டு எழுதுங்கள். தகுதிகண்டு அவற்றைப் பிரசுரிப்போம்.

போலி நாகரீகத்தில் உழலும் நமது மங்கையர்பற்றி செல்வி பத்மினியின் கட்டுரையைத் தருகிறோம். அடுத்தவாரம் 'கமல மலர்' எழுதும் 'கோதையரின் கூந்தல்' என்ற கட்டுரையும் வேறு பல புதிய அம்சங்களும் இப்பகுதியில் இடம் பெறும்.

பிரசுரமாகும் கட்டுரைகளைப்பற்றிய விமரிசனங்களையும் எழுதுங்கள்.

உங்கள்

செல்வி அக்கா

# வெட்கம்

பார்வதிக்கு அன்று காலை முதல் இருப்புக் கொள்ளவில்லை. அடுப்படிக்கும் முன்கட்டுக்குமிடையில் இதுவரை நூறு தடவைகளுக்குமேல் தாவிப்பறந்து விட்டாள். அவளுடைய காலில் ஏதோ சக்கரம் தான் பூட்டப்பட்டிருக்குமோ என்றுதான் பலரும் கருதினார்கள். பம்பரம்போல் சுழன்று வேலைகளை முடித்துக்கொண்டிருந்தாள்.

அத்தனை வேலைக்காரர்கள் இருந்தும் அவர்கள் எவரையுமே அன்று அவள் எதுவித வேலையும் செய்ய விடவில்லை. தானே முழு அலுவல்களையும் பார்க்கத் தொடங்கிவிட்டாள். அவளுடைய தாயைக்கூட அவள் எந்தப் பொருளையும் தீண்ட விடவில்லை.

## நிமிடக் கதை

காலையில் 4 மணிக்கெல்லாம எழுந்துவிட்டாள். நாலரை மணிக்கெல்லாம் அவளுடைய அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அவளுடைய கையால் வேலை காப்பி கிடைத்தது.

அவளுடைய துள்ளலைக் கண்டு அவளுடைய அப்பாவே வெளி வெளியாகக்கேட்டும் விட்டார்: 'என்ன பாரு! இன்று மணியம் வரப்போகிறான் என்பதனாலேதானே இவ்வளவு ஆரப்பாட்டம்? ம்...இவ்வளவு நாள் இல்லாத உற்சாகம் எங்கிருந்து தான் உனக்கு வந்ததோ?' இப்படித் தந்தையார்கேட்க அவருடன் தாயாரும் சேர்ந்து விட்டால் கேட்பானேன்.

பெற்றாரின் கிண்டல்களைக் கேட்டு அவளுடைய கன்னங்கள் இரண்டும்கன்றிப்போய் விட்டன. எலிமிச்சம்பழ நிறத்து முகம் சிவந்து தக்காளிப்பழ நிறமானதில் ஆச்சரியமில்லையே!

நேற்றுத்தான் தகவல் வந்தது. மணியம் வருகிறான் என்று. அவனைப்பார்த்து சரியாக மூன்று வருடங்களாகி விட்டனவே! இந்த மூன்று வருடங்களில் என்னமாக மாறியிருப்பான்? அட, அவள் மட்டும் என்னவாம்? மணியம் லண்டனுக்கு மேல் படிப்புப் படிக்கச்செல்லும் போது அவள் ஆக பதினாறு வயதுப் பெண். இன்று...!

மணியம் வருவான். அவன் முன்னே எப்படித்தான்செல்வது? அவன் என்னென்னவெல்லாம் கேட்பான்? இனந்தெரியாத வேதனை ஒன்று அவளை வாட்டி வதைத்தது.

அதோ! கார்ச் சத்தம், ஆமாம் மணியம்தான் வந்து விட்டான். அப்பா ஸ்டேசனுக்குச் சென்று அவனை அழைத்துவந்துவிட்டார்.

'பாரு! பாரு!' அப்பா கத்திக்கொண்டே உள்ளே வந்தார். ஆனால்பார்வதி விட்டுக் கதவு மூலைக்குள் புகுந்து கொண்டாள். அவள் இருப்பிடத்தேடி அவனே வந்து விட்டான். 'அடடே என்னடி இப்பிடி வளர்ந்துவிட்டாய் சின்னவளாகவிருந்த நீ பெரியவளாகி சேலை கட்டிக்கொண்டதாலே கூடப் பிறந்த அண்ணனைக்காணவே வெட்கம் வந்துட்டுதா? வாடி வா...இங்கவந்துபார் என்னென்னெல்லாம் உனக்காக வாங்கி வந்திருக்கிறேன் என்று' இவ்வாறு தனது தங்கையை அணைத்துக்கொண்டு சென்றான் மணியம். அவளுடைய வெட்கம் அப்போதும் மறையவில்லை.

—விஜயா.

# தமிழகத்தில் பிறந்த வசந்த விழா மேற்கில் சிறக்கிறது

பண்டைக் காலத் தமிழகத்தில் வசந்த காலத்தை வரவேற்பதற்காகத் தமிழ் மக்கள் விழாவெடுப்பது வழக்கம். 'வசந்த விழா' வன்று ஆடவரும் பெண்டிரும் வசந்த காலத்திற்கு வரவு கூறி, இயற்கை அன்னையின் புகழ்பாடி, நாட்டிலும் வீட்டிலும் வளம் கொழிக்க அருளும்படி இறைவனை வேண்டி வீதிதோறும் ஆடிப் பாடிக் களித்தார்கள்.

தமிழ் மக்கள் முதலில் கொண்டாடிய இந்த விழா இன்று தமிழ் நாட்டில் மரபற்றுப் போய்விட்டது. மேற்கு செர்மனியில் இந்த 'வசந்தவிழா' கடந்த நூற்றாண்டுக்கு மேலாக மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. செர்மானியர் இவ்விழாவை 'கார்னிவல் விழா' என்று அழைக்கிறார்கள்.

மேற்கு செர்மனியில் கடந்த 150 ஆண்டுகளாக ஆண்டு தோறும் நடந்து வரும் 'கார்னிவல்' என்னும் கோலாகல விழா இவ்வாண்டில் சிறப்பாகக் கொண்டா

# மங்கையர் சங்கம்

டப்பட்டது. மக்களைக் கொடுமைப்படுத்திய குளிர் காலத்தின் பூதங்களையும் தீய சக்திகளையும் விரட்டியடித்து,வசந்த காலத்திற்கு நல்வரவு கூறி வரவேற்கும இந்த விழா இந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொன்று தொட்டு உல்லாசமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

'கார்னிவல்' விழா சம்பிரதாயப்படி ஒவ்வொரு ஆண்டிலும் 11வது மாதம் 11ம் நாள் 11-11க்கு மணி ஆரம்பிக்கிறது. ஆனால், உண்மையில் இவ்விழாவின் கொண்டாட்டங்களமுழுவதும் சனவரி மாதத்திற்தான் நடக்கின்றன. புத்தாண்டின் மகிழ்ச்சியும், விழாவின் கோலாகலமும் ஒருங்கிணைந்து சனவரி மாதம் முழுவதும் நாளும் திருநாளாகத் திகழ்கிறது நாடு முழுவதும் விழாக்கோலம் பூண்கிறது.

எங்கு பார்த்தாலும் உல்லாச ஊர்வலங்கள், உற்சாகக் களியாட்டங்கள், ஆடல், பாடல், நடனம், நாடகம், இசை ஆகியவற்றுடன் நகரங்கள் களைகட்டி களிப்பூட்டும் காட்சி தருகின்றன. மக்கள் கட்டுக்கடங்காத ஆனந்த வெள்ளத்தில் மிதக்கிறார்கள். வீதியெல்லாம் ஊர்வலங்கள் நடக்கின்றன. [illegible] கொண்டு ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் ஊர்வலத்தில் செல்கிறார்கள்.

### நகைச்சுவை விருந்து

'கார்னிவல்' விழாவின் கடைசி மூன்று நாட்களும் கோலாகலம் உச்சக் கட்டத்தை எட்டுகிறது விழாவின் இளவரசர்களும், இளவரசிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு தெருக்கள்தோறும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் படுகிறார்கள். கவர்ச்சியாக உடை அணிந்த அழகிகளின் அலங்கார அணிவகுப்புகளும், ஆண்-பெண் கட்டித் தழுவி ஆடும் நடனங்களும் நடக்கின்றன. விகடகவிகளை அமர்த்தி நகைச்சுவை விருந்தளிக்கிறார்கள். இந்த விழாவிற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

பணம் இல்லாவிட்டால் ஆடைகளையும் படுக்கைகளையும் அடகு வைக்கக்கூட அவர்கள் தயங்குவதில்லை. மக்கள் ஆடிப்பாடி சிரித்து மகிழ வேண்டுமென்பதே இவ்விழாவின் நோக்கம். மூனிச் நகரில் பெரிய நகைச்சுவை மாநாடுகள் நடக்கின்றன இம்மாநாடுகளில் தலை சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர்கள் கலந்து சிரிக்கச் சிரிக்கப் பேசி மக்களை மகிழ்விக்கிறார்கள்.

குழந்தைகளுக்கான தனி 'பால்' நடன நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெறுகின்றன. இந்த நடன அரங்குகளுக்குக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பெரியவர்கள் வாசல்வரை மட்டுமே வரலாம். உள்ளே செல்ல முடியாது. நடனம் முடியும்வரை [illegible] வெளியிலேயே இருக்க வேண்டும்.

(யூ. பி. எஸ்.)

ஆனந்த லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL · TRADE MARK · 174 SEA STREET, COLOMBO 11

நீர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் குடிப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மேல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய நோட்டீஸ் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நீர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# $4\frac{3}{4}$ அடியும் $1\frac{3}{4}$ அடியும் கொடுத்த 1 அடி

தமிழகத்தின் காவியங்களில் தலை சிறந்தது கம்ப ராமாயணம்! கவிகளில் உயர்ந்தவன் கம்பன்!—இது தமிழ் வல்லுனர்கள் கண்ட முடிவு. யார் யாருக்கோ 'அமரர்' பட்டம் வழங்கியுள்ள தமிழகத்தில் கம்பனை அமரர் கம்பன்' என்று ஏனோ புகழ் சூடாமல் விட்டு விட்டார்கள் என்பதுதான் தெரியவில்லை. ஒரு வேளை கம்பனையும் குறை காண ஒருவன் பிற்காலத்தில் வருவான் என்பதை முன்பே அறிந்து விட்டார்கள் போலும்.

12-ம் நூற்றாண்டில் தோன்றிய இந்த காப்பியம் 19-ம் நூற்றாண்டு முடியுமட்டும், இணையுமற்று தலை நிமிர்ந்து தன்னிகரற்று தனி நடை போட்டு வந்ததை நாம் படித்தும், கேட்டும் இருக்கிறோம். சொல்லாழத்தில் சிறந்த, கருத்தில் மிளிர்ந்த அறிவுரைகள் பொதிந்த இத்தகைய கம்ப ராமாயணத்தையே தமிழகத்தில் 20-ம் நூற்றாண்டில் ஒருவர் எதிர்க்கிறாரென்றால் அது உண்மையிலே அறிவுடையோர், ஆராய்ச்சி வல்லுனர், ராமாயண பக்தர்கள் போன்றோரின் சிந்தனைகளைக் கிளறி, குடையாமல் இருக்க முடியாது.

தமிழுக்காக கெஞ்சிக் கிடக்காத கவிஞன்—தமிழை கொஞ்சிவிளையாடிய கவிஞன்—கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும்கவிபாடும் என்று புகழ் பெற்ற கவிஞன்—கல்வியில்பெரியவன் கம்பன்" என்று விருது பெற்ற அம்மாகவிஞன் இயற்றிய காவியத்தையே ஒரு அறிஞர் குறை கூறினார் என்றால்—என்னே அவருடைய அறிவுத் திறன்.

### குறை கண்டார்

குறை காண முடியாதது என்று 19-ம் நூற்றாண்டு வரை பவனி வந்த மாபெரும் காப்பியத்தைக் குறை கூறியதைக் கேட்டு கவிஞர் உலகு மூக்கின் மேல் விரலை வைத்து நின்றது. ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சியடைந்தனர். கம்பராமாயண "அதாரிட்டி" திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அறிஞர் அண்ணாவோடு வாதிட்டு புறமுதுகு காட்டி "மீண்டும் சந்திக்கிறேன்" என்று மீளாத இடத்திற்கே போய்விட்டார். துணிவு உள்ளவர்கள் எல்லாரும் கம்பன் மேல் எப்படி அண்ணாத்துரை குறை கூறலாம் என்றுதான் கேட்டார்களே தவிர, ஏன் குறை கூறினார் என்ற காரணத்தை சிந்தித்தோ, ஆராய்ந்தோ பார்த்ததில்லை. காரணம்: கம்பன் கல்வியிற் பெரியவன், அவன் கூற்று மருவற்றதாய்த்தான் இருக்கும் என்ற மிஞ்சிய நம்பிக்கை, ஆனால், அறிஞர் அண்ணாவோ, 'யானைக்கும் அடி சறுக்கும்' என்ற தத்துவத்தை கம்பன் காவியத்தில் வைத்துத் துணிந்து உரசிப் பார்த்தார் அந்த யானைக்கு அடி மட்டும் சறுக்கவில்லை, சறுக்கிய அடி சகதியில் சிக்கியும் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்தார். தெரிந்தவர் எதிர்ப்பதற்கு அஞ்சி ஊமையாக இருந்துவிடவில்லை. ஆதாரத்துடன் அதைத் துணிந்து கூறினார். ஆற்றல் இருந்த காரணத்தால், சேற்றில் சிக்கிய அந்தக் 'கவியாகிய யானை' தன துதிக்கையால் உடல் முழுவதும் சேற்றை அள்ளிப் போட்டதும் அல்லாமல் பார்த்து நிற்பவர்கள் மேலும் சேற்றை உமிழ்ந்தும் விட்டது.

நாட்டின் அல்லது குறிப்பிட்ட சமுதாயத்தின் பெருமையை, அதன் பண்பை உலகறிய செய்வதற்காகவும், வருங்காலம் அதை படித்து தெரிந்து பெருமை கொள்வதற்காகவும், எழுதப்பட்ட காவியத்தில் தன்மானத்திற்கு இழுக்கு தேடும் நிலையில் கவிகள் இருந்தால் எந்த தமிழ் மகன்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்? பூசை செய்து போற்றி, புகழ்ந்து புனிதமாகக் கொண்டாடப்படும் ராமாயணம் 'பாண்டியன் கொக்கோகம்' தரும் இச்சையைக் கிளறும் பச்சை உண்மைகளைத் தருவதென்றால் அது பூசை செய்யத்தக்கதா என்று பக்தர்களைக் கேட்டார். ஆரிய சூழ்ச்சிக்குத் தமிழனை அடிமைப்படுத்தும் கற்பனை காவியம் தேவைதானா? அதைத் தீக்கிரையாக்க வேண்டுமன்றோ? என்று தமிழகத்தின் $3\frac{1}{2}$ கோடி தன்மானமுள்ள தமிழர்களைக் கேட்டார். அவர் சுட்டிக்காட்டியுள்ள ஆயிரம் காரணங்களில் உதாரணத்திற்கு ஒன்று காண்மின்.

### கம்பன் காட்டிய பெண்

சீதை இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட பிறகு ராமன் அனுமனின் துணை கொண்டு சீதையைக் கண்டு பிடிக்க முயற்சி செய்கிறான். ஒவ்வொரு திசைக்கும் ஆட்களை அனுப்பி விட்டு, அநுமனை தென் திசைக்கு அனுப்பி அவனுக்கு சீதை எப்படி இருப்பாள் என்று அவளைப் பற்றிய அடையாளங்களைக் கூறுகிறான். கம்பனின் கீழ்த்தரமான அந்தக் கற்பனைக்கு அது ஒரு தகுந்த சான்று! பகுத்தறிவிற்கும் பண்பிற்கும் புறம்பான கற்பனை! படியுங்கள் இப்பாடலை.

வாராழி கலசக் கொங்கை வஞ்சி
போல் மருங்குவாள் தன்
தாராழிக்கலைசார் அல்குல் தடங்
கடற்கு உவமை நக்கோய்
பாராழிபிடரில்தங்கும்,பாந்தளும்
பணிவென்றோங்கும்
ஓராழித் தேரும் கண்ட உனக்கு
நான் உரைப்பதென்ன?

பாடல் படிப்பதற்கு சுவையாக இருக்கிறது. ஆனால், வேண்டாத ரசம். ரசத்தில் காமம் கமழ்கிறது. இது தேவைதானா?

ஒருவனையோ, ஒருவளையோ அடையாளம் தெரிய அவனது அல்லது அவளது வெளித் தோற்றத்தின் அடையாளங்களைக்கூறுவதுதான் வழக்கம்—அதுதான் சரி. ஏனெனில் அவற்றிலிருந்து கண்டு கொள்வதுதான் இலகுவாகும்.

ஆனால் கம்பனின் பகுத்தறிவு அவ்வாறு வேலை செய்யவில்லை. வெளித் தோற்றத்தின் அடையாளங்களைக் கூறாது, உள்தோற்றத்தின் அடையாளங்களைக் கூறி கொக்கோகம், முனிவருக்கும் மேலாகத் தனக்குத் தெரியும் என்று தன்னைக் காட்டிக்கொண்டார் காப்பிய முனிவர். இவ்வாறு சீதையின் மறைவிடத்தைப் பற்றிக் கூறியது பண்புடைமைதானா? ஒரு கணவன் தன் மனைவியைப்பற்றி அடுத்தவனிடம், அதுவும் பிரமச்சாரியாக இருக்கும் அநுமானிடம் கூறுவானா? எந்த ஆங்கிலக் கவியும், இச்சைகளை எழுப்பும் வகையில் எழுதும் பிரான்சு நாட்டு கவிஞர்கள்கூட இவ்வாறு அப்பட்டமாக எழுதியதில்லையே. மறைவிடமான உறுப்புக்களின் நீள, அகல ஆழங்களைப்பற்றி அப்பட்டமாக சொல்வது எந்தக் கவிஞனும் கையாளாத ஒன்று அன்றோ!

ஒரு வேளை இராமயண காலத்தில் பெண்களையோ ஆண்களையோ இவ்வாறு [illegible] என்று அடையாளம் [illegible] இப்படி சில அடையாளங்களைக் கூறுவதுதான் வழக்கம் என்றிருந்தால், கம்பன் கூற்று கால வழக்கத்தை அனுசரித்து எழுதப்பட்டது என்று கூறி அமைதியடைந்திருக்கலாம். அவ்வாறல்லவே. வாலிக்கும், சுக்ரீவனுக்கும் வேறுபாடு தெரியவில்லை என்று இராமன் சொன்னதும் சுக்ரீவன் அண்ணனின் அந்தரங்க உறுப்புகளின் பருமனைப்பற்றி

### "வடவைக் குரல்"

சொல்லி அதன்மூலம் இது வாலி என்று தெரிந்துகொள்ளுங்கள் என்று சொல்லவில்லையே. தம்பி அண்ணனைப் பற்றி பகைமையிலும், வெறுப்பிலும் சொல்லவிரும்பாத ஒன்றை, கணவன் தன் மனைவியைப்பற்றி அன்பிலும், சோகத்திலும் எவ்வாறு சொல்லமுன்வந்தான்?

### வள்ளுவர்காட்டிய பெண்

இத்தகைய அடையாளம் கூறவேண்டிய கட்டம்ஒன்று வள்ளுவருக்கும் வந்தது. அவர் அதைக் கையாண்டிருக்கும் விதம் எத்தகைய பண்பும், அறிவிற்குகந்ததும், சிறப்பு, நிறைந்ததுமாக இருக்கிறது.

திருக்குறளின் இன்ப இயலில் ஒரு கட்டம்; குறிப்பிட்ட இடத்திற்குத் தலைவி வந்திருப்பாள். அவளைத் தேடிச் சென்று காணவேண்டும் என்ற ஆவலுடன் தலைவன் புறப்படுகிறான். என்றாலும் அவள் அங்கு வந்திருப்பாளோ என்னவோ என்று ஒரு சந்தேகம் எழுகிறது. தோழனிடம் அவள் வந்ததை அறிந்துவர கூறுகிறான். அதற்கு அவன் 'நண்பா! நீ கூறும் சோலையில் எத்தனையோ சுந்தரவல்லிகள் வந்திருப்பார்களே, அவர்களுள் உன் காதலியை மட்டும் வேறுபடுத்தி அடையாளம் காண்பது எவ்வாறு?" என்று வினவ, அதற்குத் தலைவன் கூறும் பதில் பண்பு குறையாமல், தூய காதலுக்கும், கற்புக்கும் புகழ் சேர்ப்பதாயிருக்கிறது. பாடலைப் படியுங்கள்:

"முறிமேனி முற்றம் முறுவல்
வெறி நாற்றம்
வேலுக்கண் வேய்த்தோள்
அவட்கு

என்னென்ன அடையாளங்களைச் சொன்னால் பாங்கன் கண்டு அறிந்து கொள்வானோ அவைகளை மட்டும் சொல்கிறான். அந்த அடையாளங்களை மீண்டும் படியுங்கள்.

பசுந்தளிர் போன்ற மேனி, முத்துப் போன்ற பல் வரிசை, அவள் மேனியிலிருந்து இயல்பாக எழும் நறுமணம், மூங்கில் போன்ற தோள் இவைகளை ஒருகணம் தன் மனக்கண் முன்பு கொண்டு வருகிறான். என்றாலும் அவைகள் அவனுக்குத் திருப்தியாகத் தெரியவில்லை. ஏனென்றால் இத்தகைய உடலமைப்பு மற்ற பெண்களுக்கும் இருக்கலாம் அல்லவா! ஆகையால் அவளிடம் உள்ள சிறப்பான அடையாளம் ஒன்றை அவன் பாங்கனிடத்தில் கூற விரும்புகிறான். தோழனே! நஞ்சுபூசப்பட்ட வேலினைப் போல அவள் கண்கள் தோன்றும், வேற்றான் ஒருவன் அவளை வெறிக்கப் பார்த்தால் அதை சகிக்காது அவள் சிவந்துநோக்குவாள்—'வேலுண்கண்'—அது வேல் கொண்டு அவனைக் குத்துவது போலிருக்கும்; அந்த வேகத்தையும், வேதனையையும் அவனால் தாங்க முடியாது. இதுதான் அவளுக்குச் சரியான அடையாளம். சென்று அவளைக் கண்டு வருக என்கிறான்.

எவ்வாறு அமைந்திருக்கிறது வள்ளுவர் கூற்று! கற்புள்ள காதலிக்கு இலக்கணம் சேர்க்கிறார் வள்ளுவர். கம்பனோ காதலியின் மூலம் காமத்தைக் கிளறுகிறான். விந்தை! வேடிக்கை! கம்பன் கட்டியது கோயிலா? சிந்தியுங்கள்.

$4\frac{3}{4}$ அடி உயரமுள்ள அறிஞர் அண்ணா கம்பனுக்குச் சாட்டை கொடுத்ததும், $1\frac{3}{4}$ அடிகளில் வள்ளுவன் அதற்கு மாற்றுக்கூறியதும் இலக்கிய உலகின் கவிகளின் கண்களை இனியாவது திறக்கட்டும். கம்பனின் 'நவுட்டாக்'கிற்கு, (போதைதரும் பொருளுக்கு பம்பாயில் வழங்கும் பெயர்) அண்ணாவின் 'டோஸ்'கும், வள்ளுவனின் 'பிகாம்'ளக்சும் படித்துப் படித்து மகிழ வேண்டிய ஒன்றாகும்.

—இராஜ்டன.

# அணுயுகத்துக்குவழிகாட்டிய விஞ்ஞான மேதை ஐன்ஸ்டைன்

நியூயார்க் நகரில் ரிவர்ஸைடு ஆலயத்தின் வெண் சுவர்களில் பெருமக்கள் 600 பேரின் திருவுருவங்கள் சுண்ணாம்புக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இவர்கள் பல வேறு காலங்களையும் சேர்ந்தவர்கள். ஒரு வரிசையில் விஞ்ஞானிகள் 14 பேர்காட்சியளிக்கின்றனர். அவற்றுள், ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் படத்தில் கீழ் பொறிக்கப்பட்டுள்ள வாசகம், "தமது தலைமுறையின் தலைசிறந்த விஞ்ஞானி மட்டுமல்ல. இவர் ஒரு சிறந்த அறிவாளியும் கூட" என்று கூறுகிறது.

ஜெர்மனியில் பிறந்த இந்த மாபெரும் அமெரிக்கக் கணித-பௌதிக மேதை, பிரபஞ்சம் பற்றி மனிதன் கொண்டிருந்த கருத்தையே மாற்றியதோடல்லாமல் அணுயுகத்துக்கு வழி திறந்தும் வைத்தார். வரலாற்றில் இடம் பெற்ற மரணத்தை வென்ற எண்மரில் இவர் ஒருவர் என்ற புகழ் பெற்றவர். விஞ்ஞான மேதை என்ற முறையில் வரலாற்றில் இடம் பெற்றுள்ள பித்தாகரஸ், ஆர்க்கிமிடிஸ், கோப்பர்னிக்கஸ், நியூட்டன் போன்ற வெகு சிலரோடு சேர்ந்து வீர நடை போட்டவர், ஐன்ஸ்டைன்.

அவரது பணி,'விஞ்ஞானம் ஒருபோதும் கண்டிராத மாபெரும் ஒரு தனி முன்னேற்றம்' என்றும், அவர் [illegible] நிலைக் கொள்கையை முதன் முதலில் வெளியிட்ட 30 பக்கக் கட்டுரை, "இந் நூற்றாண்டின் மிக முக்கியமான பத்திரம்" என்றும் சிறப்புப் பெற்றுள்ளன.

### வல்லவனின் ஆயுதம்!

எழுதுகோல், குறிப்பு ஏடு-இவை இரண்டுமே ஐன்ஸ்டைனின் கருவிகள். அவரது ஆய்வுக் கூடம் அவரது தொப்பியின் கீழிருந்தது. இருந்தும், அவரது பார்வை 'டெலஸ்கோப் கருவி காட்டாத தொலைவுக்கும் 'மைக்ராஸ்கோப் காட்டாத நுட்பங்களுக்கும் எட்டியது. கண்ணுக்குத் தெரியும் துறைகள், தெரியாத துறைகள் இரண்டையுமே அவர் தன்னந்தனியாக ஆராய்ந்தார்,' ஒன்று, மற்றொன்றை எவ்வாறு சார்ந்துள்ளது என்று எடுத்துரைத்தார்.

ஜெர்மனியில் பவேரியா மாநிலத்தில் உல்ம் என்னுமிடத்தில் 1879 மார்ச் 14-ந் தேதி ஐன்ஸ்டைன் பிறந்தார். சிறுவனாக இருக்கையிலேயே அவர் கவிதைகள் எழுதுவது வழக்கம். அவர் படிப்பில் புலியல்ல; கூச்சம் மிக்கவர். தேர்வுகளில் அவர் பல தடவை தவறியதுண்டு.

பட்டம் பெற்ற பின்பு, அவர் ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் குடியேறினார். அரசாங்க உரிமைப் பதிவு அலுவலகத்தில் பரிசோதகர் வேலை கிடைத்தது. வேலை நேரத்தில் காகிதத் துண்டுகளில் அவர் தமது கருத்துக்களைக்குறித்து வைப்பார். தள்ளு வண்டியில் குழந்தையை வைத்து மாலை நேரங்களில் தெருவழியாகத் தள்ளிச் செல்கையில், அவ்வப்போது நின்று, வரிசை வரிசையாகக் கணிதக்குறிகளைக் குறித்துக் கொள்வார்.

### அணு! யுக வித்து

பிறருக்கு விளங்காத இக்குறிகளிலிருந்தே, நடப்பு நூற்றாண்டின் புரட்சியான

(10-ம் பக்கம் பார்க்க)

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஏப்ரல் மாதம் 11-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# போலிக் கோஷம்!

திரு. பொன்னம்பலம் மீண்டும் ஐக்கிய முன்னணிக் கோஷத்தை எழுப்பியுள்ளார். "ஐக்கிய முன்னணியின் அவசியத்தைத் தேர்தலுக்கு முன்பும் கூறினேன் தேர்தலின்போதும் கூறினேன் தேர்தலுக்குப் பிறகும் கூறுகிறேன்" என்று அவர் சென்ற வாரம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணி என்பதென்ன? அந்த முன்னணியின் அமைப்பு எப்படி இருத்தல் வேண்டும்? அஃது எப்படிச் செயற்படும்? தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக எவ்வகையில் அது பயன்படும்? ஆகிய விபரங்களை மட்டும் திரு. பொன்னம்பலம் என்றுமே விளக்கிக் கூறியதில்லை. ஆனால் திடீர் திடீரென மக்கள் முன் தோன்றும் போது மட்டும் அந்தக் கோஷத்தை எழுப்பிக்கொண்டு வருகிறார். இக்கோஷத்தில் ஏதோ ஒரு மந்திரசக்தி இருப்பதாக அவர் எண்ணுகிறார் போலும்!

ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஓர் அரசியற் கட்சி ஐக்கிய முன்னணிக் கோஷத்தை எழுப்புமாயின், அதனை மக்கள் சந்தேகக் கண்கொண்டே நோக்க வேண்டும். ஏனெனில், மக்களிடம் செல்வாக்கிழந்து நிற்கும் சிறு கட்சியொன்றிடமிருந்தே இக்கோஷம் கிளம்புவது வழக்கமாகும். அதனால் அக்கட்சிக்குப் பல நன்மைகளுண்டு. மக்களின் பேராதரவைப் பெற்ற பலம் வாய்ந்த ஒரு பெரிய கட்சியுடன் ஐக்கிய முன்னணி அமைப்பதுமூலம் தன்னை வளர்த்துக்கொள்வதற்கும், மக்களின் ஆதரவைக் குறுக்குவழியிற் தேடிக்கொள்வதற்கும் சிறிய கட்சிக்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே சிறிய கட்சிகள் எழுப்பும் ஐக்கிய முன்னணிக் கோஷம் மக்கள் மத்தியிற் தலைதூக்கி நின்று செல்வாக்குப் பெறுவதற்காக வகையாளப்படும் ஓர் அரசியற் தந்திரோபாயமேயன்றி, உண்மையில் மக்கள் நலனை [illegible]ாகக் கொண்டதன்று. பெரிய அரசியற் கட்சிகள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தந்திரத்தை உணர்ந்துள்ளன. எனவே அக்கட்சிகள் சிறிய கட்சிகள் எழுப்பும் ஐக்கிய முன்னணிக் கோஷத்தை வழக்கமாக நிராகரித்துவிடும்.

திரு. பொன்னம்பலம் எழுப்பும் இக்கோஷத்திலும் அதே அரசியல் உபாயம் அடங்கியிருப்பதைக் கண்டுபிடிப்பது கடினமன்று. இக்கோஷத்தில் திரு. பொன்னம்பலத்தின் காங்கிரசை வளர்த்துக்கொள்ளும் சுயநல நோக்கம் அடங்கியிருப்பது ஒருபுறமிருக்க, தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அத்தகைய ஐக்கிய முன்னணியொன்றினை அமைக்க வேண்டிய அவசியமெதுவும் கிடையாது என்பது மக்களின் கருத்தாகும். ஆகவே தமிழரசுக் கட்சி இந்த ஐக்கிய முன்னணிக் கோஷத்துக்கு பொதுவாக முக்கியத்துவம் அளிப்பதில்லை.

தமிழ்பேசும் மக்கள் ஏற்கனவே ஐக்கியப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருமே தங்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றி ஒரே விதமாகச் சிந்திக்கவும், பேசவும் செயல்படவும் தொடங்கிவிட்டனர். அவர்கள் தமிழரசுக் கட்சியின் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ளனர் அந்நம்பிக்கைக்குத் துரோகம் செய்யாமல், கட்சி பாராளுமன்றத்திலும் வெளியிலும் தொடர்ந்து உரிமைப் போராட்டங்களை நடத்திவந்துள்ளது இந்த நிலையில் மக்களின் நம்பிக்கையை இழந்த மற்றொரு சிறிய அணுவளவுக் கட்சியுடன் ஐக்கிய முன்னணி வகுப்பதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?

ஐக்கிய முன்னணி என்பது கட்சிகளின் தலைமை பீடத்திலுள்ள ஒரு சிலர் கூடி அமைத்துக்கொள்ளும் முன்னணியல்ல ஐக்கிய முன்னணி மக்கள் மத்தியில் ஏற்படவேண்டும் ஐக்கிய முன்னணியொன்று தேவைப்பட்டாலன்றி மக்கள் அத்தகைய முன்னணியொன்றினை அமைக்க முன்வரமாட்டார்கள். திரு. பொன்னம்பலத்தின் ஐக்கிய முன்னணி கோஷம்பற்றி தமிழ்பேசும் மக்கள் சிறிதும் சிரத்தைகாட்டாதிருப்பதிலிருந்தே அது அவர்களுக்குத் தேவையற்றது என்பது புலனாகிறது. தேவைப்படும்போது அக்கோஷம் மக்கள் மத்தியிலிருந்தே கிளம்பும்.

ஆதலின் திரு. பொன்னம்பலம் மக்களுக்கு வேண்டாத ஒரு கோஷத்தை மீண்டும் மீண்டும் கிளிப்பிள்ளையைப்போல கூறிக்கொண்டிருப்பதில் எத்தகைய பயனும் ஏற்படப் போவதில்லை, அமைச்சரவையில் இடம்பெற முயன்று தோல்வியுற்றதால், அதற்காகவும் ஒருமுறை ஐக்கிய முன்னணி கோஷத்தை எழுப்பவேண்டுமா? இது வெறும போலிக் கோஷம் என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர்.

ஆகவே பயனற்ற ஐக்கிய முன்னணி மந்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, ஆக்க பூர்வமான பணியில் ஈடுபடுமாறு திரு. பொன்னம்பலத்துக்கு யோசனை கூறுகின்றோம். தமிழ்பேசும் மக்கள் தங்களின் இழந்த உரிமைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் திரு. பொன்னம்பலத்துக்கு இருக்குமானால், உரிமைகளைப் பெறுவதற்காகத் தமிழரசார் செய்யும் பெரு முயற்சிக்குத் தமது ஒத்துழைப்பை அளிப்பது அவரது நீங்காக் கடமையாகும் என்பதை அவருக்குச் சுட்டிக்காட்டுகிறோம்.

# தமிழரசுத் தலைவரின் மறுப்பு ஏற்படுத்திய நிர்ப்பந்தம்

## உண்மையைக் கூறினர் திரு. பொன்னம்பலம்

## இடதுசாரிகளின் புதிய தத்துவம்

மற்றூர் பணிக்குச் சொந்தம் கொண்டாடிப் புகழ் பெறுவதில் சிலர் திருப்தியடைகிறார்கள். இன்னும் சிலர் தீக்காய்வார் போன்று பிரச்சினைகளை அணுகிவிட்டு நல்ல முடிவு கிட்டியவுடன் நமக்கும் பங்கு உண்டு என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள். இது போன்ற சம்பவம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்றுள்ளது என்று கூறினால் தவறாகாது.

இத்திங்கள் இரண்டாம் நாள் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் பேச்சு ஒன்றில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் ஐ. தே. கட்சியுடன் நடாத்திய பேச்சு வார்த்தையின் முடிவு பற்றி தன்னு (திரு. ஜீ. ஜீ)டைய அபிப்பிராயத்தையும் கோரியதாக' வெளியாகியிருந்தது. இச்செய்தி வெளியான அன்றே திரு. செல்வநாயகம் அவர்கள் 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு மறுப்புத் தெரிவித்தார்.

### தாமதம் ஏன்?

திரு. செல்வநாயகம் அவர்களின் மறுப்பு மூன்றும் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் வெளியாகியது. திரு. செல்வநாயகம் அவர்கள் அச்செய்திபிழையானது என்று குறிப்பிட்டிருந்தார்.

இத்தனையும் நடந்து முடிந்த பின்னர் ஆறும் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் திரு. பொன்னம்பலம் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார் அந்த அறிக்கையில் தமது பேச்சை பத்திரிகை நிருபர் தவறாக அனுப்பியிருந்ததாகவும், தான் அப்படிப் பேசவில்லையென்றும் குறிப்பிட்ட திரு. பொன்னம்பலம் பிழையான ஒரு 'செய்தியை மறுக்க திரு. செல்வநாயகம் அவர்கள் அவசரப்பட்டிருக்கத் தேவையில்லையென்றும் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டாம் திகதிப் பத்திரிகையில் வெளியான தவறான செய்தியைத் திரு. செல்வநாயகம் மூன்றும் திகதியே மறுத்து விட்டார். ஆனால் செய்திக்குரிய திரு. பொன்னம்பலம் தம்மைப் பற்றிய தவறான செய்தியைத் திருத்த ஆறும் திகதி வரை பொறுத்திருக்கிறார் என்பது யாவரும் கவனிக்கத்தக்கது. மேலும் இச்செய்தியைத் திரு செல்வநாயகம் திருத்தியிருக்காவிட்டால் திரு. பொன்னம்பலம் மறுப்புத் தெரிவித்திருப்பாரா என்ற கேள்வியும் தோன்ற இடமேற்படுகிறது.

திரு. பொன்னம்பலம் இச்சம்பவத்திற்கு முன்னர் இவ்விதம் செய்திகளில் ஏற்படும் தவறுகளை மறுத்திருப்பதாக எமது நினைவுக்கு எட்டிய சம்பவங்கள் எதுவுமில்லை. இந்த நிலையில் தமிழரசுத் தந்தை செய்தியைத் தவறு என்று அறிக்கைவிடுத்ததை 'அவசரப்பட்டுவிட்டார்' என்று திரு. பொன்னம்பலம் கூறுவதின் அர்த்தம் புரியவில்லை.

திரு. பொன்னம்பலம் பொதுவாகத் தான் பங்குபற்

றும் கூட்டங்களில் பேசப்போகும் பேச்சை முன்னதாகவே பத்திரிகை நிருபர்களிடம் கொடுத்துவிடுவார் என்ற அபிப்பிராயம் பொதுவாக பத்திரிகை உலகில் உண்டு. இந்த நிலையில் இப்பேச்சை முன்னதாகவே பத்திரிகை நிருபர்களிடம் திரு. பொன்னம்பலம் கொடுத்திருக்கலாம் என்று எண்ணுவதில் தவறில்லை,

### நிர்ப்பந்தம்

இச் சம்பவங்களை எடைபோட்டுப் பார்க்கையில் ஒரு உண்மை புலனாகிறது. இரண்டாம் திகதிப் பத்திரிகையில் வெளியான திரு. பொன்னம்பலத்தின் பேச்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

சுக்குத் திரு. செல்வநாயகம் அவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்காவிட்டால் திரு. பொன்னம்பலமும் மறுப்புத் தெரிவித்திருக்க மாட்டார். திரு. செல்வநாயகம் அவர்கள் மறுப்புத் தெரிவித்த காரணத்தினால், சரியோ, பிழையோ திரு. பொன்னம்பலமும் மறுப்புத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாததாகி விட்டது இந்த நிலையில் 'திரு. செல்வநாயகம் அவர்கள் மறுப்பை அச்சில் வெளியிட அவசரப்பட்டு விட்டார்' என்ற திரு. பொன்னம்பலத்தின் குற்றச்சாட்டு பலமற்றதாகிவிட்டது.

இச் சம்பவம் ஏனையவர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமையட்டும். கருத்துக்களைத் தெரிவிக்கும் பொழுது பொறுப்புணர்ச்சி வேண்டும். மாற்றார் பணியில் பெருமைகாணவோ, தீக்காய்வார் போன்று இருந்துவிட்டு சொந்தம் கொண்டாடவோ முனைவது பண்புடமையாகாது.

### மார்க்சிய வகுப்பு வாதம்

புதியபாராளுமன்றமுதற் கூட்டத்தின் போது எதிர்கட்சியினர் நடந்து கொண்ட முறை அதிர்ச்சியைக் கொடுக்காத போதிலும் நாட்டின் தலைவிரும்புபவர்களுக்கு நிச்சயம் வருத்தத்தைக் கொடுக்கவே செய்யும். தனிச் சிங்களவாதம் இன்று தனிப் பெளத்த சிங்களவாதமாகப் பரிணமித்து வளர்ந்திருப்பதை பலரும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது அன்றைய சம்பவங்கள்.

இத்தனிப் பெளத்த சிங்களவாதக் கூச்சலை மார்க்சிய கட்சியினரும் பகிரங்கமாகக் கிளப்புவது பலருக்கும் கவலையைக் கொடுக்கிறது. 1956ம் ஆண்டு 'சிங்களம் மட்டும்' சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட நேரத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து தீவிரமாக எதிர்த்தவர்கள்

(9-ம் பக்கம் பார்க்க)

## மங்களப் புத்தாண்டினில்....!

—சர்வானந்தன்—

சென்று மறைந்திடும் ஆண்டது
சிறந்து மலர்ந்ததோ? இல்லையோ;
அன்று அதுவரும் போதிலே
ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தம்!!!
இன்று பிறந்திடும் ஆண்டதும்
இன்னலுடைத்ததோ? இல்லையோ?
நன்று புத்தாண்டது ஆகையால்
நாங்கள் வரவது கூறுவோம்.

செந்தமிழ் நாவில் புரண்டிடும்
தெய்வத தமிழ்க்குடி நாங்களும்
மாந்திட இன்பம் மனம்நிறை
மங்களமான புத்தாண்டிது
வேந்தனெனும் அவன் வேலையான்
வேற்றுமை அன்றி விளங்குநாள்
சாந்தி உளமதைச் சார்ந்திட
சந்தோசம் எங்குமே சந்தோசம்.

தமிழர் வருடம் பிறந்திட
தாழ்வு உயர்வு பறந்திட
உமிழ்க உமது துயரதை
உணர்க உழைப்பின் பயனதை;
அமிழ்க அனைவரும் இன்பினில்
ஆனந்தமான புத்தாண்டினில்;
தமிழன் உயர்ந்தோன் தரணியில்
தமிழும் உயர்க உயர்கவே.

வன்செயலின்றி நாம் வாழ்ந்திட
வாழ்விலுயர்ந்து சிறந்திட
இன்செயலே செயலாகிட
ஈகையில் என்றும் சிறந்திட
உன் செயலே செயல் என்றுளம்
ஏற்றி இறையைத் தொழுதிட
புன் செயல் விடுத்துப் புத்தாண்டினில்
புதிய உறுதியைக் கொள்ளுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றம் பௌத்தர்களுக்கு மட்டும் உரியதல்ல

## சகலருக்கும் சபையில் சம உரிமை உண்டு

## பாராளுமன்றத்தில் இராசமாணிக்கம் முழக்கம்

**“ஒன்பது ஆண்டுகளாக இந்த நாட்டைப் பிளவுபடுத்தி, மத-மொழி ரீதியில் பாழ்படுத்திய சுதந்திரக் கட்சியினருக்கு இன்று பௌத்த-சிங்களவர்களைப் பற்றிப் பேச எத்தகைய உரிமையும் கிடையாது. அதே நேரத்தில் இந்த பாராளுமன்றம் பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று சிலர் கருதுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இச்சபை தனியொரு மதத்தவருக்கோ, தனியொரு மொழி பேசுபவருக்கோ மட்டும் சொந்தமானதல்ல. இது சகலருக்கும் சொந்தமானது என்பதை அவர்களுக்கு வலியுறுத்தி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.”**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினரும் பட்டிருப்புத் தொகுதிப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் 5-ம் திகதி பாராளுமன்றத்தில் புதிய சபாநாயகரைப் பாராட்டிப் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

‘கௌரவ சபாநாயகரவர்களே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் உங்களுக்கு வாழ்த்துக் கூறுவதற்காக நான் சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன்.’

‘மதவாச்சிப் பிரதிநிதி (திரு. மைத்திரிபால சேனநாயக்கா) அவர்கள் எனக்கு முன் பேசியபொழுது சபாநாயகர் எதையெதைச்செய்யக் கூடாது என்று கூறினார். நான் சபாநாயகர் எதையெதைச் செய்யவேண்டும் என்பதையிட்டு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.’

‘கௌரவ சபாநாயகரவர்களே, இந்த உயர்பதவியை தாங்கள் இப்பொழுதுதான் முதன் முறையாக வகிக்கவில்லை பல ஆண்டுகளாக தாங்கள் இச் சபையின் சபாநாயகராக இருந்து, இச் சபையின் கௌரவத்தையும், மதிப்பையும், பொறுப்பையும் தாங்கி நடத்தியிருக்கிறீர்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை ஆகவே, எதிர்காலத்தில் நீங்கள் இச் சபையின் நடவடிக்கைகளை மேன்மைதங்கிய முறையில் மிகவும் நேர்மையாக திறம்படவும் நடத்துவீர்கள் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.’

### சபாநாயகரின் கடமை

‘இந்தச் சந்தர்ப்பத்திலே, சிறப்பாக தங்களுக்கு ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். சபையின் சபாநாயகர் இச் சபையிலுள்ள அங்கத்தவர்களது உரிமைகள் முழுவதையும் பாதுகாக்க வேண்டியவராக இருக்கிறார். அதே நேரத்தில் சிறுபான்மை மக்களுடைய உரிமைகளையும் அவர்களுடைய பேச்சுச் சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டிய உரிமையும் கடமையும் அவருக்குண்டு ஆகவே, இச் சபையிலிருக்கும் பலதரப்பட்ட மக்களை சாதி, சமய, வேற்றுமையில்லாமல், மொழி வேறுபாடில்லாமல் நடத்துவது மாத்திரமன்றி அவர்களுடைய பேச்சுரிமைகளையும் பாதுகாக்க வேண்டியதும் உங்களுடைய பொறுப்பாகும்.’

‘மதவாச்சிப் பிரதிநிதியவர்கள் பேசும்பொழுது தான் வேறு ஒரு வேட்பாளரது பெயரைப் பிரேரித்தமைக்கான காரணம் என்னவென்று எடுத்துக் கூறினார். இச் சபையின் சபாநாயகராக இருக்கும் ஒருவர் பௌத்த சிங்களவராகவே இருக்கவேண்டும் என்று கூறினார். இச் சபையிலே இருக்கும் பிரதிநிதிகள் பல சமயங்களைக் கைக்கொள்பவர்களாகவும், பல மொழிகளைப் பேசுகிறவர்களாகவும் இருக்கின்றார்கள்.’

### சபை சகலருக்கும் சொந்தம்

‘இச் சபையிலே பௌத்த சிங்களவர்கள் இருக்கின்றார்கள். சிங்களக் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். இஸ்லாமியர்கள் இருக்கின்றார்கள். தமிழர்கள் இருக்கின்றார்கள். தமிழ்க் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். சைவர்கள் இருக்கின்றார்கள். இவர்களிலே சிங்களம் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள்; ஆங்கிலம் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள்; தமிழ் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள்.’

‘ஆகவே. இந்தப் பாராளுமன்றம் ஒரு தனிச் சமூகத்தவருக்கோ, தனிப்பட்ட தொரு மொழியைப் பேசுகிறவர்களுக்கோ உரிமையானதல்ல என்பதை நான் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.’

‘மதவாச்சிப் பிரதிநிதியவர்கள் இந்த நாட்டின் பாராளுமன்றம் தனிப் பௌத்த சிங்களவர்களுக்கே இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டது அவமானகரமானது மாத்திரமல்ல, இந் நாட்டைப் பிளவுபடுத்தி, இந் நாட்டிலே இன வேறுபாட்டை ஏற்படுத்த, எதிர்காலத்தில் இந் நாட்டையொரு பள்ளத்தாக்கில் இறக்கும் ஆலோசனையாகத் தான் இருக்கின்றது.’

### புதிய கொள்கையா?

‘திரு மைத்திரிபால சேனநாயக்கா போன்றவர்கள் இன்று தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு இறுதி வரை முயன்றும் முடியாத காரணத்தால் இப்படி அவதூறான விசயங்களை பேசுவது தருமமல்ல என்பதை அவர்களுக்குக் கூற விரும்புகின்றேன்.’

‘1956 ம் ஆண்டில், காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமர் பதவியை வகித்தபொழுது ஜனாப் இஸ்மாயில் அவர்கள் சபாநாயகராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அதற்குப்பின் திரு. [illegible] ன—திரு. [illegible] க்கர்— [illegible] ல் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்படிச் செய்த அவர்களே இன்று ஒரு பௌத்த சிங்களவரே சபாநாயகராகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்று கூறுவது ஒரு விதண்டாவாதமாகவே இருக்கிறது’

‘இன்று இந்த நாட்டிலே தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தேசிய அரசாங்கத்திலே இந் நாட்டிலுள்ள பல சாதி, சமய, மொழிபேசும் மக்கள் அங்கம் வகித்து இந்த நாட்டைச் சுபீட்சமான நாடாக மீண்டும் வளப்படுத்த முயன்றுகொண்டிருக்கிறார்கள்.’

### பட்டதெல்லாம் இனிப் போதும்

‘ஒன்பது ஆண்டுகளாக இந்த நாட்டைப் பிளவுபடுத்தி, மத, மொழி ரீதியில் பாழ்படுத்திய அரசாங்கத்துக்கு இன்று பௌத்த—சிங்களவர்களைப் பற்றிப் பேச என்ன உரிமையிருக்கின்றது என்று கேட்க விரும்புகின்றேன்.’

‘ஆகவே, இந்தநாடுசுபீட்சமானதொரு நிலையை அடைய வேண்டுமானால், இந்த நாடு வளம்பெற வேண்டுமானால், இந் நாட்டு மக்களின் நல்லாதரவு பெற்ற தேசிய அரசாங்கம் இருக்க வேண்டும். ஆகையாற்தான் நாங்கள் இந்தத் தேசிய அரசாங்கத்துக்கு எங்களுடைய ஆதரவைக் கொடுக்க முன்வந்திருக்கிறோம் என்பதை நான் இங்கு திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.’

‘இந்நாட்டில் மத, இனத் துவேசத்தை ஏற்படுத்தி மீண்டும் ஆட்சிக்கு வர திருவாளர் மைத்திரிபால சேனநாயக்காவும் அவருடைய ஆதரவாளரும் கருதினால் அது ஒருபோதும் நடவாத காரியம் என்பதை நான் இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.’

‘கௌரவ சபாநாயகர் அவர்களே,

‘நீங்கள் முன்பு இப்பதவி வகித்த காலத்தில் மிகவும் கௌரவமாகவும் பொறுப்புத் தன்மையுடனும் நடந்திருக்கிறீர்கள். மீண்டும் நீங்கள் அதேமாதிரி நடந்து இச்சபையின் உரிமையையும் இச் சபை அங்கத்தினரின் உரிமைகளையும் பாதுகாப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். சிங்கள மொழி அல்லாத வேறுமொழி பேசுபவர்களுக்கும், சிங்களம் பேசும் அங்கத்தினருக்குக் கொடுக்கும் அதே உரிமைகளைக் கொடுத்து இச்சபையிலுள்ள சிறுபான்மையினரைச் சம உரிமையோடு நடத்துமாறு கேட்டு, எனது கட்சியின் ஆசீர்வாதத்தை உங்களுக்கு வழங்கி எனது குறிப்பை முடிக்கிறேன்.’

---

## தமிழரசுத் தலைவரின்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மார்க்சீயவாதிகள். இன்று அதே மார்க்சீய வாதிகள் பௌத்த சிங்களக் கூச்சலைக் கிளப்பி நாட்டில் ஒரு இனக் கலவரத்திற்கு வித்திடுவது சிறுபான்மை இன—மத மக்களுக்கு பெரிதும் கவலையளிப்பதாக உளளது.

சிங்கள மக்கள் மத்தியில் சென்று சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிப் பேசக்கூடியவர்கள் மார்க்சீயவாதிகள் என்று ஒரு காலத்தில் நாட்டு மக்கள் நம்பினார்கள். இன்று அதே மார்க்சீயவாதிகள் இன - மத கூச்சலை எழுப்புவது நியாய உள்ளம் படைத்தவர்களுக்கு சோதனையாகவே இருக்கிறது.

### மொழி வழிப் போராட்டம்

மார்க்சீயவாதிகள் இன்று கிழப்பியிருக்கும் இன-மதக் கூச்சல் அவர்களுடைய அடிப்படைத் தத்துவத்திற்கே விரோதமானதாகும். இந்த உண்மையை நாம் கூறித்தான் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு விரோதமான கூச்சலுக்கு மார்க்சீயவாதத் தத்துவத்திலேயே இடமில்லை மொழிவழிக் கிளர்ச்சிகளுக்கு மார்க்சீயவாதிகள் துணை நின்றிருக்கிறார்கள்.

பாரத நாட்டில் நடைபெற்ற மொழிவழி அரசுப் போராட்டங்களில் மார்க்சீயவாதிகள் பங்கு பற்றியிருக்கிறார்கள். பம்பாய் சம்யுக்த மராஷ்டிரத்திற்கான போராட்டத்தின் மையமாகத் திகழ்ந்த - மராஷ்டிர மொழிவழி அரசுப் போராட்டத்தில் மார்க்சீயவாதிகள் உயிர்த் தியாகம்கூடச் செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் இலங்கையில் மார்க்சீயவாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் பௌத்த சிங்களக் கூச்சலைக் கிளப்பி இனக்கலவரத்திற்கு வித்திடுவது உண்மையான மார்க்சீயவாதிகளுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் கொடுக்கவே செய்கிறது.

மார்க்சீய தத்துவத்திற்கு உரிமை கொண்டாடும் வகுப்புவாதிகள் கிளப்பும் இவ்வெறிக் கூச்சலால் இந் நாட்டில் மார்க்சீய தத்துவத்திற்கு நீங்காத வடு ஏற்படுகிறது மார்க்சீய தத்துவம் [illegible] கொண்டாடு [illegible] லேயே இந்நாட்டில் சாகடிக்கப்படுகிறது.

---

## புதிய.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

“குறிப்பாக இலங்கை வாழ் இஸ்லாமியர், இந்துக்கள், பௌத்தர்கள் ஆகிய மும்மதத்தினரும் ஏனைய சிறுபான்மையினரும் ஒன்றுபட்டு தேசிய ஒற்றுமைக்கும், முன்னேற்றத்துக்கும் உழைக்க இத்தினம் ஒரு முன்னோடியாக அமையுமாக. இவ்வேளைவாவுக்கு பொன்முடி தரித்தாற்போல இன்று இந்நாட்டையாளும் தேசிய அரசாங்கம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

“நாட்டின் உயர்ச்சிக்கு உயிர் நாடி போல விளங்கும் இத்தேசிய அரசாங்கம் இந்நாட்டு மக்களின் எதிர்கால சுபீட்சத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது. இந்த உணர்ச்சி நாட்டு மக்களின் மகிழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழிகோலவல்ல அவாவை நான் இந்நன்னாளாம் பெருநாளிற் பிரார்த்திக்கிறேன். நாட்டு மக்களுக்கும் குறிப்பாக சிறுபான்மையினருக்குப் புதிய நம்பிக்கை உதயமாகும்.

“இஸ்லாம் ஈந்த இபுருகீம் நபியவர்களின் ஈகையும், இரக்க சிந்தையும் முஸ்லிம் பெருமக்களாகிய எமக்கு இந்நாட்டின் சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஆற்ற வேண்டிய சேவைக்கும் தியாகத்துக்கும் நம்பிக்கை யூட்டுமாக” “ஈத்முவாரக்”.

---

## உடுப்பிட்டியில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தையிலிருந்து ஆரம்பமாகிக் கூட்டமைதானத்தை வந்தடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் செல்லும் சமயத்தில் இப்பொது வரவேற்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதால் அனைவரும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## இனக் .........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் தமிழர்களின் வீடுகளில் சிங்கள சிறீ பொறிக்கப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. அன்றைய வகுப்புக்கலவரத்தில் சிங்களக் காடையர்களுடன் சமசமாசக் கட்சியின் ஆதரவிலுள்ள தொழிற்சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள் என்று தமிழரசுத் தலைவர்கள் பகிரங்கமாகக் கூறியதும் குறிப்பிடத் தக்கதாகும்.

---

## மத்திய வங்கியில் சதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் தமிழ் ஊழியர்கள் இலவச பிரயாணச் சீட்டுக்கான மனுச் செய்ய முடியாது இடர்ப்படுகிறார்களாம்.

புத்தாண்டு விடுமுறைக்கு விடுசெல்ல பிரயாண சீட்டுக்கு மனுச் செய்ய முடியாது பல தமிழ் பேசும் ஊழியர்கள் கஷ்டப்படுவதாகவும், சிலர் இலவசச் சீட்டுப் பெறாது பணம் கொடுத்தே செல்லவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இந்தக்கெடுபிடிகள் அனைத்திற்கும் அண்மையில் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் ஒரு முஸ்லிம் அதிகாரியே காரணம் என்று அறியப்படுகிறது. இந்த அதிகாரி இவ்வாரம் ஆரம்பத்திலிருந்து திடீர் தீவிர சிங்கள வாதியாக மாறியுள்ளாராம்.

இவரின் திடீர் மாற்றத்திற்கு சுதந்திர—இடதுசாரி அரசியல் வாதிகளின் தலையீடே காரணமாம் தனிச்சிங்களத்தை அமுல் நடாத்தி தமிழ் ஊழியர்களுக்கு இடர்ப்பாட்டைக் கொடுப்பதன் மூலம், தமிழரசுக் கட்சியினர் கொதித்தெழுந்து தேசிய அரசாங்கத்தை எதிர்ப்பார்கள் என்றும், ஐ. தே. கட்சியுடன் உள்ள உடன்பாட்டை உடைத்தெறிவார்கள் என்றும் எதிர்க் கட்சியினர் எதிர்பார்க்கிறார்களாம். இதே போன்ற உள்ளடிப்பு வேலை ஏனைய திணைக்களங்களிலும் விரைவில் ஆரம்பமாகலாம் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

# பொற்கோவில்

என்னை வேலைக்கு வரும்படி மறுமொழியும் வந்துவிட்டது நான் இந்தச் சந்தோசச் செய்தியை என் அம்மாவிடம் சொல்லிவிடுகின்றேன். அடுத்த நிமிடம் அம்மாவின் கண்களில் மாரிகால மாவலிகங்கையைத்தான் என்னால் வேதனையோடு காணமுடிகிறது.

அம்மா ஏன் இப்படி அழுகிறா? இப்படி ஒரு மின்னல் நேரந்தான் நான் ஏதோ எனக்குள் புலம்பினேன். மறுநேரம் நான் அந்த உண்மையை விளங்கிக்கொண்டேன்.

எனக்கு வேலை கிடைத்ததை நினைத்துத்தான் அம்மா ஆனந்தக் கண்ணீர் வடித்துச் சந்தோசப்பட்டாலும். எனக்கு என்னவோ ஒரு பெரிய வேதனை நெஞ்சிற்குள் தலைமறைவாய் ஒட்டியிருந்து, வேலை கிடைத்த சந்தோசத்தையும் எலியைப்பிடித்து விழுங்கும் சாரைப்பாம்பு மாதிரிக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக்கொண்டு தானிருந்தது.

என் அம்மாவை விட்டுவிட்டு நான் எப்படி வேலைக்குப் போவது...? அம்மாவுக்கு இவ்விடத்தில் யார் உதவி...? அம்மா தனிமரம். நான் வேலைக்குப் போனா அம்மா சரியாய் கஷ்டப்படப்போகிறா...? அம்மா பாவம். அம்மாவுக்கு வருத்தம் வந்தா... ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போக...? அம்மாவுக்கு தண்ணி இறைச்சுக் குளிக்க வாக்கிறது...? கிணத்துக்குள்ளை தவறி விழுந்து அம்மா செத்தா...?

இப்படியெல்லாம் எண்ணச் சுழலில் அகப்பட்டு கலங்கி தாய்ப்பாசத்தில் உருகி வழிந்தேன். சீ...இதுவுமொரு வாழ்வா...? இந்த ஒரு சாண் வயிற்றுப்பாட்டைப் பார்க்கத்தானே மனிதன் என்னென்னத்தை! செய்தாலும்.

வந்த வேலையாழ்ப்பாணத்திற்குள் வந்திருந்தால்...? அம்மாவைவிட்டு நான் பிரியவேண்டிவராது. எனக்கோ அம்மாவை விட்டு விட்டு வேலைக்குப் போவதற்கு துப்பரவாகவே மனமில்லை. கண்டிக்கு வேலைக்குப் போகவேண்டிய அந்தத் திகதியும் எனது வேதனையை இரட்டிப்பதற்காகவே ஓடிவருவது போல் நெருங்கிக்கொண்டேயிருந்தது நான் எப்படி அம்மாவை விட்டு விட்டு வேலைக்குப் போகப் போகிறேனென்று யோசித்துக் கொண்டேயிருந்தேன்.

ஒரு வெள்ளிக்கிழமை. அதுதான் வேலைக்காக நான் கண்டிக்குப் புறப்படவிருந்த நாள். அன்று சாயந்தர மெயிலிலேயே போவதெனத் தீர்மானித்திருந்தேன். அம்மாவும் தனது கழுத்துச் சங்கிலியை அடைவு வைத்து எனது பயணச் செலவிற்காகக் காசு எடுத்து வந்து என்னிடம் தந்தா. பயணம் போகவேண்டிய நேரமும் நெருங்கிவரவே வேதனையை அடக்கிக் கொள்ள முடியாமல் அம்மாவுக்கு முன்னால் குழந்தைப் பிள்ளை மாதிரி விக்கி விக்கி அழத் தொடங்கினேன்.

அம்மாவுக்கும் நான் அழும் காரணம் விளங்கத் தொடங்கியது.

அம்மாவோ பொங்கிவந்த கவலையையெல்லாம் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டாலும் அவவையறியாமலே கலங்கும் கண்கள் எனது மனவேதனையை இரட்டித்து, எத்தனையோ மனப்பிரமைகளையெல்லாம் கிளறிவிட்டன. டே...! தம்பி ஏன்ரா பயலைம்போல நாளையிலை அழுகிறாய். இன்டைக்கும் அப்படியே? வேலை வில்லட்டி ஒன்டுமில்லாமை வீட்டுக்குப் பாரமாயிருந்து தின்னுறுனெண்டு ஊரிலை எத்தனை ஆக்கள் உனைப் பகிடி பண்ணிச்சினம். அதையெல்லாம் உன்னைப்பெத்த நான் இந்தக் காதாலை கேட்டுக் கேட்டு எவ்வளவு கவலைப்பட்டிருப்பேன். என் மனமே வெடிக்கிறளவுக்கு மனத்துக்குள்ளேயே அதையெல்லாம் வைச்சு அமுத்திவிருப்பன். உனக்குத் தெரியாமை எவ்வளவு கண்ணீரைத் தான் வடிச்சிருப்பன். ம்...இப்ப எதோ கடவுள் கண் முழிச்சு உனக்குக் கஞ்சி வந்திட்டுது. உன்னைப் பெத்தண்டு சந்தோசப்பட்டதுக்கு இப்ப தான்டா தம்பி நான் மறுபடியும் சந்தோசப் படுகிறேன். இவ் என்ன... உன்ரை கலியாண வீட்டிலண்டைக்குதான் மற்றச் சந்தோசம்...அழாதே ராசா...."

என் கன்னங்களில் வழியும் கண்ணீரைத் தனது கைகளினால் அழுத்தித் துடைத்தபடியே அம்மாவும் தனது தேற்றுதலை முடிக்கிறா...

எனக்கோ இன்னும் ஏதாவது சொல்லி உரக்கச் சத்தமிட்டு அழவேண்டும் போலிருந்தது. ஏதோ அம்மாவும் என்னைத் தேற்றினாலும் தன்னைத்தானே தேற்றிக்கொள்ள முடியாது பாசத்தால் தவிப்பதையும் நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன்.

சாயங்காலம் ஐந்து ஐம்பதுக்குத்தான் காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு மெயில் புறப்படும். நான் அன்று அம்மாவின் சொற்படி எங்களூரிலுள்ள எல்லாத் தெய்வங்களுக்கும் கற்பூரம் கொளுத்தி இளநீர் உடைத்து நன்றாக வணங்கிவிட்டு அம்மாவோடு ரயிலடிக்குப் போனேன். மெயில் புறப்படுவதற்குச் சொற்ப நேரம் தானிருந்தது. நான் 3-ம் வகுப்புப் பெட்டிகளுள் ஏறி சன்னலோரமாக உட்கார்ந்து கொண்டேன்.

அம்மா பிளாட்பாரத்தில் எனது சன்னலுக்குப் பக்கத்தில் சோக உருவமாய் நின்று. மெயில் வெளிக்கிடுவதற்கு மூன்று நிமிடங்களே இருந்தன. அந்த மூன்று நிமிடத்திற்குள் அம்மாவோடு எவ்வளவோ எல்லாம் கதைத்து முடிக்க ஆசைப் பட்டேன். ஆனால் ஒன்றுமே கதைக்கத் தெரியவில்லை.

அழுகைதான் முன்னுக்கு ஓடிவந்தது "அம்...மா...நீங்கள் கவனமாயிருங்கள். இனைறு இனத்தடி. அம்மா கவனம்..." இப்படி ஏதோ இழுத்தேன்.

"நான் கவனமாயிருப்பன்ரு தம்பி...நீ...நீ.. அதை நினைச்சுக் கவலைப்படாதை சுகமாய்ப் போய் வா..."

"அம்மா கவனம் கவனம்..."

"சரி தம்பி...சுகமாய்ப் போய் வாடா போனவுடனை மறந்து போகாமை தந்தி அடிச்சுப் போடு."

மெயில் புறப்படுகிறது.

"அம்மா கவனம் கவனம்." நான் உரத்துச் சொல்லுகிறேன்.

"தம்பி சுகமாய்ப் போய் வா...போய் இறங்கின கையோடை தந்தியடி..."

இப்படிச் சொன்ன அம்மாவின் கண்களிலிருந்து இரண்டு மூன்று கண்ணீர் முத்துக்கள் பொல பொலவென்று விழுவதைப் பார்த்தேன்.

மாவிட்டபுரம், தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம் இப்படியே ஸ்டேசன்களும் ஒவ்வொன்றாய் எனக்குப் பிரியாவிடை கூறிக் கொண்டிருந்தன. நானோ சன்னலுக்கு வெளியே தலையைப் போட்டபடியே பைத்தியக்காரன் மாதிரி "அம்மா கவனம்...கவன"மென்று வாய்க்குள் புலம்பிக் கொண்டேயிருந்தேன்: தம்பி சுகமாய்ப் போய்வா..." இப்படிச் சொல்லியபடியே அம்மா மெயிலோடு ஓடிவருவது போன்ற ஒருவித மனப்பிரமை கொடிகாமமும் கழிகிறது. எனது பெட்டிக்குள்ளிருந்த பெரிய பெண்களைப் பார்த்ததும் எனக்கு அம்மாவின் நினைவுதான் குமுறி வந்தது.

"அம்மா ...கவனம்...கவனம்..."

இப்படி உளறினேன்.

"தம்பி...சுகமாய்ப் போய் வா போய் இறங்கின கையோடை தந்தியடி..." இப்படி அவர்கள் எனக்குச் சொல்லுவது போலிருந்தது.

"சம்பளம் எடுத்தவுடன் முழுக் காசையும் அம்மாவிற்கே அனுப்புவேன். அம்மாவுக்கு விருப்பமானதெல்லாம் வாங்கி அனுப்புவேன்," இப்படியே பாசத்தால் அள்ளுண்டேன்.

ஆனையிறவும் பிரிகிறது. நான் இருப்புக் கொள்ளாமல் 'கம்பாட்மென்ட்' வாசலில் போய் நிற்கின்றேன்.

பயங்கரக் காடுகள். அந்தக் காடுகளுக்குள் நின்று அம்மா என்னைக் கூப்பிடுவது போன்றிருந்தது. காடுகள் நெருப்பில் எரிகின்றன...

அது...அது...அம்மாவின் பிரேதம் நெருப்பில் எரிகிறது......பயங்கர எண்ணங்களின் பேயாட்டம். இனத்துக்குள் அம்மா பிரேதமாய் ...ரயிலின் சக்கரங்களுக்குள் அம்மா அகப்பட்டு...உடல் வேறு தலை வேறாய்...

மனப் பொறிவு.

ஆ...அம்மா...அம்மோய்... ஊழிக் கடல் போன்ற உணர்ச்சிப் பிரளயம். ரயிலிலிருந்தே வெளியே பாய்ந்து விடுகின்றேன்.

இப்பொழுது நான் வீட்டிலேதான் இருக்கின்றேன். என்னைப் பெற்ற என் பொற்கோவில்தான் எனக்குத் தஞ்சம், எனக்குத் துணை, எனக்குத் தெய்வம். எனக்குக் கோவில். எனக்குச் சகலமும்.

எனக்கு...எனக்கு...இவி... வே...லை...இ...ல்...லை ...இல்.. லை...எனக்...கு...ஒரு கா...லு ...ம்...ஒருகை...யு ...ம்....இல ...லை...?

(யாவும் கற்பனை)

— தையிட்டி அ. இராசதுரை —

## அழகு சுடும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசைப்படுகின்றார். ஆமாம்; உன்னைப் பற்றியும் அவரிடம் நிறைய நான் கூறியிருக்கின்றேன். சரோஜாவை தைரியமாக இருக்கச் சொல்.

உன் அருமை நண்பன்,
கணேசன்."

கடிதத்தை எழுதி மிகுந்த மன நிறைவோடு ஒழுங்காக அதை உறையுள் மடித்து வைத்துவிட்டு, சரோஜாவுக்கும், அவள் அடித்த தந்தி பெற்றுக் கொண்டது பற்றியும், புதிய இடத்தின் சௌகரியம் பற்றியும் சுருக்கமாக ஒரு கடிதத்தை எழுதி முடித்தான் கணேசன்.

"சார்..." என்று அழைத்துக் கொண்டு அங்கு வந்த கிருஷ்ணனை ஏறெடுத்துப் பார்த்தான் கணேசன்.

"எங்க டீச்சரக்கா இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க" என்று சொல்லி ஒரு கடிதத்தை நீட்டினான் கிருஷ்ணன்.

கடிதம் கை மாறியது: கணேசனுடைய கையில் அல்ல; தலைமையாசிரியருடைய கையில்!



## அணுயுகத்துக்கு வழி....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துகள் பிறந்தன. 1905-ல் —அப்போது அவருக்கு வயது 26 தான்— தமது குறிப்புக்களை ஐந்து கட்டுரைகளாக வெளியிட்டார். ஐந்தாவது கட்டுரை மிகச் சிறியது. அதில் தான் அணுயுகத்தின் கணிதக் கருத்துக்கள் அடங்கியிருந்தன.

ஒவ்வொரு கட்டுரையும் ஒரு கலைப் படைப்பு. அவரே கண்டு பிடித்த சார்பு நிலைக் கொள்கை (அணுப் பிளப்புக்கு இன்றியமையாத ஒரு முன்னோடி) மட்டுமன்றி ஒளி, விசை இயக்கம், குவான்டம் கொள்கை, அது வரையில் விளங்காத-பின் விசை ஓட்டத்தின் ஒளியினால் ஏற்படும் விளைவு-இவை பற்றிய நமது எண்ணங்களை மாற்றக் கூடிய கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன. வரலாற்றுச் சிறப்புள்ள இந்தக் கட்டுரைகள், விஞ்ஞான உலகையே ஒரு குலுக்குக் குலுக்கி, வியப்பையும் பாராட்டையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தின; இவை பல ஆண்டுகளுக்கு நீடித்தன.

ஸ்விஸ் உரிமைப் பதிவு அலுவலக ஊழியராான ஐன்ஸ்டைன் ஒரே இரவில் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாகி விட்டார். அவரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளப் பல்கலைக் கழகங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டன.

1912-ல் பெர்லின் நகரிலுள்ள புகழ் பெற்ற கெய்ஸர் வில்ஹம் கழகத்தில் அவர் ஒரு பேராசிரியரானார். அவர் தாம் முதலில் வெளியிட்ட கொள்கையை 1915-ல் மேலும் விரிவாக்கி, பொதுச் சார்பு நிலைக்கொள்கையை உருவாக்கினார். 1921-ல் பௌதிகத் துறை நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது.

வெய்மார் குடியாட்சியில் ஜெர்மனியில் ஐன்ஸ்டைன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். பெர்லினிலுள்ள 100 ஏழைக் குடும்பங்களை அவர் ஆதரித்தார்.

ஆனால் ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும் அவரது ஆட்கள் அவருக்குத் தொந்தரவு கொடுக்க முற்பட்டனர்; இறுதியாக அவர் நாட்டைவிட்டு வெளியேறுமாறே செய்துவிட்டனர். 1933-ல் ஜெர்மனியிலிருந்து கிளம்பி அவர் முதலில் ஃபிரான்ஸ் சென்றார்; பின்பு பெல்ஜியம் நாட்டுக்கும் அடுத்து இங்கிலாந்து நாட்டுக்கும் சென்றார்.

அமெரிக்காவில் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் பிரின்ஸ்டன் நகரிலுள்ள மேல் படிப்புக் கழகம் அவரை ஆயுள் காலப் பேராசிரியராகப் பதவி ஏற்க வருமாறு அழைத்தது; அவரும் ஒப்புக்கொண்டார். 1955-ல் காலமாகும்வரை அவர் அந்நகரிலேயே வாழ்ந்தார்.

### பணம் பெரிதல்ல

அன்புக்கோர் இமயமாக விளங்கிய அவர், மக்கள் குலத்தின் நல் வாழ்வில் மிக்க அக்கறை காட்டி வந்தார். பணத்தை அவர் மதித்ததேயில்லை. பெரும் செல்வந்தராவதற்குக் கிடைத்த எத்தனையோ வாய்ப்புக்களை அவர் எள்ளி நகையாடித் தள்ளிவிட்டார். நோபல் பரிசு முழுவதையும் (ஏறத்தாழ ரூ 2 லட்சம்) அவர் அறப் பணிகளுக்கே கொடுத்துவிட்டார்.

76 வயதில் விஞ்ஞானி ஐன்ஸ்டைன் காலமான போது பிரதம மந்திரி நேரு பின் வருமாறு கூறினார்; "உண்மையிலேயே உண்மையைக் காண முயன்றவர் அவர். தீமை, பொய் இவற்றுக்கு இணங்காதவர். நிழல்கள் கவிழ்ந்து இருள் படரும் உலகுக்கு வழி காட்டும் ஒரு ஒளி விளக்காக அவர் விளங்கினார். சூழ்நிலைகளில் நெருக்குதல்களால் வலிமை இழந்தவர்களுக்கு அவர் ஒரு தோன்றாப் பெருந் துணையாகத் தோள் கொடுத்தார்."

## நயினாதீவு த. அ. வா. மு. கிளை ஆரம்பம்

தமிழரசு வாலிப முன்னணி நயினாதீவுக்கிளையின ஆரம்பக்கூட்டம் அவ்வூர் கணேசா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. கிளை ஆரம்பிக்க வேண்டியதின் அவசியம் பற்றி கி. க. தலைவர் திரு க. வே. பரமலிங்கம் விளக்கினார். பின்வரும் அலுவலாளர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

காப்பாளர்: திரு. வ. நவரத்தினம்,
தலைவர்: க. நற்குணசிங்கம்.
உபதலைவர்: க. சின்னத்துரை.
செயலாளர்: ந. சிவநாதன்.
துணைச் செயலாளர்: க. துரைமணி.
பொருளாளர்: வை. சற்குணநாதன்.

ஆட்சிக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:
சி. பொ. இராசரத்தினம், சி. நடேசன், க. ஆறுமுகம், சு. சோதிலிங்கம், க. தருமராசா, சி. நடராசா, நா. இராசகுலேந்திரன், சி. இராசரெத்தினம், ந. லோகநாதன், க. இராசேந்திரன், த. யோகநாதன், செ. ஓங்காரநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புறவால் உரிமை பெறுவதே எமது நோக்கம்

## பெரும்பான்மை–சிறுபான்மை உறவைப் பலப்படுத்த வழி

### மாட்டின் லூதர் கிங் தரும் விளக்கம்

**“இனத்தை இனம் அடிமைப்படுத்தி, ஒரு இனத்தின் உரிமைகளை மற்ருேர் இனம் அபகரிக்கும் தீய பழக்கவழக்கங்கள் ஒழிந்தாலன்றிசமுதாயம் சீர் பெற முடியாது. நீக்கிரோ மக்களின் உரிமைகளைப் பிடுங்கிய வெள்ளையரை பகைமைகொண்டு பணிய வைக்காமல் அன்பினுல், அறத்தால், இனிைக மனப்பான்மையால் அணைத்து சமாதான சக உறவினை நாடிச் செல்வோமாக.”**

அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களின் தலைவரான மாட்டின் லூதர் கிங் அறப்போராட்டம் ஒன்றினை நடத்திவருகிருர். அலபாமா மாகாணத்தில் உரிமைகள் இழந்து தவிக்கும் நீக்ரோக்களுக்கு உரிமை வாங்கித்தரும் பணியில் டாக்டர் கிங் ஈடுபட்டுள்ளார். பல்லாயிரக் கணக்கான மக்களை அலபாமாவுக்கு பாதயாத்திரையாக அழைத்துச் செல்லுகின்ருர் டாக்டர் மாட்டின் லூதர் கிங் அலபாமாவிலுள்ள மொண்ட் கோமரி என்ற இடத்தில் பேசும் போது மேற்கண்டவாறு கூறிஞர்.

‘பெரும்பான்மை இனத்தவர்களான வெள்ளைக்காரர்களை வெற்றிகொள்ள வேண்டுமென்பது எமது நோக்கமல்ல அவர்களுடைய கருத்துக்களை உதாசீனம் செய்து அவர்களைப் புண்படுத்த வேண்டும் என்பதும் எமது நோக்கம் அல்ல. அவர்களுடைய நட்பைப்பெற்று எங்கள் கோரிக்கையில் நியாயத் தன்மையை விளக்கவேண்டும் என்பதே எங்கள் எண்ணமாகும்.

‘எமது உரிமைப் போராட்டத்தின முடிவு பெரும்பான்மை–சிறுபான்மை இனத்தவர்களின் பரஸ்பர ஒற்றுமைக்கும், நட்புக்கும்



ஏற்ற முடிவாக அமைவதுடன் நிரந்தரமான சமாதானம் நிலவும் வகையில் சமுதாயம் உருவாகுவதற்கும் அமைவாகவிருத்தல் வேண்டும்.

‘எங்களுடைய கால்கள் கட்டப்பட்டிருக்கலாம்; ஆனல் எங்களுடைய ஆத்மா எங்கணும் வியாபித்திருக்கிறது. அமெரிக்கச் சரித்திரத்தில் இன்று நடைபெறும் சமாதான அறப்போர் போன்ற ஓர் போராட்டம் நடைபெறவேயில்லை. மத குருக்களும், இன, மத பேத மற்ற வகையில் பாமர மக்களும் இந்தப் போராட்டத்துக்கு இணைந்து நிற்பது போல் வேறு எதற்கும் இணைந்து நிற்கவில்லை.

‘கறுப்பர்களான நீக்கிரோக்களுக்கு உரிய உரிமைகளை மீட்கும்பணியில் அலபாமா மாகாணத்திலுள்ள செல்லா நகரைநோக்கி நாம் தொடங்கியுள்ள பாதயாத்திரையில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களைப் பார்க்கின்றீர்கள். நீக்கிரோ மக்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்—அவர்களும் அமெரிக்க நாட்டுப் பிரசைகள் என்ற அடிப்படையில் அமெரிக்கா வெங்கணும் சகல உரிமைகளும் பெற்று வாழவேண்டும்.

‘செல்மா பிரதேசத்தில்—அங்கு வாழும் பெரும் பெரும்பான்மை இனத்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டம் அமெரிக்க நாட்டின் சகல குடிமக்களையும் விளிப்படையச் செய்திருக்கிறது. ஒரு புதிய சகாப்தத்தையே ஆக்கக்கூடிய வகையில் இன்று சகலருடைய கவனத்தையும் இச் சம்பவங்கள் திசை திருப்பியுள்ளன.

‘சனதிபதி ஜோன்சன் அவர்களே நீக்கிரோக்களின் உரிமைப் போராட்டம் அமெரிக்க சமுதாயத்தின் கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது என்று பாராட்ட முற்பட்டுள்ளார். பரம்பரை பரம்பரையாக அமெரிக்க வெள்ளையர்கள் பலர் கட்டிக்காத்துவந்த உதவாக்கரைக் கொள்கையான நிறத்திமிரை உதறி எறிந்துவிட்டு எம்முடன் இணைந்து எமது உரிமைக்காக எம்முடன் போராட முன்வந்திருக்கின்றனர். இவர்களுக்கு முதன் முதலாக எமது நன்றியை உரித்தாக்குவோம்.

‘அலபாமாவில் உருவான அநாகரீகக் கொள்கை அழிந்தொழிந்து போகும்நாள் இதோ அண்மிவிட்டது. எமது சமுதாயத்தின் அசுதுடைத்தெறியப்பட்டு பசுமையான எதிர்காலம் மலரப் போகிறது. சமுதாயத்தின் சகல தீய சக்திகளையும் பொடியாக்கி சகல இனங்களும் சரிநிகர் சமானமாக வாழும் நெறிகாண எல்லோரையும் அழைக்கிறேன்.’

#### தோட்டப் பாடசாலையில் பரிசளிப்பு விழா

இரத்தினபுரி உடகறவிற்றையைச் சேர்ந்த நெரிபல்ல தோட்டத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்புவிழா, அதே தோட்டத்துச் சிரேஷ்ட உதவி அதிகாரி திரு. எம். றத்வத்தை தலைமையில் 2-4-65ல் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் திரு. ஆ. லோகேஸ்வரன் பேசுகையில் ‘வருடம் முழுவதும் போதிப்பதிலும் பார்க்க இப்படியான ஒரு வைபவம் மாணவர்களின் உள்ளத்தைப் பண்படுத்த முடியுமென்று’ குறிப்பிட்டார்.

உதவி அதிகாரி திரு. றத்வத்தை பேசுகையில்! மாணவர்கள் தங்களுக்கு இலவசக் கல்வி கிடைப்பதை தெரிந்துகொண்டால் மட்டும் போதாதென்றும் அதை அவர்கள் உணர்ந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்றும், அதனுல் விடுமுறை நாட்களில் அவர்கள் நாட்டுக்கேற்ற சிரமதான வேலைகளில் ஈடுபட மனம் வரும் என்றும், மாணவர்கள் கவனமாகப் படித்தால் தமது பெற்ருேரைப்போல் தோட்டங்களே துணையென்று முடங்கிக்கிடக்காமல் சிறந்த உத்தியோகங்களை வகிக்கலாமென்றும் அதனுல் அவர்கள் தங்களுக்கும் பெற்ருேருக்கும் தோட்டத்திற்கும் நம் மதிப்பையேற்படுத்தலாம்’ என்றும் கூறிஞர்.

செல்விகள்: செ. மகேஸ்வரி, எல். சரஸ்வதி ஆகியோர் வரவேற்புக் கீதமும், செல்வன் வீ. சந்தனம் வாழ்த்துப் பாட்டும் பாடினர்கள். திரு. றத்வத்தை அவர்கள் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினுர்.

## நீதிக்கும் அநீதிக்கும் நடக்கும் போர்!

‘நாம் நடாத்தும் உரிமைப் போராட்டம் சிறுபான்மை இனத்தவர்களான நீக்கிரோக்களுக்கும் பெரும்பான்மையினரான வெள்ளைக் காரர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டம் அல்ல. இப் போராட்டம் நீதிக்கும் அநீதிக்கும் இடையே தோன்றியிருக்கும் போராட்டமாகும்’.

டாக்டர் மாட்டின் லூதர் கிங் அவர்களை ‘உரிமைப் போராட்ட வீரர்’ என்ற ரீதியில் பல்டிமோர் நகரவாசிகள் ஒரு விருந்து வைத்து கௌரவித்தனர். அவ்வேளையில், இவ்வைபவத்தில் 950 வெள்ளைக்காரர்களும் நீக்கிரோக்களும் கலந்து கொண்டனர்.

கடந்த புதன்கிழமை பல்டிமோர் நகரில் நடைபெற்ற இவ்விருந்துக்குத் தலைமை தாங்கிய நகரபிதா தியடோர் ஆர். மக்கில்டின் டாக்டர் கிங் அவர்களைவிட்டுப் பேசும் போது, ‘இருநூற்றூண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க சுதந்திரத்துக்குப் போராடிய வாசிங்டன், வொன்ஸ்டியூலன் ஆகிய தலைவர்களுடன் டாக்டர் கிங் அவர்களும் ஒப்பிடத்தக்கவர்’ என்று குறிப்பிட்டார்.

பாராட்டுக்களுக்குப் பதில் அளித்த டாக்டர் கிங் கூறியதாவது:

‘இன அடிப்படையில் விளைவிக்கப்படும் அநீதிகளை எதிர்த்து இன்று அமெரிக்காவின் சகல இனத்தவர்களும் போராட முன்வந்துள்ளனர். எமது வெற்றிக்கு காலம் ஒரு சருவியா [illegible] எங்களில் எமது அறப் போராட்டம் [illegible] ஏற்படுத்தாமல் போகாது’.

### தமிழரசுத் தந்தை பிறந்த தின விழா!

கொட்டகல மாவட்டம் ‘பனிமலை’ இ. தி. மு. க. பணிமனையில் தமிழரசுத் தந்தையும், ஈழத்துப் பெரியாரும், தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களது 68 வது பிறந்த தின விழா 3-4-65ம் நாள் சனியன்று மாலை 5.30 மணிக்கு நடாத்தப்பட்டது.

இ. தி. மு. க. அட்டன் மாவட்டச் செயலாளரும், கிளைக் கழகச் செயலாளருமான தோழர் இரா. ரெங்கையா அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கிஞர்.

இவ்விழாவிற்கு 300 க்கு மேற்பட்ட இளைஞர்கள் குழுமியிருந்தார்கள் திரு. இரா ரெங்கையா பேசுகையில் ஈழம்வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நிலையை இன்றைய ‘தேசிய அரசாங்க’ ஆட்சியாளர்களிடம் எடுத்துக்கூற முன்வந்துள்ள தமிழரசுக்கட்சியையும், அதன் தலைவர்களையும், ஈழம் வாழ் திராவிடப் பெருங்குடி மக்களின் சார்பாக வாழ்த்துரைகள் வாரி வாரி வழங்குவதோடு, மலையக மக்களனைவரும் கட்சிப் பாகுபாடின்றி தமிழரசுத் தந்தையின்விழாவைக் கொண்டாட வேண்டும் என்று கூறிஞர்.

சி. செங்கமலை, எ. வேதாசலம், எஸ். குமாரசாமி, மொ. செல்வன், சி. முமணி, இரா. நா. மூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

### களுவாஞ்சிகுடி சைவ மாசபை

நிகழும் வருடம் ஏப்ரல் மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் களுவாஞ்சிக்குடி விக்கினேசுவரர் ஆலயத்தில் சைவ மா சபையின் 13வது ஆண்டு நிறைவு விழா நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் சைவப்பேரறிஞர்களின் சொற்பொழிவுகளும், கதாகாலாட்சேபங்களும், சங்கீதக் கச்சேரிகளும், சிறப்பாக நிகழ்ச்சிகளில் இடம்பெற இருக்கின்றன.

விழாவை யொட்டி, சைவ சமய பாட எழுத்துப் பரீட்சைப் போட்டி, தேவார புராண மனன இசைப் போட்டி, பேச்சுப் போட்டிகள் என்பனவும் சைவ மா சபையின் சார்பில் நடாத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இப் போட்டிகளில் பூரண விதிகளை அறியவிரும்புபவர்கள் மேற்படி சபையின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும்.

மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பும் திகதி 13-4-65. சைவசமய பாட எழுத்துப் பரீட்சை நடைபெறும் திகதி19-4-65. இடம்: மட்/பட்டிருப்பு மாவித்தியாலயம், களுவாஞ்சிக்குடி. தேவார மனன இசைப் போட்டியும் பேச்சுப் போட்டியும் நடைபெறும் திகதி 20-4-65. இடம்: விக்கினேஸ்வரர் ஆலயம் களுவாஞ்சிகுடி.


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

### உங்களுக்கு வேண்டிய காரணங்கள் இருக்கின்றதா என்று பாருங்கள்!

எந்தவகையான காரணத்தாலும் மனவேதனை, தொல்லை, துக்கம், துன்பம் இருப்பின், அந்த ரகசியப் பிரச்சினை வெளியிடப்படாது தீர்த்துக் கொடுக்கப்படும். மனைவி—கணவன் பேதம், வழக்கு விவகாரம், பகைவர் தொல்லை, நிந்தனை, பழி, விரும்பியவர்களை அடைதல், தேவையற்றவர்களை விலக்கிவிடல், காதல், அன்பை நிலை நிறுத்தல், பிழை செய்துவிட்டுத் தப்பிவிடப் பார்ப்பவர்கள் அல்லது எந்த வகையான கொடூரமானவர்களையும் அடக்கி வைக்க, வயது கூடி வியாகமின்றி, விவாக சம்பந்தங்கள் முறிந்து போகிறவர்களுக்கு சந்தோஷமான திருமணம் நடைபெற, பட்டம், பதவி, உத்தியோகம், வியாபாரம் அபிவிருத்தியாவதற்கு, ரகசிய நோய்கள், பெண்களின் உடல் இளைத்தல், வேறு தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவொரு சிக்கலையும் குப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும், மைவெளிச்சத்தின் மூலமாகவும், மாந்திரிகத்தின் மூலமாகவும் தீர்த்துக் கொடுக்கப்படும். உண்மையாக யாவற்றையும் எழுதுங்கள் அல்லது நேரடியாக வந்து கூறுங்கள். ஞாயிறு, திங்கள் கம்பளையிலும், செவ்வாய் முதல் சனி வரை 103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானையிலும் சந்திக்க முடியும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பீ. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா,

அருத எண்ணெய் மருந்துச்சாலை,

**கம்பளை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைப்புலோலி பெற்றெடுத்த மேலோன்

# ஈழத்தின் புகழை தமிழகத்தில் நிலை நிறுத்திய நாவலன்

## திரு. வி. காவின் பேராசான்

## சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை

செந்தமிழ் பேசும் சிறப்பான வட-இலங்கை ஆங்கு செல்லரித்துச் சிதைந்த ஏடுகளைச் செப்பனிட்ட சி. வை. தாமோதரம் பிள்ளை பணியும், தொன்மை வாய்ந்த இலக்கண இலக்கியங்களுக்கு புது மெருகிட்டு உரை தந்த ம: வித்துவான் கணேசையர் பணியும், ஒப்பிலக்கண ஆராய்ச்சிக்கெல்லாம் வழிகாட்டியான சுவாமி ஞானப்பிரகாசர் பணியும், தமிழரின் பழைய வரலாற்றை எம்முன் நிறுத்திய கனகசபைப்பிள்ளையின் பணியும், ஆறுமுகநாவலர் பணியையும் நினைத்து எம்மால் பெருமைப் படாமல் இருக்க முடியாது.

இவர்களுடன் மேலைப்புலோலி தந்த நாவலர் சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளையும் சேர்க்கப்பட வேண்டியவரே.

### தோற்றம்

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி நாகப்பபிள்ளை யென்பவருக்கும் சிவகாமி அன்னைக்கும் பிரசோபத்தியாண்டு மார்கழி மாதம் 3ம் நாள் பெருமகனாகத் தோன்றினார் நாவலர் சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை. இளமைப் பருவம் முதற்கொண்டு நுணுகி ஆராயும் திறம் பெற்றார். மேலைப்புலோலியிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்றார். பின்னர் குடும்பத்தை நலிவித்த நல்குரவு காரணமாக இளைஞர் கதிரவேற்பிள்ளையின் கல்வி தடைப்பட்டது. பொருள் வருவாய் காரணமாக நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளையவர்களிடம் எழுதுவினைஞராக அமர்ந்தார். சிறுகாலம் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

திறமையும் கூர்மையறிவும் கொண்ட கதிரவேற்பிள்ளை, அறிவை விருத்தி செய்யும் நோக்கமாகத் தமிழ் நாடு சென்றார். அங்கு நா கனகசுந்தரம்பிள்ளையிடம் தொல்காப்பியம் முதற்கொண்டு பல இலக்கண இலக்கியங்களை ஐயமறக்கற்றுத் தேர்ந்தார்.

### நூல்கள்

சிவசேஷ்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதேசிப் புராண அரும்பத உரை, திரு. ஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராண வசனம் ஆகிய நூல்களை அன்னாரைச் சைவ உலகம் நன்கறியச் செய்தன. சென்னையைச் சேர்ந்த புரசைவாக்கம் சித்தாதிரிப் பேட்டை, இராயப்பேட்டை, திருமயிலை முதலிய இடங்களில் பிரசங்கங்கள் நடைபெற்றன. சென்னைக் கந்தசாமி கோயில் வசந்த மண்டபத்தில் ஞாயிறு தோறும் தணிகைப் புராணமும், அக்கால பரமேஸ்வரி கோயிலில் கந்த புராண விளக்கமும் இடம் பெறும். 1897ம் ஆண்டு மயிலாப்பூரிலுள்ள செந்தோம் உயர்நிலைக் கல்லூரியிலும், 1898ம் ஆண்டு வேப்பேரி உயர்நிலைக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். தமிழ்ச் சுவையை மாணவருக்குத் திரட்டியூட்டினார்.

இவர் அடிமை வாழ்வு வாழ விரும்பவில்லை, தனது ஆசிரியத் தொழிலை விட்டு உரையெழுதுவதிலும், ஆராய்ச்சி செய்வதிலும், பதிப்பித்தலிலும், கவனம் செலுத்தினார். இவருடைய

யான் என்று பலரும் கூறியுள்ளார்கள். நாவலர் கதிரவேற்பிள்ளை அவர்கள் கூறுவதையே பல பெரியார்கள் உலக நடையுடன் ஒத்துவருகின்றது என்றும் விரும்புகிறார்கள்.

1904-ம் ஆண்டு சென்னைக் கோட்டில் இராமலிங்க சுவாமிகளின் தமயன் மகன் இவர்மேல் ஒரு வழக்குத் தொடர்ந்தார். காரணம்

### செல்வி சிவநேசம் கந்தசாமி

உரைகள மிகவும் தெளிவாகவும், உலக நடையுடன் ஒத்துவரக் கூடியதாகவும் இருக்கின்றது.

### உரை விளக்கம்

நைடதத்து அன்னத்தைக் கண்ணுற்ற படலத்து "அணங்கினுக் கணங்கு செய்யுமணிகினர் அஞ்சிலோதி" என்னும் பன்னிரண்டாம் செய்யுள் உரையில் "அஞ்சிலோதி" என்பதற்கு அழகிய பொன்வட்டத் தகட்டினையுடைய கூந்தல் என்று உரை எழுதியுள்ளார் சங்க இலக்கியங்களில் இதே தொடருக்கு இலவாகிய கூந்தலையுடை

இராமலிங்க சுவாமிகளது பாடல் அருட்பா அன்று மருட்பா என்றே இவர் எழுதியமையாகும்.

இதன் காரணமாகப் பிள்ளை அவர்களுக்குப் பல எதிரிகள் தோன்றிவிட்டார்கள். பிள்ளையவர்களிடம் வாதிட்டு வெற்றிகாணமாட்டாத திறமையற்ற சிலர் கதிரைவேற்பிள்ளைக்கு கடைசிக்கடன் செய்வதாக ஓர் பத்திரிகையில் எழுதி வெளியிட்டார்கள். இவற்றைக் கண்ணுற்றவர்கள் பிள்ளையவர்களிடம் சென்று தெரிவித்தார்கள். பிள்ளையவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? தகப்பன் இறந்தால் பிள்ளைகள் தகப்பனுக்கு கருமாதி செய்வது வழக்கம். எனக்குக் கருமாதி செய்கின்றவர்கள் என் பிள்ளைகளாகத்தானே இருக்கவேண்டும் என்று கூறினாராம்.

தமிழகத்து அறிவொளியைப் பரப்புகின்ற ஞானசூரியனை, தன்னேரில்லாப் புகழுடன் வளருகின்ற சதாவதானியைக் காணபிறந்த நாடு பெரு விருப்புக்கொண்டது. இதையறிந்த பிள்ளை அவர்கள் ஈழம் வந்தார். நாவலருக்குப்பின் நற்றமிழ் நடையில் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதே நேரத்தில் தமிழகத்து வீசிய மாயவாதம் பிறந்தகத்தும் வீசியது. அன்னார் மாயவாதிகளுடன் வாதிட்டு அவர்களைத் துரத்தி விட்டார்கள். பிள்ளை அவர்களுக்கு போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்த இஞ்சுக்கண்டனம், நாவலன், போன்ற விருதுகள் வழங்கப்பட்டன.

### சதாவதானப் போர்

மீண்டும் தமிழகம் சென்றார் அங்கு ஓர் நாள் இலக்குமி விலாச மண்டபத்தில் நாவலர் கதிரைவேற்பிள்ளை அவர்கள் சதாவதானம் செய்யப் போகின்றார்கள் என்று சைவ சித்தாந்த சபையார்களால் பத்திரிகைகளில் பரப்பப்பட்டன. பின்னர் கேட்கவா வேண்டும். மண்டபம் நிறைந்துவிட்டது. அம்மாசபைக்கு அத்தியாச்சிரம பாலசரஸ்வதி ஞானேந்தசுவாமிகள் தலைமை வகித்தார்கள். அப் பேரவையில் முத்தமிழ்க் கல்வி நிரம்பப்பெற்ற முதியோரும், ஆரியக் கலையில் வல்ல அறிஞர்களும், ஆங்கில மொழியில் வல்ல அறிஞர்களும், இன்னும் பல சான்றோர்களும் இருந்தார்கள். முதலிலே லாடசங்கிலி; கேள்விகள் சரமாரியாக வரத்

தொடங்கின. திருமயிலை வித்துவான் வெள்ளியம்பலம் உபாத்தியாயர், குமாரர் சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் கபாலிக் குளத்தில் பூச்சரஞ்சரமாய் விழச் சுட்டது என்னும் பொருளமைய கவித்துறையில் பாடுமாறு கேட்கின்றார். உடனே பிள்ளையவர்கள் 'உன்னத் துயருறும்...' என்னும் செய்யுளை மிக விரைவாகப் பாடினார்.

பின்னர் காஞ்சிபுரம் முருகேசு முதலியார், முருகர்க்கும், வைவீரர்க்கும், காஞ்சிக்கும், சிலேடையாய். 'மூ' வென்றெடுத்து 'கு' வென முடிக்குமாறு நேரிசை வெண்பா பாடவேண்டும் என்றார். பிள்ளையவர்கள் உடனே 'மூவாத தன்மையினால்' என்று தொடங்கி பிழையற வெண்பாவை பாடி முடித்தார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பதி இராசரத்தினம் அவர்கள் சபாமண்டபப்பெருமை, மாசி கார்த்திகை யாவிற்றென்றும், பசு புல்லைத் தின்றதென்றும் சொற்பொருட் பின்வருநிலை அணியமைய 'ச' எனத்தொடங்கி 'ஏ' யென முடிக்கும் ஆசிரியப் பாடல் வேண்டும் என்றார். இவரும் 'சந்தமா இலக்குமி விலாசமென்னும்' செய்யுளைப் பாடி முடித்தார். இவ்வாறு அவதானப் பரீட்சகர்கள் வினவிய வினாக்களுக்கு அவதானச் சிங்கம் அளித்த விடைகளால் பெருமையுற்ற அப் பேரவை மனமுவந்து 'சதாவதானி'யென உளமார, வாயார வாழ்த்தினார்கள்.

இவரின் மாணவர்களில் தலைசிறந்தவர்கள் உலகநாத முதலியாரும், திரு. வி. க.வு மாவார்கள். 1907-ம் ஆண்டு தமிழன்னை கலங்க நாம் செய்த பாவத்தாலோ வஞ்சகரின் சூழ்ச்சியாலோ எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். இவ் அவலச் செய்தி கேட்ட திரு வி. க. 'மெய்யருட் பாவெங்கே...' என்னும் வெண்பாவைப் பாடினார் இவ்வாறே தமிழன்னை தவமடியைத் திருவுறச் செய்த நா. க. அவர்களின் புகழ் பல்கிப் பெருகட்டும்.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு இலவச விதை நெல்லு

## சமூக சேவை அமைச்சிடம் கா. பொ. இரத்தினம் வேண்டுகோள்

கடந்த டிசம்பர் மாதம் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடன் நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் விதை நெல்லு இலவசமாகவழங்கப்படுவதுடன், அவர்களிடமிருந்து நீர்வரி, நிலவரி அறவிடக் கூடாது என்றும் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் சமூக சேவை அமைச்சர் திரு. அசோக கருணரத்தினவிடம் ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பித்துள்ளார்.



கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய கோரப் புயலினாலும், மழையினாலும் வட-கிழக்குமாகாணங்களிலுள்ள அனேக விவசாயிகள் பெருமளவில் நஷ்டமடைந்துள்ளார்கள். சென்ற ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலின் பத்தில் ஒரு பங்கு தானும் கிடைக்கவில்லை. விவசாயிகள் இந்த ஆண்டுக்கான விதை நெல்லைக்கூட சேகரித்து வைக்க முடியாத நிலைக்குப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது வாசகர்கள் அறிந்ததே.

இப்பிரச்சினையைப் பற்றி சென்ற 7ம் திகதி காலை கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் சமூக சேவை அமைச்சர் திரு. அசோக கருணரத்தினவைச் சந்தித்து நிலைமையை நேரில் விளக்கியதுடன் ஒரு மகசரையும் சமர்ப்பித்துள்ளார். அம் மகசரில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சகல உதவிகளையும் உடன் செய்ய வேண்டுமென்றும், அவர்களுக்கு விதைநெல்லு இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்றும், அந்த நேரத்தில் நீர்வரி, நிலவரியிலிருந்து அவர்களுக்கு விதி விலக்களிக்க வேண்டுமென்றும் வேண்டியுள்ளார்.

கிளிநொச்சித் தொகுதியைச்சேர்ந்த மக்களில் எண்பது சத விகிதத்தினர் விவசாயிகளாக இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிவாரண உதவிகள் அனைத்தும் உடனடியாகக் கிளிநொச்சித் தொகுதி மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று அந்த மகசரில் மேலும் வற்புறுத்தியுள்ளார்.

கிளிநொச்சித் தொகுதிக்கான சில அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்காக திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் 6ம் 7ம் திகதிகளில் நீர்ப்பாசனப்பகுதி, பொதுவேலைத் திணைக்களப் பகுதிகளுக்கு விஜயம்செய்து மேல் அதிகாரிகளைப் பேட்டி கண்டுள்ளார். கிளிநொச்சித் தொகுதியிலுள்ள மாதேவ பாலத்தைத் திருப்புவது பற்றி பொதுவேலைத் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்தது, இந்த ஆண்டு முடிவிற்குள் அதை முடிப்பதற்கான வாக்குறுதியையும் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவது பற்றியும் சுகாதார அமைச்சின் நிரந்தரச் செயலாளரிடம் [illegible] திரு. [illegible] இரத்தினம் அவர்கள்,

### 'வள்ளுவர் பண்ணை'

'திருக்குறள் பற்றி உலகில் வெளியாகியுள்ள நூல்கள் அனைத்தையும் கொண்ட ஒரு வள்ளுவர் பண்ணையை கிளிநொச்சியில் அமைத்து அதில் சகல வகையான குடிசைக் கைத்தொழில்களையும் ஆரம்பித்து நடாத்த திட்டமிட்டுள்ளேன்' என்று கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் அவரது ஆதரவாளர்களால் கொழும்பு சிறீன் லண்ட் உணவு மனையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் விருந்து வைபவத்தில் திரு. இரத்தினத்தின் வெற்றியைப் பாராட்டி திருவாளர்கள் ஈழவேந்தன், இ. சி. சோதிநாதன், மு. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

"இற்றைவரை தமிழ்மொழியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் இப்பொழுது அப்பணியை விடுத்து தமிழ் மொழியைக் காக்கும் பணிக்கு தன்னை அர்ப்பணித்துள்ளார் என்றும் அப்பணியை குறைவின்றி நிறைவேற்றுவார்" என்றும் அன்னாரைப் பாராட்டிப் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜியும் அவர் மனைவியும் சேர்ந்து செல்வதில்லை

பொது விழாக்களாகட்டும், கோயில் திருவிழாவாகட்டும், கல்யாண வைபவங்களாகட்டும் இவை எவற்றிற்குமே சிவாஜி கணேசனும் அவர் மனைவி கமலாவும் சேர்ந்து போவதில்லை.

ஒரே இடத்துக்கு இருவரும் போக நேர்ந்தாலும் இருவரும் தனித்தனி வண்டிகளில்தான் போவார்கள்.

இத் தம்பதிகளை ஒன்றாகப் பார்க்க வேண்டும் என்று பல இரசிகர்களுக்குப் பிரியம் இருப்பதில் ஆச்சரியமில்லைத்தான். ஆனால் இதே இரசிகர்களின் இரசிப்புத் தன்மையில் ஏற்பட்ட வேகம்தான் இருவரையும் இணைந்து போகாமல் தடுத்துள்ளது.



சென்னை நகரில் சிவாஜி கணேசன் அப்போது ராயப்பேட்டையில் குடியிருந்தார். (இப்போது தியாகராய நகரில் உள்ள போக் ரோட்டில் வசிக்கிறார்) இங்கிருந்து கோடம்பாக்கத்தில் உள்ள ஸ்டூடியோக்களுக்குப் போவதானால் ஒரு 'ரயில்வே' கடவையைத் தாண்டித்தான் போக வேண்டும்.

மின்சார ரயில் வண்டி ஒவ்வொரு இரண்டு நிமிடத்துக்கும் ஓடுவதினால் இக் கடவையிலுள்ள கதவு மூடப்படுவதுண்டு. மூடப்படும் கதவருகில் சினிமா நட்சத்திரங்களைப் பார்ப்பதற்கென்றே எப்போதும் கூட்டம் கூடிநிற்பதுண்டு. தற்செயலாக ஒரு மோட்டார் வண்டி நின்று தங்கள் அபிமான நட்சத்திரங்களும் அவ்வண்டியில் இருந்துவிட்டால் இந்த இரசிகர்களின் ரகளையை வர்ணிக்கவே முடியாது.

ஒருதடவை சிவாஜி கணேசன் தனது மனைவியுடன் கோடம்பாக்கம் செல்லுகையில் ரயில்வே கதவு மூடப்பட்டு வண்டி தாமதிக்க வேண்டி ஏற்பட்டு விட்டது. இரசிகர் புடை சூழ்ந்து ஆர்ப்பாட்டம் பண்ண ஆரம்பித்து விட்டனர் சிவாஜியின் அருகில் இருப்பது எந்த நடிகை என்று இரசிகர்கள் சிவாஜியையே கேட்டுவிட்டனராம். அப்போது சிவாஜி, தன் அருகில் இருப்பது தனது மனைவி என்றே கூறினாராம்.

இரசிகர்களோ, வேறு பல நடிகைகளின் பெயர்களை யெல்லாம் கூறி, அவர்களில் இவரும் ஒருவரே என்று கூக்குரலிட்டனராம். சிவாஜி கணேசனுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வர வண்டியை விட்டிறங்கி வெளியேறி எல்லோரையும் விரட்டி விட்டு வண்டியில் ஏறினாராம்.

அதே பொழுது தனது மனைவி அழுது கொண்டிருப்பதை சிவாஜிகாணை நேரிட்டு மனம் நொந்து போனாராம். 'அவங்க என்ன பண்ணுவாங்க? பலர் அந்த மாதிரி நடந்துக்கிறாங்க' என்று சமாதானப் படுத்திவிட்டு அன்றிலிருந்து ஒரே வண்டியில் இருவரும் போவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டனராம்.

**நமது நிருபர்**

## புத்தமும்-அன்பும்

பதுளை விபர்ட்டி படமாளிகையில் 'புத்தமும்-அன்பும்' என்ற தமிழ் நாடகத்தைச் சிறந்த முறையில் பதுளைச் சரசுவதி மாவித்தியாசாலை நாடக மன்றம் நடத்தியது.

இலங்கைச் சரித்திரத்தையும், புத்த அன்பு மதத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது புத்தமும்-அன்பும். அசோகன் போரினால் மனமாற்றமடைந்து, அரச குடும்பமே புத்த மதத்தை ஏற்றுக் கொண்டது. மகிந்தனும், சங்கமித்திரையும் இலங்கைக்கு வந்து திசனையும், அவனது நாட்டு மக்களையும் அன்பு மதத்தில் சேர்க்கின்றனர் அநுரதபுரியில் போதி மரக்கிளை நாட்டப்படுகின்றது. இதுதான் கதையின் சாரம்.

கதையில் வந்த பாத்திரங்கள் யாவுமே போற்றக் கூடியதாயிருந்தது. அசோகனாக நடித்த சிதம்பரத்தின் நடிப்பும், பேச்சும் நன்றாயிருந்தன. இராணியாக நடித்த விஜயாவின் பாத்திரத்தைப் புகழாதோர் இல்லை. நடிப்பு, பாட்டு, நடனம் எல்லாம் பொதுமக்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. இலங்கை மன்னன் தீசனாக நடித்த காந்தியும், இலங்கை இராணியாக நடித்த மீனாவும் போற்றத்தக்க முறையில் நடித்தனர்.

புத்த குருவாக நடித்த சிவரெட்ணமும் நன்றாகவே நடித்தார். நாடகத்தில் தோன்றிய மற்றப் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் புகழக் கூடியதாகவே இருந்தன.

பதுளையில் நடைபெற்ற கல்லூரி நாடகங்களில் இந் நாடகம் மக்கள் மத்தியில் சிறப்பான பெயர் பெற்றதெனலாம்.

—இ. புஷ்பராணி

---

மாலை தொடுக்கவா?

"பூத்திருக்கும் விழி எடுத்து மாலை தொடுக்கவா? புன்னகையில் சென்டமைத்து கையில் கொடுக்கவா?" என்று சுசீலா பாட "மாங்கனியில் தீஞ்சுவையை இதழ் இரண்டில் தரலாமா? மாதுளையைப் பிழிந்தெடுத்தே காதலை அளந்து தரலாமா?" என்று பி. பி. சீனிவாஸ் பாடினர். இந்தப் பாட்டு தனலட்சுமி தியேட்டர்சின "கல்யாண மண்டபம்" என்ற படத்துக்காக சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் டி. எஸ். ரெங்கசாமியால் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இந்தப் பாட்டை புதுப்பாட்டுக்காரர் தென்னூர் தர்மராஜன் எழுதி உள்ளார். பி. பார்த்தசாரதி இசை அமைக்க மாரா டைரக்டு செய்கிறார்.

## இசை விழா

இலங்கை தியாகராச கான சமாசத்தினரின் தியாகராசர் விழா இத் திங்கள் 14-ம் நாள் முதல் 18-ம் நாள் வரை வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர் கோவில் மண்டபத்தில் நடைபெறும். விழா தினமும் பிற்பகல் ஐந்து மணி முதல் இரவு 10-30 மணி வரை நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சியில் திரு. பி. சண்முகசுந்தரம் குழுவினர், ராதா-ஜெயலட்சுமி குழுவினர், பி. இராமசுவாமி ஐயர், எம் எஸ். மகராசன், திருமதி பரமேஸ்வரி விசயரத்தினம், திருமதி மனோ ரஞ்சிதம் லோகேஸ்வரம், ஏ. எஸ். நாராயணன் ஆகிய கலைஞர்களின் கச்சேரிகள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திரு. கே. பி. இராசமாணிக்கம் குழுவினர், சீதா—சரஸ்வதி குழுவினர், கமலாகரகர ஐயர்—பகவதி ரங்கராசன் குழுவினர், நீலா ராமசுவாமி-லட்சுமி மாத்ருபூதம் குழுவினர், அம்பிகா தாமோதரம்-ஞான சிவசுப்பிரமணியம் குழுவினர், தனலட்சுமி விசுவலிங்கம், திரு. பரம் தில்லைராசா ஆகிய கலைஞர்களின் கச்சேரிகள் இடம் பெறும்.

மூன்றும் நாள் நிகழ்ச்சியில் திரு. ரா. சுப்பையா, பி. வெள்ளைசாமி, திருமதி சத்தியபாமா ராசலிங்கம், திரு. கே ஏ தர்மசிறி பெரேரா, திருமதி விசயலட்சுமி சண்முகம்பிள்ளை. திரு. எம் ஆர். கோவிந்தராசன், செல்வி உருத்திரமணி நல்லைநாதன், திரு ராம் குமாரசாமி ஆகிய கலைஞர்களின் கச்சேரிகள் இடம்பெறும்.

நான்காம் நாள் நிகழ்ச்சியில் திரு. வி. கந்தசாமி குழுவினர், செல்வி சிதாமணி, செல்வன் சுந்தரராசன் இரத்தினசபாபதி, செல்வி தனலட்சுமி இராமச்சந்திரா, திரு. எம். எஸ். தங்கவேலு, திரு. ஈ. சுப்பையா, செல்வி ராசலட்சுமி ஜெகநாதன், திரு. டி. எஸ் மணி பாகவதர். திருமதி பத்மநாதன், திரு டி. வி. ஜேசுதாசன், மகாராசபுரம் வி. சந்தானம் ஆகிய கலைஞர்களின் கச்சேரிகள் இடம்பெறும்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் மணி பாகவதர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி பட்டம் வழங்குவார்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் திருவாளர்கள் மணி ஐயர், குமாரசாமி, பிச்சையப்பா, சங்கரலிங்கம், ஜேசுதாசன், சிவஞானம், சண்முகம்பிள்ளை, இரத்தினம், சந்தானக் கிருஷ்ணன், கணேசசர்மா, சந்திரசேகரன், பிரசுநாதன், தேசதுரை தியாகராசன், மோகன் சேவியர், தியாகராசன், கண்ணன், மோகன், தமிழ்நாதன் ஆகியோர் பக்கவாத்தியங்கள் வாசிப்பார்கள்.

---

## விஜயாவின் அடுத்த படம்.

'எங்க வீட்டு மாப்பிள்ளை' யை பலவர்ணத்தில் தயாரித்து வெற்றிகரமாக ஓட விட்ட விஜயா கம்பைன்சார் அடுத்தும் துரித காலத்தில் ஒரு நகைச்சுவை படத்தைத் தயாரிக்க மும்முரமான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

இப்படத்தில் நாகேஷ் பிரதான பாகத்தில் தோன்றுவார் எனத் தெரிகிறது. ராதா, தங்கவேல் முதலானோரும் இப்படத்தில் நடிப்பார்களாம். ஏ. டி. கிருஷ்ணசாமி டைரக்ஷன் பொறுப்பை ஏற்கவிருக்கிறார்.

## தடுமாறிய திருநீலகண்டர்

வழிமேல் விழிவைத்து வாயிலிலே தனக்காகக் காத்து நிற்கும் மனைவியைக் காண்கிறார் திருநீலகண்டர். அன்று அவர் ஆலயம் சென்று திரும்பவே வெகு நேரமாகிவிட்டது. அதற்குக் காரணம் யார் தெரியுமா? ஆலயத்தில் ஆண்டவன் முன்னால் ஆடிய அந்தத் தாசிதான்.

மனைவியைக் கண்டதும் அன்று ஆடிய தாசியை எண்ணுகிறார் அவர். மனைவி அவருடைய கண்களுக்கு அந்தத் தாசியின் உருவைப் பெறுகிறாள்.

'அடி மேல் அடி எடுத்து
அல்லிப் பூங்கொடி
எடுத்து
இடையால் பண்ட எடுத்த
இளமையைக் கண்டேன்
—கரம்
எல்லாம் திரண்டு வந்த
பதுமையைக் கண்டேன்'

என்று திருநீலகண்டர் பாடுகிறார்.

இக் கட்டம் ஆர். எம். ஜி. பிக்சர்சுக்காக கோல்டன் ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. திரு நீலகண்டராக டி. எம். சௌந்தரராஜன் நடித்தார் அவருடன் கே. ஆர். விஜயா, நாகேஷ் குமாரி 'சச்சு' முதலியோர் நடித்துவருகின்றனர்.

இப்படத்தின் கதை வசனத்தை எழுதிய ஏ. டி. கிருஷ்ணசாமியே டைரக்டராகவும் பணிபுரிகிறார்.

---

## ஆர். ஆரின் புதிய படம்

ஆர். ஆர். பிக்சர்ஸ் தங்கள் அடுத்த படத்தை ஈஸ்ட்மென் கலரில் தயாரிக்கின்றனர் கடந்த தீபாவளி தினம் இதற்கான ஆரம்பவிழா நடைபெற்றது.

எம் ஜீ. ஆர். சௌகாரி ஜானகி, சீதாஞ்சலி, முதலானோர் இவ் விழாவில் பங்கு கொண்டனர். சர்க்கஸ் குழு ஒன்றினை இப்படத்தின் கதை பின்னணியாகக் கொண்டு இருக்குமாம்.

## நடக்கவிருப்பவை

### ஒளி பிறந்தது

சுண்டிக்குளி 'பெஸ்கி' புரொடக்சன்சார் தமது முதலாவது தயாரிப்பான ஒளி பிறந்தது சமூக நாடகத்தை நவ்ரா பண்டிகைத் தினத்தன்று அரங்கேற்றுவர். இந்நாடக, கதை, வசனத்தை ஐயாயோசப் எழுதியிருக்கிறார். சுண்டிக்குளி வட்டாரத்தில் பிரபலமான நடிகர்களால் இந்நாடகம் உருவாக்கப்பட்டு வருகிறது.

---

### வாழ வந்தவள்

பாக்கியலட்சுமி கலா மன்றத்தினர் தங்கள் முதற் தயாரிப்பான 'வாழ வந்தவள்' என்னும் சமூக நாடகத்தை தயாரிக்கிறார்கள். இந்நாடகத்தில் மாதம்பைச் சகோதரிகளின் இன்னிசை சங்கீதமும், நடனமும் இடம்பெறும். கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை புரட்சிமணி ஏற்றுள்ளார்.

## நடந்தவை

### மாத்தளை இசைக்கலா மன்றம்

27-3-65ந் திகதி சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் மாத்தளை இசைக்கலா மன்றத்தினரால் மாத்தளை இந்து மாவித்தியாலயத்தில் முதலாவது இசைவிழா நடாத்தப்பட்டது.

இந்த விழா மகாவித்தியாலயத்தின் புகழே இசைவிழாவாக அமைந்திருக்கிறதென வித்தியாலய அதிபர் திரு. வி. வேலாயுதர் குறிப்பிட்டார்.

இசை வகுப்புகள் ஆரம்பிக்கப்படுமென்றும் இப்படியான இசை விழாக்கள் இசை வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்றும் சபைத் தலைவர் திரு டி. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

### 'வேட்டைக்காரன்' 'சிங்காரி'

விமர்சனம்
அடுத்த வாரம் வெளிவரும்


# எதிர்பாருங்கள்!

மலையக எழுத்தாளர்

## ஏ. வி. பி. கோமஸ்

எழுதும்

நாட்டுப் பாடல்கள் விரவிய

குறுநாவல்

## "அங்கமெல்லாம் நெறஞ்ச

மச்சான்"....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இயக்கத்தை தளரவிடக் கூடாது

## கட்டுப்பாடும் உறுதியும் என்றும் அவசியம்

### உடுப்பிட்டியில் அமிர்தலிங்கம் பேச்சு

“தமிழ் மக்களாகிய நாம் எப்போதும் விழிப்புடனிருக்க வேண்டும். “தேசிய அரசாங்கம்” என்று எண்ணி விட்டுத் தூங்கிவிட முடியாது. எதற்கும் தயாராக எமது இயக்கத்தைத் தளர விடாமல் வளர்க்க வேண்டும். கட்டுப்பாடான உறுதியான இயக்கத்தின் மூலமே நமது உரிமைகளைப் பெற முடியும். குறிப்பாக இளைஞர்கள் எந்நேரமும் ஆயத்தமாக இருக்க வேண்டும். எமது உடன்படிக்கைப்படி நமது உரிமைகளைத் தரமறுத்தால் மீண்டும் நாம் பழையபடி போராட்டப் பாதையில் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்”.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளரும் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த நெல்லியடி கொட்டாவில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:

“தமிழ் பேசுமினத்தின் உரிமைகளை விட்டுக் கொடுத்தாற்தான் ஆட்சிப் பொறுப்பை சிறப்பாக நடாத்த முடியும் என்பதைச் சிங்கள அரசியற் கட்சிகள் உணர்ந்தன. இம்முறை நடைபெற்ற தேர்தலின் போது எக்கட்சியும் வகுப்புத் துவேசத்தை பெரிதாக பிரச்சாரம் செய்யவில்லை.

“தென்னிலங்கையின்பலம் வாய்ந்த இரண்டு கட்சிகள் எமது கட்சியின் உதவியை நாடின. கடந்த காலங்களை விட இம்முறை அரசியலில் குறிப்பிடக் கூடிய சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அறுபதாம் ஆண்டிலும் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது ஐ. தே. கட்சி நமது கோரிக்கைகளை பொருட்படுத்தவில்லை. மாறுகப் பதவிகளைக் கொடுத்து ஏமாற்றப் பார்த்தனர்.

“இம்முறை பொத்தம் என்பது பேருடன் ஆட்சிபீடம் ஏறலாமென்று சுதந்திர-சமசமாச-கம்யூனிச கட்சிகள் விரும்பின. நாம் ஐ. தே. கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பொழுது ஓரளவு எமக்குத் திருப்திகரமான உடன்படிக்கை ஏற்பட்டது ஆகவே, நாம் ஐ. தே. கட்சியுடன் சேர முனைவந்தோம்.

“பாராளுமன்ற நடவடிக்கைகளின் மூலம் மட்டும் நமது இழந்த உரிமைகளைப் பெறலாம் என்று நாம் கூறவில்லை. கடந்த ஒன்பது ஆண்டுகளைவிட இம்முறை நமது பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு காணலாம் என்று நம்புகிறோம். எமது உரிமைகளை ஒரேயடியாகக் கேட்டுப் பெற்றுவிட முடியாது. இலங்கைக்குச் சுதந்திரம் படிப்படியாகக் கிடைத்தது. அதேபோலவே நமது அத்தியாவசிய உரிமைகளும் படிப்படியாக அமுல் நடத்தப்படும்.

“எம்முடன் ஐ. தே. கட்சி செய்துகொண்ட உடன்படிக்கைப்படி ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கி எமது இலட்சியங்களைப் புரிந்த ஒருவரை தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம்பெறச் செய்துள்ளோம். நமது கொள்கைகளைப் புரிந்த ஒருவர் அமைச்சரவையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே திரு. திருச்செல்வம் அவர்களை உள்ளூராட்சி



அமைச்சராகச் சிபார்சு செய்துள்ளோம்.

“மேலும் இரண்டு மூன்று அமைச்சர் பதவிகளையும் வேறு உயர் பதவிகளையும் எமக்குத் தருவதாக திரு. டட்லி கூறிய போதிலும் நாம் ஏற்க மறுத்துவிட்டோம். கண்ணீரும், இரத்தமும் சிந்தி வளர்ந்த நாம் அப்பதவிகளை ஏற்க மறுத்துவிட்டோம். சிலர் சில பதவிகளை வாய்விட்டுக் கேட்டும் பெற முடியவில்லை என்பது யாவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதாகும்.”

சண்டிலிப்பாய் கொட்டாதோட்ட மைதானத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியதாவது:

“தென்னிலங்கையில் விசமத்தனமான தீவிர வகுப்புவாதப் பிரச்சாரத்தில் இறங்கியிருக்கும் சமசமாச—சுதந்திர—கம்யூனிச கட்சிகளுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் வகுப்புவாத தமிழ் விரோத கூச்சலுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். தேர்தற் காலத்தில் சற்று ஒதுங்கியிருந்த வகுப்புவாதப் பூதத்தை தோல்வியைக் கண்டதும் அம்பலத்திற்கு இழுத்து வராதீர்கள். அதே வேளையில் எம்மால் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையையும் தேவையற்ற வகையில் திரிக்க வேண்டாம்.

“1960-ம் ஆண்டு தொடக்கம் சிங்களக் கட்சிகள் எம்முடன் சரியான முறையில் தொடர்பு கொள்வதன் மூலம்தான் நிலையான அரசாங்கத்தை அமைக்கலாம் என்பதை கடந்த காலத் தேர்தல்கள் மூலம் நன்கு தெளிவு படுத்தியுள்ளோம்.

“நாம் தேர்தல் காலத்தில் பொதுமக்களுக்குக் கூறி வந்தது போல் தென்னிலங்கைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

“ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் எந்தவொரு கட்சியும் நமது உதவியைக் கட்டாயம் நாடும் என்று கூறி வந்தோம்; எமது உரிமைகளில் கூடிய பங்கை யார் கொடுக்க முன் வருவார்களோ அவர்களுக்கு எமது ஆதரவைக் கொடுப்போம் என்றோம்; அதே போன்று எமது கோரிக்கைகளை, எம்மை நாடிய இரண்டு கட்சிகளுக்கும் சமர்ப்பித்தோம்.

“இரண்டு கட்சியினரிலும் ஐ. தே கட்சியினர் கூடிய உரிமைகளைக் கொடுக்க ஒப்பந்தம் செய்துகொண்டனர். எனவேதான் நாம் தேசிய அரசாங்கத்தை அமைக்க ஒப்புக்கொண்டோம். எமது உதவி கிடைக்கும் எனக் கடைசிவரையும் காத்திருந்துவிட்டுத்தான் திருமதி பண்டாரநாயக்கா தமது பதவியை விட்டுவிலகினார்.

“எமது உரிமைகளைப் பெறுவதற்கு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் வீண் வகுப்புத் துவேசங்களை உண்டுபண்ண வேண்டாம் என்றும், 1958ம் ஆண்டுச் சம்பவம் போல் ஒன்றை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் முனைய வேண்டாம் என்றும் சமசமாச-சுதந்திர-கம்யூனிசக் கட்சியினரை கேட்டுக் கொள்கிறேன்.”

## நேர்தல் தந்திரங்கள்

பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் பலர் கொடுத்த வாக்குறுதிகளை அசை போட்டால், இன்று அவர்களுக்கே அதிர்ச்சியாகவிருக்கும். வாக்குகளைப் பெறுவதற்காக ‘மலையை வில்லாக வளைப்பேன், கல்லைக் கனியாகத் திரிப்பேன்’ என்று வேட்பாளர்களிற் பலர் கூறியிருக்கிறார்கள்.

இப்படிப் பொறுப்பற்ற முறையில் வாக்குறுதிகளை அள்ளி வீசியவர்கள் இறுதியில் தோல்வியையே அணைத்துள்ளார்கள். உடுவில் தொகுதியில் போட்டியிட்ட சுதந்திர—சமசமாச வேட்பாளரான திரு. நாகலிங்கம் ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தலைவராகவிருக்கும் சுன்னாகம்பட்டினசபைஎல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் புதிய வீதிகளை அமைத்துத் தருவதாகவும், இருக்கும் வீதிகளைத் திருத்தித் தருவதாகவும் கூறினாராம்.

சுன்னாகம் பட்டினசபை எல்லைக்கு அப்பாற்பட்ட ‘தெனிப் புளியடி’ என்ற இடத்தில் ஒரு புதியவீதியை பட்டினசபை மூலம் போட்டுத் தருவதாக அப்பகுதி மக்களுக்கு இவர் வாக்குறுதி கொடுத்தாராம். அவரின் வாக்குறுதியை அப்பகுதியில் வாழ்ந்த எவரும் நம்ப மறுத்து விட்டதுடன், ‘பட்டின சபைத் தலைவருக்கு எல்லைகள் தெரியவில்லை’ என்றும் கூறினார்களாம்.

வேறு சில வேட்பாளர்கள் வாலிபர்களைக் காணும் போது அவர்களுக்கு வேலை தேடித் தருவதாகக் கூறினார்களாம். ஆனால், இப்படிக் கூறியவர்களில் பலர் தோற்று விட்டமையினால் பிரச்சினைகளிலிருந்து தப்பிக் கொண்டார்கள்.

# இலங்கையின் புதிய நம்பிக்கை

## தினமணி தலையங்கம்

தேர்தலில் தோல்வியுற்ற திருமதி பண்டாரநாயக்காவின் கட்சியும், பேராசையால் பெரு நஷ்டமடைந்த மார்க்சிய சந்தர்ப்பவாதிகளும் செய்கின்ற விசமப் பிரச்சாரத்திற்கு இடம் கொடுக்காது நடந்தால் நியாயவுணர்வு படைத்த சிங்களவர்களதும், எல்லாவகைத் தமிழர்களதும் ஆதரவு தேசிய அரசாங்கத்திற்குக் கிடைக்குமென்ற கருத்துப்பட சென்னையிலிருந்து வெளியாகும்பிரபல தமிழ்த் தினசரியான தினமணி ஏப்ரல் 4-ம் திகதி இதழில் ஒரு ஆசிரியத் தலையங்கம் எழுதியுள்ளது.

‘இலங்கையின் புதிய நம்பிக்கை’ என்ற தலைப்பில் எழுதிய அத் தலையங்கத்தின் விபரம் வருமாறு:

திரு. டட்லி சேனநாயக இலங்கையின் பிரதமராகப் பதவியேற்றிருப்பது யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு மட்டுமின்றி, மலைத் தோட்டங்களிலும் பிற துறைகளிலும் பணி புரியும் இந்திய வமிசா வளியினருக்கும் புதிய நம்பிக்கையை அளித்துள்ளது. அரசாங்கப் பணிகளில் தமிழ் மொழியின் நியாயமான உபயோகத்தை அனுமதிப்பதாக அவர் வாக்களித்துள்ளார். இலங்கையில் வசிக்கும் எல்லோருக்கும் சம நியாயம் கிடைக்கும் என்று அவர் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். இப்பொழுது இவ்விரண்டையும் இன்னும் தெளிவாக, விரிவாக விளக்கிக்கூற அவரால் இயலாமல் இருக்கலாம். ஆனால் அவர் வெற்றியடைந்திருக்கும் சூழ்நிலை, நியாயவுணர்வு வளருவதற்குத் துணைபுரியும் என்றே தோன்றுகிறது.

### பிரதமர்கள் சந்திப்பு

யூன் மாதத்தில் காமன்வெல்த் பிரதமர்கள் கூடிப் பேசவிருக்கிறார்கள். அதற்குப் பொருமுன்னரே திரு. லால்பகதூரைச் சந்தித்துப் பேச திரு. டட்லி சேனநாயக விரும்புவதாகத் தெரிகிறது. அப்படிச் சந்திக்கையில் இலங்கை வாழ் இந்திய வமிசாவளியினரைப் பற்றிய சென்ற வருசத்து உடன்பாடு நிச்சயமாகப் பரிசீலனைக்கு வரும். அந்த உடன்பாட்டின் உள்ளடக்கம், அதனால் பாதிக்கப்படுவோருக்கு உகப்பாக இல்லை. தமது விருப்பங்களைக் கலந்தாலோசியாமல், அவற்றை அடியோடு புறக்கணித்து விட்டு, இரு சர்க்கார்களும் உடன்பாடு கண்டது நியாயமாகாது என்று அவர்கள் குறைப்படுகின்றனர்.

### மறு பரிசீலனை

[illegible] லாது. இத்தகைய உடன்படிக்கை சுமுகமாக அமுலாக வேண்டுமாயின், இரு சர்க்கார்களும் இணக்கமாக ஒத்துழைத்தால் மட்டும் போதாது. பாதிக்கப்படுகின்றவர்களும் அதில் அக்கறையுள்ளவர்களாக இருக்கச் செய்வது மிக மிக அவசியம். சென்ற வருட உடன்பாட்டின்போது, அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு முன் வராதது ஒரு அடிப்படையான குறை. அதை நிறை செய்வதற்கு இப்பொழுது ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

### மார்க்சிய வாதிகளின் பிரச்சாரம்

திரு. டட்லி சர்க்காரிடம் இலங்கை வாழ் இந்தியர் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தமது ஸ்தாபனங்களை அவர் விரைவில் கலந்தாலோசிப்பார் என்று அவர்கள் எதிர்பார்ப்பர். அத்தகைய கருத்துப் பரிமாற்றம் பயனுள்ளதாக இருக்கச் செய்வது முதன்மையானது. இலங்கையிலுள்ள நமது தூதர் இதற்குத் துணை புரியக்கூடும். இத்தகைய ஆலோசனைகள் நடைபெற்று எல்லோருக்கும் இசைவுள்ளதாக உடன்பாடு திருத்தியமைக்கப்பட்டால், இலங்கையின் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையக்கூடும். அதற்கான முயற்சிகளை பிரத்தியட்ச உணர்வுடன் எந்த சர்க்காரும் மேற்கொள்ளத் தான் வேண்டும்.

தேர்தலில் தோல்வியுற்ற திருமதி பண்டாரநாயக்காவின் கட்சியும், பேராசையால் பெரு நஷ்டமடைந்த மார்க்சிய சந்தர்ப்பவாதிகளும் செய்கின்ற விசமப் பிரச்சாரமானது. தமது தியாயவுணர்வை பாதிக்கும்படி திரு. சேனநாயக்கா அனுமதிக்க மாட்டார் என்று நம்புகிறோம்.

### அவதூறுக்கு செவி சாய்க்காதீர்

தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் ஆசாபங்கத்தையும் தோற்றவர்களால்பொறுக்க முடியவில்லை. எனவேமொழியின் பெயராலும், இனத்தின் பெயராலும், சேனநாயக்கா சர்க்காருக்கு எதிராக துவேசத்தைப் பரப்புவதற்கு அவர்கள்தொடங்கி விட்டார்கள். திரு. டட்லி தமிழ் விசயத்தில் பொடரல் கட்சிக்கும், டில்லி உடன்பாட்டின் அமுல் விசயமாக இலங்கை வாழ் இந்திய வமிசா வளியினருக்கும் பணிந்து விட்டார் என்ற பொய்ப் பிரசாரம் ஏற்கனவே மும்முரமாக நடக்கிறது குழப்பத்தையும், கலக மனப்பான்மையையும் வளர்த்து, சனநாயகமுறைப்படி அமைந்துள்ள திரு. டட்லி சர்க்காரை கவிழ்த்து விட அவர்கள் விரும்புகின்றனர் என்பது கண்கூடு. இதற்கெல்லாம் அவர் அசையக் கூடியவர் அல்ல. அவதூறுகளைப் பொருட்படுத்தாமல், அரசாங்கப் பொறுப்புகளை அவர் உறுதியுடன் செலுத்த ஆரம்பித்தால், சிங்களவரில் பெரும்பாலோரும் எல்லா வகைத் தமிழர்களும் அவருக்கு நிச்சயமாகப் பேராதரவு தருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதுமைகள் பாரீர் பாரினிலே-(39)

—அன்ரனி பெர்னாண்டோ, கிறிலப்பனே—

## பசி போகப் பசும் பாலை பருகலாமே!

பசும் பாலைப் பல நாட்களுக்கு வைக்க முடியாது; அது விரைவில் பழுதடையும் குணமுடையது. பழுதான பாலிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசும். பழுதடையாமல் பல காலம் வைத்திருப்பதற்கே பாலை மாவாக்கிப் புட்டிகளில் அடைக்கிறார்கள். இது பால் மா எனப்படுகிறது. இதை நாம் சுடு நீரிலே கரைத்துக் குடிக்கிறோம்.

பசும் பால் மிகச் சுவையானது. நல்ல மணமும் குணமும் உடையது. பசும் பாலில் காணப்படும் அந்தத் தனிச்சுவையும் நறுமணமும் பால் மாவில் இருப்பதில்லை. பசும் பாலின் சுவை வேறு பால் மாவின் சுவை வேறு. ஆனால் பால் மாவைக் காற்றுப் படாமல் வைத்தால் அது வருடக் கணக்கில் பழுதடையாது கிடக்கும். எவ்வித சிரமமும் இல்லாமல் பால்மாப் புட்டியை எங்கு வேண்டுமானாலும் போட்டு வைக்கலாம். அது பழுதடையாது.

பசும் பாலைச் சில நாட்களுக்குப் பழுதடையாது வைக்க வேண்டுமானால் அதைக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டும். அதற்கு எல்லா வீடுகளிலும் குளிர்சாதனப் பெட்டி இருக்க வேண்டுமே அப்படி இருந்தாலும் பசும் பாலை அதன் மணமும் குணமும் மாறாமல் மாதக் கணக்கில் வைத்திருக்கக் குளிர்சாதனப் பெட்டியால் முடியாது. எனவே, பசும் பாலை அதன் சுவை, மணம், குணம் ஒன்றும் மாறாமல் பல மாதங்களுக்கு வைக்க ஒரு புதிய வழி இப்போது கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. ஏழு வருடகால ஆராய்ச்சிகளின் பின்னர் பிரித்தானிய அறிவர்கள் இந்த வழியைக் கண்டு பிடித்துள்ளனர்.

பசும் பால் நூறு பாகை வெப்பத்தில் இரு விநாடிகளுக்குச் சூடாக்கப்படுகிறது. பின்னர் இது குளிராக்கப்பட்டு விற்பனைக்கு ஆயத்தமாக இருக்கிறது. மிகச் சுலபமான வேலை. மிக்கலமானதும் கூட. ஆனால், ஆறு மாதங்களுக்கு மேல் கெட்டுப் போகாமல் நல்ல நிலையில் இருக்கும் இந்தப் பசும் பால். குளிர்சாதனப் பெட்டியோ வேறெந்த வகையான பெட்டிகளோ இல்லாமல் இந்தப் பாலைச் சும்மா வைக்கலாம், மணம் குணம் ஒன்றும் மாறாமல் அப்படியே இருக்கும்.

இங்கிலாந்தில் உள்ள நிறுவனமொன்று இப்போது இந்தப் பாலைப் பெருமளவில் தயாரிக்கிறது. அதிவிரைவில் உலகம் முழுவதிலும் விற்பனைக்கு வந்துவிடும். விரும்பும் போதெல்லாம் ஆசை தீரமட்டும் பசும் பாலைக் குடித்து மகிழும் வாய்ப்பு அப்போது அனைவருக்கும் கிட்டிவிடும் அன்றோ?

# வருசமே வருக!

—செ. குணரத்தினம்—

சித்திரை வருசமே! வா வா—எங்கள்
சிந்தை மகிழ்ந்திட வா வா!
இத்தரை மீதிலே எங்கும் —நல்ல
இன்பம் பெருகிட வா வா!

கல்வி வளர்ந்திட வா வா—பல
கலைகள் பிறந்திட வா வா!
எல்லோரும் ஒன்றாக இங்கு—வாழ
எழுந்து, நடந்து நீ வா வா!

நாட்டில் அடிமைகள் இன்றி—தமிழ்
நான்கு திசையிலும் வாழ,
போட்டி, பொறாமையைப் போக்கி—ஒரு
புதுவாழ்வை அமைத்திட வா வா!

எத்தனை காலந்தான் இன்னும்—நாங்கள்
இடர்பட்டு வாழ்வது இங்கு
புத்தாண்டே! புதுவொளிகாட்டி—இந்த
பூமி செழித்திட வா வா!

பட்டான சட்டைகள் போட்டோம்—நல்ல
பலகாரம்; பட்டாசு சுட்டோம்
கட்டான உடமேனி காட்டி—எங்கள்
கண்ணெதிர் ஓடி நீ வா வா!

# புதிருக்கு விடை

சுதந்திரன் 21-2-65ம் திகதி இதழில் கல்முனை மருமகன் முகில்வண்ணன் ஒரு புதிருக்கு விடை கேட்டிருந்தான். அப்புதிருக்கான விடை 'செல்வந்தரின் மகன் பெப்ருவரி 29ம் திகதி பிறந்தான்' என்பதாகும். மருமக்களிற் பலர் புதிரைச் சரியாகப் படித்துப் பார்க்காது, 'செல்வந்தரின் மகன் இறந்துவிட்டான்' என்றும், 'செல்வந்தருக்குப் பிள்ளை பிறக்கவில்லை' என்றும் எழுதியிருந்தார்கள். புதிருக்குப் பதில் எழுதும்பொழுது கேள்வியை நன்கு படித்துப் பதில் எழுதப் பழகவேண்டும்.

முகில்வண்ணனின் புதிருக்கு சரியான விடை அனுப்பிய மருமக்களின் பெயர் வருமாறு:

1. நா. சிவேந்திரன், நுகேகொடை.
2. இ. நா. தியாகராசா, கொழும்பு-6.
3. அக்கரையூர் ஆதம், அக்கரைப்பற்று.
4. மணிமாறன், ஆன்க்கருஞெயா.
5. ம. ஜெயரஞ்சன், பருத்தித்துறை.
6. எச். எம். எல். எம். மிசாலின், கெளி ஓயா.
7. எஸ். வி. பொன்கலம், காரைவெட்டி.
8. ஜெயராணி சபா, மல்லாகம்.
9. கு. ச. சேயோன், அல்வாய்.
10. க. ஞா. அகஸ்தீன், கந்தகோவளம்.
11. எஸ். இரத்தினம், திருகோணமலை.
12. செ. இ. பெனடிகற், இளவாலை.
13. செ. பசீர், இராமநாதபுரம்.
14. வே. வவ. தெய்வநாயகம், அக்கரைப்பற்று.
15. இ. சந்தசுவாமி, அச்சுவேலி.
16. உ. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.
17. சா. கணபதிப்பிள்ளை, காரைதீவு.
18. வி. இன்னாசிமுத்து, வேலணை.
19. எஸ். சிறிகாந்தன், புத்தளம்.
20. ச. ஞானநாயகி, மண்டூர்.
21. நா. கந்தசாமி, மாங்குளம்.
22. செல்வி ஜே. திசை வீரசிங்கி, களனி.
23. சி. யோகேஸ்வரி, மூளாய்.
24. செல்வி மணிமொழி, வேலணை.
25. அ. கார்த்திகைக் குமரன், கிரிமலை.
26. அ. சே. மரியநாயகம், பண்டத்தரிப்பு.

? ஆறுகால் ????? ?




"மருந்து உடனே வேலை செய்ய ஆரம்பித்து விட்டது...இனி இரவைக்குத்தான் கண்ணைத் திறப்பான்..." என்று கூறி வெடிச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு குகையின் வடபுறத்திலுள்ள சமையற் பகுதியுள் சென்று மறைந்தான் அந்த முரட்டு மனிதன் சிறிது நேரத்தில்...!

குகன் மெதுவாக எழுந்து அடிமேல் அடிவைத்துச் சென்று ஒருபக்கத்தில் தென்பட்ட பெட்டியொன்றைத் திறந்து சில கடிதங்களையும், போலி நூறு ரூபா நோட்டுக்கள் சிலவற்றையும் எடுத்துத் தனது சட்டைப் பையிலே திணித்துக்கொண்டான். பின்பு ஓசைப் படாமல் குகைக்குவெளியேவந்து சேர்ந்தான். மறைந்திருந்து நோக்கியதில் யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு பின்னங்கால் பிடரியில் அடிபடக் கடற்கரைப் பக்கத்தை நோக்கி ஓடினான்.

சிறிதுநேர ஓட்டத்திற்குப் பின் அவனால் தொடர்ந்து ஓட முடியவில்லை. உடல் மிகவும் சோர்வாக இருந்ததால் மெதுவாக நடந்து சென்றுகொண்டிருந்தான். கடற்கரையை அடைந்ததும்... கடலை உற்று நோக்கினான். சற்றுத் தொலைவில்...இயந்திரப் படகொன்று சென்று கொண்டிருந்தது. உடனே தனது மேற்சட்டையை அகற்றி ஒரு தடியிலே கட்டி மேலும் கீழுமாக அசைத்துச் சைகை செய்தான். படகில் இருந்தவர்கள் கவனித்து விட்டார்கள் போலும். படகு கரையை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது. குகன் மகிழ்ச்சியுடன் படகைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

படகு கரையை அடைந்ததும்...! திடீரெனப் பாய்ந்து ஏறிக்கொண்டான். படகிலிருந்த இரு மீனவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்முறுவலுடன் ஏதோ கண் சாடை காட்டிக்கொண்டனர்.

மீனவர்கள் கேட்பதற்கு முன்பே தனது சோகக் கதையை விபரிக்க ஆரம்பித்துவிட்டான் குகன். உடனே...! படகு மெதுவாக நகர ஆரம்பித்துவிட்டது. அவன் கூறிக்கொண்டிருந்த கதையை அவர்கள் கவனித்ததாகவே தெரியவில்லை.

குகன் தனது கதையை முடிப்பதற்கும் படகு அத்தீவின் வேறொரு முனையை அடைவதற்கும் சரியாக இருந்தது. கதையை முடித்த குகன் மீனவர்களாக முகங்களை கூர்ந்து நோக்கினான். அவர்களின் முகங்களில் எது வித அனுதாப உணர்ச்சியும் தென்படவில்லை. அவர்களுடைய முரட்டு முகங்கள் மிகப் பயங்கரமாகக் காட்சியளித்தன.

'எங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிரு...!' என்று கரகரப்பான குரலிலே கூறிக்கொண்டு திவிரமாக நடந்து சென்றான் ஒருவன். அவனுடைய பேச்சை ஆமோதிப்பது போலத் தனது தலையைப் பலமாக அசைத்துக் கொண்டு மற்றவனும் நடக்க ஆரம்பித்தான். அவனுடைய இடுப்பில் ஒரு பெரிய வில்லுக்கத்தி தொங்கிக்கொண்டிருந்தது. அதைக் கண்டதும் குகனுக்கு உடல் நடுங்க ஆரம்பித்துவிட்டது. என்ன செய்வதென்றறியாது அவர்களைப் பின்பற்றிப் பயத்துடன் நடந்துகொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில்... அடர்ந்த காட்டின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த குடிசையொன்றை வந்தடைந்தனர். அந்தப் பெரிய குடிசையைச் சுற்றி ஆயிரக்கணக்கான மீன்களைப் பிளந்து, கருவாடாக்குவதற்காகப் பரப்பியிருந்தனர். அவற்றிலிருந்து கிளம்பிய அருவருத்த துர்நாற்றம் குகனைத் திக்குமுக்காடச் செய்தது.

குடிசையுள் பலர் பேசும் ஒலி நன்றாகக் கேட்டது மீனவனில் ஒருவன் குடிசைக் கதவில் மூன்று முறை பலமாகத் தட்டினான் அடுத்த வினாடி... கதவு திறந்துகொண்டது. உள்ளே வரும்படி தலையால் சைகை காட்டியபடி இரு மீனவர்களும் நுழைந்தனர். படபடக்கும் நெஞ்சுடன் உள்ளே நுழைந்தான் குகன். அங்கு...!

குகனைப்போன்ற வயதுடைய பத்துப் பன்னிரண்டு பையன்கள் மீன்களைப் பிளந்து உப்புப் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு எதிரில் ஒரு முரடன் கையில் சவுக்குடன் காவல் வாங்கிக்கொண்டிருந்தான். சிறுவர்கள் அத்தனைபேரும் கண்ணீர் சிந்தியபடி வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

'டேய்! நீயும் அவர்களைப் போல் வேலையில் ஈடுபடு...! இல்லாவிட்டால் தொலைத்து விடுவேன்...' என்று இரைந்து கத்தியபடி குகனின் பிடரியைப் பிடித்துத் தள்ளினான் ஒரு முரடன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது!

சிலோன் எண்டெர்டெயின்மெண்ட்ஸ் தாபனத்தாரின் புத்தாண்டுத் திரை விருந்து !

## சென்ட்ரல் (மருதானை)

தினசரி : 2, 6, 9-30 ஞாயிறு : காலை 10 மணிக்கும்

★ ஐரோப்பிய அழகு மங்கையர் பனிக்கட்டி மீது சறுக்கி விளையாடும் காட்சியும், காட்சியுடன் இணைந்த இசையும் உங்களை மெய் மறக்கச் செய்யும்!

★ கேரளாவிலுள்ள மலபார் இயற்கைக் காட்சிகளை அழகு வண்ணத்தில் கண்டு மகிழுங்கள்!



## ஈரோஸ் (பாமன்கடை)

தினசரி : 2-30, 6, 9-30 ஞாயிறு : காலை 10-30க்கும்

★ ராகினி—ஹெலன் இருவரும் ஆடும் நடனங்கள் உங்கள் உள்ளங்களை ஆட்டி வைக்கும்!

★ பயங்கர கொரில்லா 'ஒட்டாங்கோ' செய்யும் அட்டகாசங்கள் உங்களை மயிர்க் கூச்செறியச் செய்யும்!

இந்திப் படம் **சிக்காரி** ஈஸ்ட்மன் கலர்

அஜித்—ராகினி—ஹெலன்—கே. என். சிங் மற்றும் பலர்

காதலும் வீரமும் இணைந்து கண்கொள்ளா விருந்தாக அமைந்துள்ள அருமையான சித்திரம்!

குடும்பத்துடன் சென்று பார்த்து மகிழ வேண்டிய திரை ஓவியம்!



# 13-ம் திகதி செவ்வாய் முதல்!

சித்திரைப் புதுவருடம்-ஹஜ்ஜிப் பெருநாட்களை முன்னிட்டு சிலோன் தியேட்டர்ஸ் தாபனத்தார் வழங்கும் பரிசு!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்சி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)

றீகல் (நீர்கொழும்பு) நெல்சன் (திருகோணமலை) இம்பீரியல் (குருனாகல்) றீகல் (கம்பளை)

ஆகிய திரைகளில்!

சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி,
மனோகர், சாரங்கபாணி, தேவிகா, கண்ணாம்பா,
ராமசாமி, சந்தியா, தங்கவேல், மனோரமா, லட்சுமிபிரபா

நடித்த



# குலமகள் ராதை

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

எம். ஜி. ராமச்சந்திரன், சாவித்திரி,
நம்பியார், அசோகன், நாகேஷ்,
ராதா, ராஜம்மா, சின்னப்பா தேவர்
பேபி ஷகிலா, மனோரமா

தோன்றும்

தேவர் பிலிம்ஸ்



# வேட்டைக்காரன்

கிங்ஸ்லி கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கும்பனித்தெரு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) தீவொளி (நுவரெலியா) மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்) ஜூபிட்டர் (குருநாகல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.